பக்கங்கள் : முப்பது

# உதயன்



Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 23 ஞாயிற்றுக்கிழமை (05.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :70

# கிபிர், ஹெலிகள், பல்குழல் பீரங்கிகளுடன் படை வலுவை வெளிப்படுத்திய அணிவகுப்பு



கொழும்பு,பெப்.5

ஸ்ரீலங்காவின் 58ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி நேற்று இடம்பெற்ற கொண்டாட்டங்களின்போது இடம்பெற்ற அணி வகுப்புகள் நாட்டின் படை வலுவை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தன.

வழமைக்கு மாறாக இந்த முறை முப்படைகளினதும் பலத்தை - சுடுதிறனை - வெளிப்படுத்தும் வகையில் படைக்கல சாதனங்களும் துருப்புக்களும் - அணிவகுப்பை நிறைத்திருந்தன என்று அவதானிகள் குறிப்பிட்ட னர்.

2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் 'ஓயாத அலைகள்' படை நடவடிக்கை மூலம் யாழ்.நகரின் விளிம்புவரை முன்னேறிவந்த சமயம் அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்கும் நோக்குடன் அரசு அவசர அவசரமாக வெளிநாட்டில் இருந்து தருவித்த பல்குழல் எறிகணை செலுத்திகளும் (Multi-barrel Rocket Launchers) நேற்றைய சுதந்திர தின அணி வகுப்பில் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றுடன் விமானப்படை அதன் எம்.ஐ. 24 ரக தாக்குதல் ஹெலிக்கொப்டர்களையும், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட 'கிபிர்' ஜெற்

(22ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு முயற்சிக்கு சகல தரப்பினரதும் ஆதரவைக் கோருகிறார் ஜனாதிபதி!

## சுதந்திரதின உரையில் பகிரங்க வேண்டுகோள் நாடு பிளவுபடமாட்டாது எனவும் உறுதியளிப்பு




கொழும்பு,பெப்ரவரி 5

இன்னும் சிலதினங்களில் எமது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளது. நாம் ஆரம்பிக்கின்ற சமாதானச் செயற்பாடு நிச்சயமாக ஒளிவு மறைவு இல்லாத செயற்பாடாகும். நாம் தீர்வு ஒன்றையும் பலாத்காரமாகத் திணிப்பதற்கு முற்படமாட்டோம். அதேபோன்று எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைக்க எவராலும் முடியாது.

அரசியல் பேச்சு மூலம் ஏற்படுத்திக்கொள்கின்ற தீர்வு ஒன்றை நாட்டின் தேசிய கருத்தொருமைப்பாடாக உறுதிப்படுத்,திக்கொள்வதே எமது நோக்கமாகும்.

மகத்துவம்மிக்க இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சி உட்பட எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் பகிரங்கமாகவும் நேர்மையாகவும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

கொழும்பு காலிமுகத் திடலில் நேற்றுக்காலை நடைபெற்ற ஸ்ரீலங்காவின் சுதந்திரதின விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு அழைப்பு விடுத்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கதவடைப்பு!

முல்லைத்தீவு,பெப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் ஆயுத முனையில் கடத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்குமுகமாக நேற்று முல்லைத்தீவில் கதவடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வர்த்தக நிலையங்கள் மூடிக் கிடந்தன. வாகனப் போக்குவரத்தும் அரிதாகவே காணப்பட்டது. (ஐ-13-190)

## முஸ்லிம் ஆயுதக்குழுவின் துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் காயம்!

மட்டக்களப்பு,பெப்.5

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி அப்ரா நகரில் முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 வயது சிறுவனொருவன் அகப்பட்டு காயங்களுக்கு இலக்காகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப் பட்டியல் எம்.பி. பதவி; அம்பாறைக்கு வழங்க முடிவு?

### திருமலை விக்னேஸ்வரனின் பெயரும் சிபாரிசு

கிளிநொச்சி,பெப்.5

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவினால் ஏற்பட்டிருக்கும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு முன்னுரிமை அளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தீர்மானித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பதென்பது தொடர்பாக அடுத்த மூன்று தினங்களுக்குள் முடிவு செய்யப்படும் என்று சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியப் பற்றாளர்களை தேர்தலில் நிறுத்தும் சாத்தியங்கள் குறித்து ஆராய்வு

### கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

கிளிநொச்சி,பெப்.5

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை இந்த வேளையில் நடத்தவேண்டாம் என்று தமிழரசுக் கட்சி சார்பில் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னரே தேர்தலை ஒத்திவைக்க முடியும் என்ற கட்டாயம் ஏற்படுமிடத்து நிலைமைக்கு [illegible] நிலையில் வைத்திருப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்கும் இடையே நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் தேர்தல் மூலம் வெல்வதைத் தடுப்பதற்காக தமிழ்த் தேசியத்தின் மீதும், விடுதலையின் மீதும் பற்றுக் கொண்டவர்களைத் தேர்தலில் பங்குபற்றச் செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. - என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களின் படி தேர்தல் ஒன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால் அதற்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே வாக்களிப்பை

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழக வாயிலில் கறுப்புக் கொடி கட்டப்பட்டிருப்பதையும் கொடிக் கம்பத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்கும் சுலோகங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: அதிரன்)

# பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி அலுவலகங்களில் வைபவங்கள் இல்லை

### சுதந்திரதினம் குடாநாட்டில் சாதாரண நாளாகக் கழிந்தது

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கையின் 58ஆவது சுதந்திர தினத்தை யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று துக்கதினமாகக் கொண்டாடினர்.

இதனை ஒட்டி நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கூடிய மாணவர்கள் அங்குள்ள பிரதான கொடிக்கம்பத்தில் கறுப்புக் கொடியை ஏற்றினார்கள். இதன் பின்னர் பல்கலைக்கழக பிரதான வாயில் மற்றும் சுற்றாடலில் துக்கதினத்தை குறிக்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டன. சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்கும் கோஷங்கள் எழுதப்பட்ட பல்வேறு சுலோக அட்டைகளும் அங்கு தொங்க விடப்பட்டிருந்தன.

இதேவேளை -

யாழ்.செயலகத்தில் சுதந்திரதினத்தை ஒட்டி நேற்றுக்காலை தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது. இது தவிர வேறு அரச அலுவலகங்களில் கொடிகள் எதுவும் ஏற்றப்படவில்லை. சுதந்திர தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் எதுவும் அரச அலுவலகங்களில் நடைபெறவில்லை.

படையினரின் முகாம்களில் ஆங்காங்கே வைபவங்கள் நடைபெற்றபோதும் பெரிய அளவிலான நிகழ்ச்சிகள் எதனையும் இராணுவத்தினர் ஏற்பாடு செய்யவில்லை.

(ஐ-8-70-17-173)

# விசுவமடுப் பகுதியில் மினி சூறாவளி! மரங்கள் பாறின; கூரைகள் பறந்தன!!

விசுவமடு,பெப்.5

விசுவமடு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9.55 மணியளவில் மினி சூறாவளி வீசியது. இதனால் அங்கு பெருமளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

புன்னை நீராவி கிராமத்தில் பாரிய மரங்கள் பலவும் வேரோடு பாறி வீழ்ந்தன; வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

வாழைகள், தென்னை மரங்கள் கமுகு மரங்கள் உட்பட பயன்தரு மரங்கள் முறிந்தன. இதன்போது மக்களுக்கு பெரிதாக உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

வயோதிப மாது ஒருவர் காயமடைந்து தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

விசுவமடு மேற்கில் மினி சூறாவளியால் நான்கு கடைகளும் ஒரு ஐஸ்கிறீம் தொழிலகம் இரு வீடுகள் என்பனவும் முற்றாகச் சேதமடைந்தன.

இந்த மினி சூறாவளியால் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்து இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-352-402)



மினி சூறாவளியினால் கூரைகள் பறந்த நிலையில் காணப்படும் வீடு ஒன்றையும் பாறி வீழ்ந்த மரங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: விசுவமடுச் செய்தியாளர்)

# 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை இன்று வெளியாகும்

கிளிநொச்சி,பெப். 5

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் மார்கழி 2005 - தை, 2006 மாதத்திற்குரிய 128 ஆவது குரல் 'சமாதான முயற்சிக்கு இறுதிச் சந்தர்ப்பம்' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

'சமாதானத்தின் திறவுகோல் போர்நிறுத்த ஒப்பந்தமே' எனச் சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு, க.வே.பாலகுமாரன் எழுதிய 'உண்மை எப்போது சிங்களவரை விடுவிக்கும்' என்ற அரசியல் கட்டுரையும் 'எங்குபோய் முடியும் இந்தப் பேச்சு', 'நாணற்புற் சிங்கள இராஜதந்திரம் வெளிநாட்டவர்களின் காலைப் பிடிக்கும், தமிழர்களின் குடும்பியைப் பிடிக்கும்' போன்ற அரசியல் கட்டுரைகளுடன், கலாநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய 'அரச ஒடுக்குமுறையும் மக்கள் துயரமும்' என்ற கட்டுரையையும் தாங்கி வருகின்றது. (ஐ)

# வவுனியாவில் சிப்பாய் தற்கொலை!

வவுனியா,பெப்.5

வவுனியா கொக்குவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று மாலை 4.30 மணிக்கு தனக்கு தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

இராணுவ கவசவாகன 5ஆவது பிரிவை சேர்ந்த பிரேமரத்தின பண்டார என்பவரே உயிரிழந்தவராவார்.

எதற்காக இவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது தெரியவில்லை. மேலதிக விசாரணைகள் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொக்குவெளி இராணுவ பயிற்சி முகாம் வவுனியா நகரில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. (ஐ-164)

# பேச்சு முயற்சிக்கு சகல......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாடு எல்லா இனங்களுக்கும் சொந்தமானது. இந்த நாட்டைக் கூறுபோடுவதன் மூலம் இந்தப் பிணக்கைத் தீர்க்கமுடியாது. கூறு போடுவதன் மூலம் இந்தப் பிரச்சினை இன்னும் உக்கிரமடையவே செய்யும் என்று ஜனாதிபதி தமது நீண்ட உரையில் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்காவின் 58ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பமாகியது. படைக்கல சாதனங்களின் பிரமாண்டமான அணிவகுப்புகளுடன் நடைபெற்ற இந்த விழாவில் ஜனாதிபதி சுமார் 45 நிமிட நேரம் உரையாற்றினார். அவரது உரை சமகாலத்தில் தமிழிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் உரையில் முக்கிய சில பகுதிகள் வருமாறு :-

நாடு எல்லாவிதமான அடிமைத் தளைகளிலிருந்தும் விடுபட்டு சுதந்திரமான நாடாக வேண்டும். அந்த விடயங்களைக் கவனத்தில்கொள்ளும்போது நாம் தீர்த்துக்கொள்ள வேண்டிய பல சவால்கள் உள்ளன என்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதில் முதலாவது சவால் வருடக்கணக்காக வடக்கு - கிழக்கில் தீர்க்கப்படாமல் உள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வொன்றைக் கண்டு நிரந்தரமான சமாதானத்தை மலரச் செய்வதாகும். எமது பொருளாதாரத்தை பலப்படுத்தல், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல், எமது மனித வளத்துக்கு இருக்கக்கூடிய திறமைகளை மேம்படுத்தி நாட்டின் முன்னேற்றத்துக்காக அதனை முறையாக பயன்படுத்தல் போன்ற பல சவால்கள் இன்று எம்மை எதிர் நோக்கியுள்ளன. இந்த எல்லா சவால்களையும் வெற்றிகரமாக எதிர் கொண்டு நாட்டுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்கலாம் என்று நான் உறுதியாக நம்புகிறேன் ஆனாலும், அதற்கு முன் நிபந்தனை ஒன்று உண்டு. அந்த உயர்ந்த குறிக்கோளை அடைவதற்காக நாம் எல்லோரும் ஒன்று படவேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும். கடந்த காலம் பூராவும் நாட்டில் சமாதானத்தை மலரச் செய்வதற்காக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தும் உள்ளன. என்றாலும் கடந்த காலத்தைக் குறைகூறுவதில் எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. நாம் கடந்த காலத்தை மறந்துவிடவும் கூடாது. கடந்த காலங்களில் இருந்து நாம் பாடங்களைப் படிக்கவேண்டும். அதன் பிரகாரம் நாட்டின் எல்லா இன மக்களும் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும், அரச நிர்வாகத்திலும் பங்கு கொள்ளக்கூடிய அரச கட்டமைப் பொன்றை எம்மால் ஏற்படுத்தவேண்டியுள்ளது.

எல்லா இனங்களின் அபிலாஷைகளையும் கவனத்தில் கொண்டு தென்னிலங்கையில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இடையே பொதுவானதொரு கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் அங்கீகாரம் வழங்கினார்கள் அக்கருத்தை நாம் இப்போது செயற்படுத்தி வருகிறோம்.

இன்னும் சில நாள்களில் எமது அரசாங்கம் எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவுள்ளது. தென்னிலங்கையில் பேச்சுவார்த்தைகளை கட்சிகளுடன் வெவ்வேறாகவும், சர்வ கட்சி மாநாட்டின் மூலமாகவும் நாம் அண்மையில் ஆரம்பித்தோம். அவை மிகவும் வெற்றியளித்தன என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. அதன் கௌரவத்தை தனியாக அனுபவிக்கும் அளவுக்கு நான் ஓர் அரசியல் சுயநலவாதியல்ல. நிச்சயமாக அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எல்லாக் கட்சிகளுக்கும் அந்தக் கௌரவம் சமமாகப் பகிர்ந்து செல்லவேண்டும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் உட்பட தவறான வழிகாட்டல்களில் இருந்து படிக்கவேண்டிய பாடங்களைச் சரியாகப் புரிந்துகொண்டுதான் இந்த நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நாடு, இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் எல்லா இன மக்களுக்கும் சொந்தமானது. இந்த நாட்டைக் கூறுபோடுவதன் மூலம் இந்தப் பிணக்கைத் தீர்க்கமுடியாது. கூறுபோடுவதன் மூலம் பிரச்சினை இன்னும் உக்கிரமடையும் அதனால்தான் புதியதொரு இலங்கை என்ற தொனிப்பொருள் வாசகத்தை நாம் முன் வைத்தோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அது ஓர் அரசியல் தொனிப்பொருள் வாசகமாக இருந்தாலும் இன்று அது நாட்டின் தேசியத் தொனிப்பொருள் வாசகமாக மாறவேண்டும்.

எல்லாவித அடிமைத் தளைகளிலிருந்து நீங்கி புதிய சுதந்திர நாடு ஒன்றைக் கட்டி எழுப்பவேண்டுமானால் எங்களுடைய எண்ணங்களும் சிந்தனைகளும் புதியதாகவேண்டும். எமது நோக்கங்கள் புதியதாகவேண்டும். நாம் வேலை செய்யும் முறை புதியதாக வேண்டும்.

மதிப்பிற்குரிய நண்பர்களே! யுத்தத்தின் போது கூடுதலாக பெருக்கெடுத்து ஓடுகின்ற இரத்த ஆறு தடுக்கப்படவேண்டுமானால் சமாதானத்துக்காக நாம் கூடுதலாக வியர்வை சிந்தவேண்டும் என்பதை இந்த நன்நாளில் எமது உள்ளங்களில் நாம் ஆழமாக பதிய வைக்கவேண்டும்.

புதியதோர் இலங்கைக்காக நாம் ஆரம்பிக்கின்ற புதிய சமாதான செயற்பாடு நிச்சயமாக ஒளிவு மறைவு இல்லாத ஒரு செயற்பாடாகும். அதில் ஒளித்து மறைப்பதற்கு ஒன்றுமே இல்லை. நாம் தீர்வொன்றைப் பலாத்காரமாகத் திணிப்பதற்கு முற்படமாட்டோம். அதேபோன்று எம்மை அச்சுறுத்தி பயப்படுத்த எவருக்கும் முடியாது. ஆழமாகவும் அகலமாகவும் அரசியல் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்திக்கொள்கின்ற தீர்வொன்றை நாட்டின் தேசிய கருத்தொருமைப்பாடாக உறுதிப்படுத்துவதே எமது நோக்கமாகும். எனவே, மகத்துவம் மிக்க இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சி உட்பட எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் பகிரங்கமாகவும் நேர்மையாகவும் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தேசிய நிகழ்ச்சி நிரலில் எல்லா விடயங்களையும் விட 'நாடு' முதலிடத்தில் வைக்கப்படவேண்டுமாகையால் குறுகிய பேதங்களை ஒதுக்கிவைத்து அரை நூற்றாண்டு காலமாக எம்மால் தீர்த்துக்கொள்ளமுடியாமல் இருந்த இந்தப் பாரிய சவாலை வெற்றிகொள்ள ஒன்றுமையுடனும் ஒரு மனதுடனும் ஒன்றுபடுமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்க விரும்புகிறேன். - என்று தெரிவித்தார் ஜனாதிபதி. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மாறாத சிங்களத் தலைமை

காலச்சக்கரம் சுழல்கிறது. பழையவை மீண்டும் அரங்கேறுகின்றன. இலங்கைத் தீவின் அரசியலிலும் அதுவே நடக்கின்றது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் விடுத்த அழைப்பு காலச்சக்கரம் சுழல பழையன மீண்டும் புதிய வடிவத்தில் தோற்றுவதையே எமக்குக் காட்டிநிற்கின்றன.

*"என்னை நம்புங்கள். நான் தமிழ் மக்களுக்கு உண்மையாக நடக்க விழைகிறேன். சமாதானத்தை ஈட்ட எனக்கு ஒரு வாய்ப்பளியுங்கள். நான் ஒரு யதார்த்தவாதி என்பதைக் காட்ட என்னுடன் இணைந்து செயற்பட வாருங்கள்"* - என்று தமிழ் மக்களுக்கும் அவர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளுக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றின் ஊடாக அழைப்பு விடுத்திருக்கின்றார் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், இந்த அழைப்பின் பின்னர் - அதற்குச் சாதகமாகப் பதில் தரும் விதத்தில் தமிழர் தரப்பு நடந்துகொண்ட பின்னர் - அவரது அரசு செயற்படுகின்ற போக்கைப் பார்த்தால், கடந்த ஆறு தசாப்த காலமாக பௌத்த,சிங்கள மேலாண்மைப் போக்கு அரசுத் தலைமைகளில் இருந்து எந்தவகையிலும் அவர் வேறுபட்டவர் அல்லர் என்பது தெளிவாகிவருகின்றது.

இலங்கையில் பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கை சிறுபான்மையினர்மீது திணித்து, அவர்களை அடக்கி, ஒடுக்கும் தற்போதைய பேரினவாதச் செயற்பாட்டின் ஊற்றுக்கண், இலங்கையின் ஆட்சி அதிகாரம் ஆங்கிலேயரிடம் இருந்து பெரும்பான்மைச் சிங்களவரிடம் கையளித்த காலத்தை ஒட்டித் தொடங்குகின்றது. அப்போதும் கூட, இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுப்பது போல - வேண்டுகோள் விடுப்பதுபோல - சிங்களத் தலைமைகள் ஈழத்தமிழருக்கு அதே மாதிரியான கோரிக்கையைத்தான் விடுத்தன.

அந்தக் கோரிக்கைக்குச் செவிமடுத்து இறங்கி - இணங்கி - போனதால், தமிழர்கள் ஏமாந்தனர் என்பது வரலாறு.

சரியாக ஆறு தசாப்தத்துக்கு முன்னர் - 1946ஆம் ஆண்டு - நாட்டின் சுதந்திரத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பதாக - நடந்த நிகழ்வுகளை மீட்டுப்பார்த்தால், இந்த உண்மை புரியவரும்.

அப்போதிருந்த - டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான அமைச்சரவையினால் தயாரிக்கப்பட்டு, சோல்பரி ஆணைக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட புதிய அரசமைப்புத் தொடர்பான வெள்ளை அறிக்கையின் மீது சுதந்திரத்திற்கு முன்னதான சட்டசபையில் விவாதம் நடைபெற்றது.

பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்தின்கீழ் சிறுபான்மையினரைச் சிக்கவைக்கும் ஆட்சிமுறை, இலங்கைத் தீவில் திணிக்கப்படக் காரணமாக அமைந்த முக்கிய சட்டசபைச் செயற்பாடு அது. அப்போது சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களைப் பார்த்து இறைஞ்சி விடுத்த வேண்டுகோளுக்கும், இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுக்கும் அழைப்புக்கும் வேறுபாடு இல்லை.

டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஏ.எவ்.மொல்லமுரோ (பின்னர் நாடாளுமன்ற முதல் சபாநாயகராக இருந்தவர்), ஜோர்ஜ் ஈ.டி.சில்வா போன்ற ஏனைய சிங்களத் தலைவர்கள் அனைவரும் தமது பேச்சுகளில் தேன்குழைத்து தமிழர்களுக்கு அழைப்பு விடுத்தனர். பிடிவாதம் பிடித்து ஒத்துழையாமைப் போக்கைக் கடைப்பிடிப்பதை விடுத்து, புதிய அரசமைப்புத் திட்டம் நிறைவேற உதவும்படி மன்றாடினார்கள். இந்த அரசமைப்பு மூலம் சிறுபான்மையினரான தமிழர்கள் பெரும்பான்மையினரான சிங்களவர்களால் அடக்கி ஆளப்படுவார்கள் என்ற கருத்து - எதிர்பார்ப்பு - அர்த்தமற்றது என அவர்கள் வாதம் புரிந்தார்கள். தமிழர்களின் உரிமைகள் பேணப்படும் என்று நப்பாசை ஊட்டினார்கள். கிளிப்பிள்ளை போல மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கெஞ்சினார்கள். வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள்.

*"தயவு செய்து எங்களை நம்புங்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் சிங்களவர்கள் என்று நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள்.*

*"எங்களில் தயவுசெய்து நம்பிக்கை வையுங்கள். நாங்கள் நியாயமாக நடந்துகொள்ளும் - தாராளமான போக்குடன் செயற்படும் - மகத் தான சிங்கள இனத்தின் வாரிசுகளா இல்லையா என்பதை உங்களுக் குச் செயலில் காட்ட எமக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்.*

*"இந்த அரசமைப்பைச் செயற்படுத்திப் பார்க்க முன்வாருங்கள். இதிலுள்ள குறைபாடுகளைச் சீர்செய்து சிறப்பாக இதை நடைமுறைப்படுத்த நம்மால் முடியாதா என்பதைப் பார்க்க வாருங்கள்.*

*"தயவுசெய்து இந்த அரசமைப்பைப் பரீட்சித்துப்பார்க்க அனுமதியுங்கள். உங்கள் அச்சமெல்லாம் அடிப்படையற்றவை என்பதை நிரூபித்துக் காட்டுகிறோம்."*

- இப்படி சிங்களத் தலைவர்கள் சொல்லாடல் மூலம் விரித்த வலையில் வீழ்ந்து - வாய்ச்சொல்லுக்கும் மாய்மாலங்களுக்கும் எடுபட்டு - அந்த அரசமைப்பு நிறைவேற ஒத்துழைத்து, தமது இனம் அடிமையாகத் தாங்களே கருவியானார்கள் எமது அப்போதைய தமிழ்த் தலைவர்கள்.

அன்று டி.எஸ்.சேனநாயக்கா, பண்டாரநாயக்கா போன்றோர் "எங்களை நம்புங்கள்; எங்களுக்கு வாய்ப்புத் தாருங்கள்!" என்று தமிழ்த் தலைவர்களைப் பார்த்து கெஞ்சியமை போன்றே இன்று அதே சிங்களத்தின் தலைவரான மஹிந்தரும் தமிழர்களைப் பார்த்துக் கெஞ்சுகின்றார்.

ஆனால், அன்று அந்த வெறும் வாய்வாக்குறுதியை நம்பி ஏமாந்த தமிழ்த் தலைமை போன்றதல்ல இன்றைய தமிழ்த் தலைமை.

அருணாசலம் மகாதேவா, எஸ்.நடேசபிள்ளை, ஜெகநாதன் தியாகராஜா போன்றோர் அந்த வாக்குறுதிகளை நம்பி அந்த அரசமைப்புத் திட்டத்தை ஆதரித்து ஈழத்தமிழர்களின் எதிர்காலம் கெடக் காரணமாயினர். ஜி.ஜி.பொன்னம்பலம் அது தொடர்பான விவாதத்தில் பங்குபற்றவில்லை.

வெறும் சட்டசபை உறுப்பினர் பதவியை வைத்துக்கொண்டு பலமற்றிருந்த அன்றைய தலைமை போன்றதல்ல இன்றைய தமிழர் தலைமை.

இராஜதந்திர ரீதியிலும், இராணுவ ரீதியிலும் மிகப் பலமான வலிமையுடன் - தனது இனத்துக்கென தனியான அரசையும் நாட்டையும் பிரகடனப்படுத்தக்கூடிய அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கி, நிர்வகித்துக்கொண்டுதான் - தலைவர் பிரபாகரனின் உறுதியான வழிகாட்டலில் தமிழர் தலைமை தனது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விடயங்களைக் கையாளுகின்றது.

இது புரியாமல் - இந்த அடிப்படையை நன்கு விளங்கிக்கொள்ளாமல் - முன்னைய சிங்களத் தலைமைகள் தமிழர்களை ஏமாற்றியமை போன்று இப்போதும் ஏமாற்றலாம் என்ற நப்பாசையுடனும் - எதிர்பார்ப்புடனும் இன்றைய சிங்களத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கு மேற்படி அழைப்பை விடுத்திருப்பார் எனின் அவர் நிச்சயம் ஏமாந்து போவார்.

'நம்பநட; நம்பிநடவாதே!' என்பதுதான் இன்றைய தமிழர் தலைமையின் தாரகமந்திரம் என்பது புரியாமல் செயற்பட விழைகிறார் ஜனாதிபதி மஹிந்த. அவரது அரசுத்தலைமை நடந்துகொள்ளும் விதங்கள், தமிழர் விவகாரங்களைக் கையாளும் போக்குகள், எடுக்கும் நடவடிக்கைகள் என்பன அவற்றைத்தான் இயம்புகின்றன.

ஏமாற்ற முயன்று ஏமாந்து போகப்போகின்றார் மஹிந்தர். அவரது திட்டம் ஏமாற்று நாடகம் என்றால், நல்ல பட்டறிவு அவருக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம். அது காலாதிகாலமாகச் சிங்களம் மறக்கமுடியாததாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# கடற்றொழிலுக்கு அனுமதி மறுக்கப்பட்ட வலி.தென்மேற்கு மீனவர்களுக்கு நிவாரணம்

## யாழ்.மாவட்ட செயலகம் ஏற்பாடு

வலி.தென்மேற்கு,பெப்.5

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் கடற்றொழில் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டதால் பாதிப்படைந்த 254 குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மாதகல், மாரீசன்கூடல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்களே நிவாரணமாக உலர் உணவுப் பொருள்களைப் பெறவுள்ளன.

மாதகல், மாரீசன்கூடல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களைக் கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதியிலிருந்து மாதகல்துறைப் பகுதியிலும் குசுமன்துறைப் பகுதியிலும் கடற்றொழில் செய்யவேண்டாம் என்று கடற்படையினர் பணிப்புரை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தொழில் பாதிப்படைந்த இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த நிலையில் - யாழ். மாவட்ட செயலகம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து தொழில் பாதிப்படைந்த 254 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தற்போது எந்தவிதமான நிவாரண மும் பெறாத நிலையிலுள்ள இந்தக் குடும்பங்களுக்கே இந்த நிவாரணத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் -

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக இதற்கான நிவாரணப் பொருள்கள் விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)



இலங்கையின் 58 ஆவது சுதந்திர தினம் நேற்றாகும். இதனையொட்டி யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுத் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்: அதிரன்)

## தென்மராட்சி தெற்கில்

# சட்டவிரோதமாக மணல் அகழ்வதை தடுக்கும் நடவடிக்கையில் பொதுமக்கள்

தென்மராட்சி, பெப்.5

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதை தடுக்க அப்பகுதி மக்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மணல் ஏற்றுவதற்கு பயன்படுத்தும் வீதிகளில் மரக்குற்றிகளை நட்டும், குழிகளை ஏற்படுத்தியும் வாகனப் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், வீதியோரங்களில் பறிக்கப்பட்டிருந்த மணல் குவியல்கள் மீது கழிவு ஒயில்களை ஊற்றிய மக்கள் அவற்றை அவ்விடத்திலேயே பரவியுள்ளனர்.

மணல் ஏற்றுவதைத் தடை செய்யக்கோரி அப்பகுதி மக்கள் உரியவர்களிடம் முறையிட்டும் பயன் கிடைக்காததால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தாங்களே தடை செய்ய முன்வந்ததாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பற்சுகாதார விழிப்புணர்வு மாதம் பிரகடனம்

தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் பெப்பிரவரி மாதத்தினை பற் சுகாதார விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப் படுத்தியுள்ளனர். பெப்ரவரி மாத காலப் பகுதியில் பற் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் பற் சிகிச்சை ஆகியவற்றை சம்பந்தப்பட்ட பகுதிகளில் நடத்தி மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றி தமக்கு அறியத்தருமாறு சுகாதாரப் பகுதியினரை தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ-51)

# தென்மராட்சிப் பிரதேச நிர்வாகத்தை 2 அலகாக பிரிக்க மக்கள் ஒப்புதல்

## கொடிகாமத்தில் புதிய பிரதேச செயலகம்

தென்மராட்சி,பெப்.5

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிப்பதற்கு பிரதேச மக்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழனன்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச நிர்வாகத்தை இரண்டு அலகுகளாகப் பிரிப்பதற்கான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

32 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி மத்தி பிரதேச செயலகத்தை சாவகச்சேரியிலும் -

28 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தை கொடிகாமத்திலும் இயக்குவது என்றும் - இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பதற்குப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் தைப்பூசத்தில் 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,பெப்.5

நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் ஆலயத்தில் 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் தைப்பூச திருவிழாவன்று இந்தப் பிரதிஷ்டை இடம்பெறும்.

சிவலிங்கப் பிரதிஷ்டைக்கு முன்னோடியான ஸ்ரீருத்திர பூசைத் ஹோமமும் நவகுண்டபட்ச சிவலிங்கப் பிரதிஷ்டை ஆராதனையும் நேற்று சனிக்கிழமை விக்னேஸ்வர பூசையுடன் ஆரம்பமாகின.

எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கடஸ்தாபனம், யாகாரம்பம் என்பனவற்றைத் தொடர்ந்து 108 சிவலிங்கங்களுக்கும் ஆவாகனப் பூசை நடைபெறும். பின்னர் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு யாகபூசையும் ஒரு லட்சம் சிவமூலமந்திரத்தினால் ஹோமமும் விசேட திரவிய ஹோமமும் இடம்பெறும்.

தொடர்ந்து 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மகாபூர்ணாகுதியும் மூலவருக்கு மகா அபிஷேகமும் நடைபெறும். பின்னர் தைப்பூசத் தினத்தன்று சிவலிங்கப் பிரதிஷ்டை இடம்பெறும். (எ)

**நாளை**

தை 24
திங்கட்கிழமை
06.02.2006
திதி: நவமி
பின்னிரவு: 04.51
நட்சத்திரம் : கார்த்திகை
பின்னிரவு: 01.05 வரை
கார்த்திகை விரதம்
[illegible] 12.35-02.05
[illegible] 08.05 - 09.35
(யாவும் பழைய நேரப்படி)

# படை நடவடிக்கையில் ஈடுபட்டாலும் எமக்கு உறவுகளுடன் இணைந்து வாழவே விருப்பம்

## யாழ். நகரப் படை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

படை நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் எமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு எமக்கும் விருப்பம் உண்டு. சகல இனத்தவர்களும் இணைந்து வாழும்போதே நிரந்தர சமாதானத்தை எதிர்பார்க்கமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் கொடிப்பிலி.

யாழ். பாஷையூரில் வசிக்கும் வசதி குறைந்த குடும்ப அங்கத்தவர்களுக்கு படையினரின் ஏற்பாட்டில் அன்பளிப்புப் பொருள்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாஷையூர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே படை அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் எமக்கும் மனைவி, குழந்தைகள், உறவுகள் உள்ளனர். நாங்கள் அவர்களுடன் சேர்ந்து மகிழ்வுடன் வாழவேண்டுமானால் நிரந்தர சமாதானம் நாட்டில் ஏற்படவேண்டும்.

நான், இந்த நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். நீங்கள் மகிழ்வுடன் இருப்பதற்கு வாழ்த்துகின்றேன். இயேசு கிறிஸ்து கூறினார் எல்லோரும் ஒற்றுமையுடன் இருங்கள் என்று. அதனையே நான் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

இராணுவம் மூலம் உங்களுக்கு என்ன உதவிவேண்டும் என்றாலும் நாங்கள் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். உங்களுக்கு என்ன பிரச்சினை என்றாலும் என்னிடம் முறையிடுங்கள். நான் தீர்த்து வைப்பேன் - என்றார். (எ-12-190)

**உதயவாக்கு**

உள்ளே [illegible]ந்துகொண்டிருப்பதை விட உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்துவது மேல்.

- ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாய்

## இலவசம்

DRY DOCKS ல் கீழ்காணும் வேலைவாய்ப்புகள் உள்ளன.

| | தொகை | | சம்பளம். |
|---|---|---|---|
| வெல்டர்ஸ் X Ray (6G) | 20 | 1500 Dhs | ரூ.42,000.00 |
| Fabricators (Structural) | 20 | 1350 Dhs | ரூ.37,000.00 |

(நல்ல அனுபவம் அவசியம்)

★ சேவைக்காலம் 03 வருடங்கள். ★ தங்குமிட வசதி இலவசம்.
★ உணவுக் கொடுப்பனவு சம்பளத்தில் உள்ளடக்கப்படும்.
★ சேவைக்கால முடிவின் பின் திரும்பி வருவதற்கான விமான டிக்கட் இலவசம். ★ பயிற்சிக் காலம் 03 மாதம்.
★ விண்ணப்பதாரியால் விமான டிக்கட்டிட்கான கட்டணம் செலுத்தப்பட வேண்டும். பயிற்சி காலம் 02 மாதத்தின் பின் திருப்பிக் கொடுக்கப்படும்.
★ மருத்துவம், காப்புறுதி மற்றும் ஏனையவை ஐக்கிய அரபு இராச்சிய தொழிலாளர் சட்டத்திட்டத்திற்கு உட்பட்டது.

Post Card அளவு புகைப்படங்கள் 2 உடன் பாஸ்போர்ட் மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் கீழ்காணும் விலாசத்திற்கு சமூகமளிக்கவும்.
(வார நாட்களில் மு.ப. 9.00 -பி.ப. 5.00 வரை
சனிக்கிழமை மு.ப. 9.00 - பி.ப. 1.00)

ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்)லிமிட்ட்
05, பிகரிங்ஸ் ரோட், எட்டியாவத்தை, கொழும்பு 13
License. No : 750 App: NO: AL/ 750/ Advt/ 01/ 06


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நாகலிங்கம் தம்பிராசா

*இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் அன்புச் சகோதரன் (சாந்திடைலை அகம், யாழ்ப்பாணம்), நா.தம்பிராசா அவர்கள் (07-01-2006)இல் சிவபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கும், நிதியப் பொருளாளர் திரு:நா.சுந்தரலிங்கத்திற்கும் ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய நிதிய நண்பர்கள் பிரார்த்திக்கிறோம்.*

(46389)(26.16)

ஓம் சாந்தி!

இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நண்பர்கள் , இணுவில்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நன்றி நவிலலும்



மலர்வு 05 - 01 - 1949

உதிர்வு 07 - 01 - 2006

திருமதி

### ஞானலிங்கம் மங்களேஸ்வரி

கொடிகாமம், கண்டி வீதியைச் சேர்ந்த திருமதி ஞானலிங்கம் மங்களேஸ்வரி 07.01.2006 அன்று இறைவனடி எய்திய செய்தி அறிந்து அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் மலர்வளையங்கள் வைத்தும் அனுதாபங்களைத் தெரிவித்து எமது கவலையைப் பகிர்ந்து கொண்டு உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை 06.02.2006 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடரும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*கண்டி வீதி,*
*கொடிகாமம்.*
*தொலைபேசி:* **0776544618.**

(46382) (39.26.16)

கணவர்,
மற்றும்
குடும்பத்தினர்.

## சுகாதாரத்திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை

குருநகர்,பெப்.5

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன் கீழ் இயக்கும் வைத்திய நிறுவனங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக சேவை புரிபவர்களை சாதாரண தொழிலாளர்களாகப் பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப் பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக நிரந்தர சேவையில் கடமைபுரிந்து தமது ஐந்து வருட சேவையை நிறைவுசெய்த சுமார் எண்பத்தாறு சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (எ-51)

## எந்திரவியல் பயிற்சிநெறி

குருநகர்,பெப்.5

கடலக மீன்பிடி, எந்திரவியல், படகு மாலுமி மற்றும் தும்புக் கண்ணாடி நாரிழையிலான தொழில்நுட்ப பயிற்சிநெறிகள் யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவனமும் இணைந்து இப்பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்கவுள்ளன. இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்களுக்கான உதவிப்பணம் வழங்கப்படும். (எ-51)

## மிளகாய்ச் செய்கையாளருக்கு ஊக்குவிப்புக் கடன்

வலி.தென்மேற்கு,பெப்.5

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தமது பிரிவில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடவுள்ள சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு மிளகாய்ச் செய்கைக்கான ஊக்குவிப்புக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மிளகாய்ச் செய்கையில் ஈடுபடவிருக்கும் விவசாயி ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படவுள்ளதாகவும்-

கடனைப்பெறவிரும்பும் விவசாயிகள் தத்தமது கிளைக் குழுவின் சிபார்சுடன் விண்ணப்பிக்க முடியும் என்றும் - சங்கத்தின் பொது முகாமையாளர் சு.வைரவநாதர் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

## விபத்தில் இருவர் படுகாயம்

தென்மராட்சி,பெப்5

வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர். கைதடி பாலத்தருகில் அமைக்கப்பட்டுள்ள வேகத்தடை மேட்டில் வேகமாக பயணித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் சக்கரம் ஏறியபோது அதில் பயணித்த யாழ். காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த ஆர்.உலகேஸ்வரி (வயது - 65) என்பவரும்-

மட்டுவில் பகுதியில் சைக்கிளுடன் மோட்டர் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் பயணித்த ப.ரூபன் (வயது- 37) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-117)


## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

### ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

*தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைன்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி,* OFFICE BOY, *விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர்* (PORTERS)

★ மலேசியாவில்

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

RAINBOW TRAVELS and TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219, 021 222 3237.

(c/.47352) (39.11.42)


## மரண அறிவித்தல்



### திருமதி சந்திரசேகரி தயாநிதி

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரி தயாநிதி அவர்கள் 03-02-2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரியின் அன்பு மனைவியும் சந்திரகுமாரி (ஆசிரியர், கனகரத்தினம் ம.ம.வி.), சந்திரலீலா, சந்திரபவானி, தனபாலசிங்கம் (லண்டன்), நாவேந்தன், தமிழ்வாணன் (ஜேர்மனி), உதயவேந்தன் (ஜேர்மனி), சுதாமதி (லண்டன்), கலாமதி (நெதர்லாந்து), பானுமதி (விரிவுரையாளர், வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற அலுவலர், மீன்பிடி கூட்டுஸ்தாபனம்), சண்முகநாதன் (தபால் அலுவலகம், வெள்ளாங்குளம்), காலஞ்சென்ற அமரசோதி (றோலஸ் யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரி, பத்மலோஜினி, மாலதி, ஸ்ரீதேவி, பத்மநாதன், சிறிரஞ்சன், தினேஸ்வரன், (விவசாயபீடம், யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-02-2006) ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (46384)(26.16)

தகவல்:
பிள்ளைகள்.

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 31 - 08 - 1964

அழிப்பு 16 - 01 - 1997

அமரர்

### சீவரத்தினம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

*திதி: அட்டமி (05.02.2006)*

*பார் போற்ற இவ்வுலகில் பவனி வந்தீர்கள் அப்பா!*
*எம்மைப் பாழ்படுத்த வேண்டுமென*
*பாதகர்கள் பாதியிலே- உம் வாழ்வினை முடித்தனரே !*
*கணப் பொழுதில் உமை இழந்தோம்*
*காண வேண்டிய காட்சிகள் அத்தனையும்*
*நீர் இழந்து கண தூரம் சென்றீரே !*
*காலங்கள் பல கடந்தாலும் எம் மனக்*
*காயங்கள் மாறவில்லையப்பா !*
*நீண்ட பயணம் மேற்கொண்டீரோ*
*நீர் பெற்ற செல்வங்கள் ஐந்தினையும் மறந்தீரோ?*
*ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன - ஆனால்*
*உமது நினைவுகளோ நித்தம் எம்மை*
*துக்கத்தில் ஆழ்த்துகிறது கண்ணனின் மைந்தர்கள் நாம்*
*கண்ணியமாய் வாழ்வதற்கு நல்லாசி கூறும் அப்பா !*
*கண்ணின் மணியான எம் கண்ணனின்*
*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

'கோகுலம்' 91, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (46392)(39.26.16)

குடும்பத்தினர்.


## திருமண சேவை

திருமண ஒப்பேற்றுத்துறையில் 'சுயதெரிவுமுன்னோடி', திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதன் பத்தாண்டு காலத்தைக் கடந்த ஜனவரி மாதம் வெற்றிகரமாக நிறைவு செய்து, மேலும் தொடர்ந்து வீறு நடைபோடுகிறார்! வேல் அமுதனின் தசாப்த கால நிறைவினை ஒட்டிய 'ஆய்வரங்கம்' ஒன்று கொழும்பு தமிழ்ச்சங்க 'நவரட்ணம் மண்டபத்தில் (2 ஆம் மாடி) 12.02.2006 போயாதினம் ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. சுயதெரிவுமுறை பற்றித் தெளிவுபெற- சுயதெரிவு முறையின் பயன்பாடு பற்றி அறிந்து பயன்பெற ஆர்வலர் அன்பாக அழைக்கப்படுகின்றனர்!

தொலைபேசி: 2560488, 4514596.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜெனீவாப் பேச்சுக்கான புறச்சூழலை கெடுக்கும் விதத்திலான சம்பவங்கள்

## அரசு எந்தப் பக்கம் நோக்கி நகர்கின்றது?

## சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் உள் அர்த்தம் தொனிக்கும் பவனிகள்!

வாராந்த அரசியல் அலசல்
குகா

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக- சீராக- அமுலாக்கம் செய்வது தொடர்பான நேரடிப் பேச்சுகள் இடம்பெறும் வாய்ப்புகள் மெது மெதுவாகச் சரிந்துபோவதைக் காணமுடிகின்றது.

இலங்கைக்கு வருகைதந்த நோர்வே அனுசரணைக் குழுத் தலைவரும் அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மின் பிந்திய விஜயத்தின் பின் நடந்தேறிய நிகழ்வுகள் பேச்சுக்கான வாய்ப்பைக் குறைக்கச்செய்வனவாக அமைந்துள்ளன.

கடந்த மாதம் 23ஆம் திகதி இலங்கை வந்த எரிக் சொல்ஹெய்ம் அரசுத் தரப்புத் தலைவர்கள், தமிழர் தரப்புத் தலைவர்கள் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறாக அரசுத் தரப்பும் - விடுதலைப் புலிகளும் நேரடியாக ஜெனீவாவில் சந்தித்துப் பேசுவதற்கான சூழல் உருவானது.

ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நோர்வே




யில்தான் பேச்சு என்று விடுதலைப் புலிகளும் முன்னர் விடாப்பிடியாக நின்றனர்.

இந்நிலையில் இலங்கை வந்த எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் சிங்களத் தரப்புத் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் கிளிநொச்சியில் தமிழர் தரப்புத் தலைவரான விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு தலைவர்களுடனும் நடத்திய பேச்சுகளின் விளைவாக யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் தொடர்பாக ஜெனீவாவில் சந்தித்து இரு தரப்புகளினதும் உயர்மட்டக் குழுக்கள் சந்தித்துப் பேச இணக்கம் காணப்பட்டது. உத்தேச நேரடிப் பேச்சுகளில் தமது தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் பேச்சுகளில் பங்குபற்றுவர் என விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டனர்.

ஆனால், அரசுத் தரப்பில் யார் யார் பங்குபற்றுவர் என்ற விவரங்களை அரசு நேற்று



வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட... அரசுத் தரப்புக் குழுவுக்கு அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா தலைமை வகிப்பார் என்று மட்டுமே கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. ஏனைய பிரதிநிதிகளின் பெயர்கள் வெறும் ஊகமாகவே ஊடகங்களில் அடிபடுகின்றன. இதற்கிடையில் பேச்சில் பங்குபற்றும் பிரதிநிதிகளுக்குப் பயிற்சிப் பட்டறை நடத்தப்போவதாகவும் அரசுத் தரப்பு செய்திகளை அவிழ்த்து விடுகிறது. ஆனால், உறுதியான விவரங்கள் ஏதும் இதுவரை அரசுத் தரப்பால் வெளியிடப்படவில்லை.

### ஒரு தலைப்பட்சமான அறிவிப்பு

இந்நிலையில், பேச்சுகள் நடக்கும் உத்தேசத் திகதிகளை நோர்வே முன்வைத்திருக்கின்றது. அந்தத் திகதிகள் குறித்து இரு தரப்பினரும் இணக்கம் தெரிவிக்காத நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி பேச்சுகள் நடைபெறும் என அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ளது. இதை விடுதலைப் புலிகள் மறுதலித்துள்ளனர்.

படையினரதும் துணைக்குழுக்களினதும் கெடுபிடிகளுக்குள்ளும் நெருக்குவாரங்களுக்குள்ளும் தமிழ் மக்கள் சிக்கி இருக்கும் போது நேரடிப் பேச்சு நடத்தமுடியாது. பேச்சுக்கு முன்னர் தமிழர் தாயகப் பகுதியில் இயல்பு நிலை - சுமுகமான நிலை - தோற்றுவிக்கப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் எரிக் சொல்ஹெய்ம் மூலம் அரசுக்குச் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்தச் செய்தி கிடைத்த ஒரு சில தினங்களின் பின் முப்படைத் தளபதிகளைக் கூட்டிய ஜனாதிபதி, சமாதானத்தைக் குழப்பும் செயற்பாடுகளைத் தவிர்க்கும்படி உத்தரவிட்டார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

### பெரிதளவான மாற்றங்களைக் காணமுடியவில்லை

ஆனால், கள நிலைமைகளில் எந்தவிதமான பெரிதளவான மாற்றங்களையும் காணமுடியவில்லை. மக்கள் எதிர்பார்த்த சுமுக நிலை கிட்டவில்லையாயினும் வன்செயல்கள் இடம்பெறாததால் மக்கள் மனங்களில் ஓரளவு அமைதி நிலையைக் காணமுடிகின்றது.

எனினும், இராணுவப் புலனாய்வுக் குழுக்களினதும் ஒட்டுக்குழுக்களினதும் செயற்பாடுகளால் அமைதி நிலை குலைந்துபோகும் சூழல் தென்படுகிறது.

வன்செயல்களைக் கைவிட்டு பேச்சுகளில் பங்குபற்றுவதற்கு இரு தரப்பினரும் நோர்வேக்கு வழங்கிய உறுதிமொழியை விடுதலைப் புலிகள் வழுவாது கடைப்பிடித்து வருகின்றனர். அதேநேரம் அவர்களைச் சீண்டி மோதலுக்கு அழைக்கும் தன்மையான செயற்பாடுகள் அரசின் பக்கத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

★ மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையினரும் ஒட்டுக்குழுக்களும் ஊடுருவித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் போராளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

★ வெலிகந்தையில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

★ கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட இரு பணியாளர்களை, மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் வைத்து மிரட்டி வாக்குமூலம் பெற முயற்சிக்கப்பட்டுள்ளது.

★ கடத்தப்பட்ட பணியாளர்களை விடுதலை செய்யுமாறு கோரி அம்பாறையில் ஹர்த்தால் நடத்திய பொதுமக்கள் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

★ குடாநாட்டில் படையினரின் பிரசன்னம் விலக்கப்படவில்லை. தேடுதல்கள், சுற்றிவளைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

அரசும் புலிகளும் நேரடியாகப் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்ட பின்னர் தாயகப் பகுதியில் மேற்கூறியவை அரங்கேறி உள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கைகளைச் செம்மையாக நடைமுறைப்படுத்தாததன் விளைவுகளே இவை.


யுத்தநிறுத்த உடன்பாட்டில் பரிந்துரைக்கப்பட்டவாறு ஒட்டுக்குழுக்கள் தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தால், இன்றைய மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் நோக்கிலான பேச்சுகளை நடத்த இணங்கிய நிலையில் இடம்பெறும் சம்பவங்களில் ஒட்டுக் குழுக்களே சம்பந்தப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஒட்டுக்குழுக்களைத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த ஒட்டுக்குழுக்களே தாயகப் பிரதேசத்தில் வன்செயல்கள் உருவாகக் காரணம் என்ற யதார்த்தத்தை அரசு புரிந்து செயற்படுமாயின், நேரடிப் பேச்சுக்கான சாத்தியம் அதிகமாகும். இல்லாவிட்டால் நேரடிப் பேச்சு என்ற விவகாரம் போச்சு என்று முடிவுசெய்யவேண்டிய நிலை உண்டாகிவிடலாம்.

### ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார்?

இந்நிலையில், துணை இராணுவ ஒட்டுக் குழுக்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடப் போவதாக யாழ். மாவட்ட "பொங்கியெழும் மக்கள் படை" எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அவ்வாறு நடந்தால் நிலைமை மேலும் மோசமடையும். நேரடிப் பேச்சுக்கான வாய்ப்பும் முற்றாக அருகிப் போகலாம். அதற்கு இடமளிக்கும் விதத்தில் தமது செயற்பாடுகளை, நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்கப்போகின்றாரா? அல்லது கட்டுப்படுத்தப்போகின்றாரா? என்பதே இப்போதைய கேள்வி.




இக்கேள்விக்கு இடமளியாத விதத்தில் ஜனாதிபதி தமது காய்நகர்த்தல்களை முன்னெடுப்பாரா? அல்லது 4ஆம் கட்டப் போருக்குக் கால்கோள் இடப்போகின்றாரா? என்பதை அடுத்து வரும் நாள்களில் பார்க்கலாம்.

இது ஒருபுறம் இருக்க -

### உலக நிதி நிறுவன அதிகாரிகளின் வருகை ஒத்திவைப்பு

ஜே.வி.பியின் அழுத்தத்துக்குப் பணிந்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக, கிளிநொச்சிக்கு வரவிருந்த சர்வதேச நிதியுதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளின் விஜயத்தை ஒத்திப்போடுமாறு அரசு கேட்டிருந்தது. அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் தமது விஜயத்தை ரத் துச்செய்திருந்தனர்.

உலக்வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐ.நா.அபிவிருத்தி நிதியம் ஆகிய வற்றின் தலை வர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. குறிப்பிட்ட சர்வதேச நிதி உதவி நிறுவனங் கள் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது.



மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி செல்வதை அரசு அனுமதித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் பகிரங்க நிகழ்வொன்றில் எச்சரித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து அரசு கொடுத்த அழுத்தத்தினாலேயே அவர்கள் தமது கிளிநொச்சி விஜயத்தை ரத்துச் செய்தனர். ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் என்று ஒத்திவைத்துள்ளனர்.

இதுவும் ஜெனீவாப் பேச்சுக்கு முட்டுக்கட்டை போடும் பிரசாரங்களில் ஒன்றே.

### நேற்றைய சுதந்திரதின நிகழ்வுகளின் பிரதிபலிப்பு

கேள்விக்குறிகள் நிறைந்த இத்தகைய நிலையில் ஸ்ரீலங்காவின் 58ஆவது சுதந்திர தினம் கொழும்பில் மிகப்பிரமாண்டமான முறையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக முக்கிய வீதிகளை மூடி, பெரும் எடுப்பில் அணிவகுப்பு ஒத்திகைகளை நடத்தி, அதிக செலவில் மேடைகளை அமைத்துச் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் காலிமுகத் திடலில் தடல்புடலாக நடந்தேறியுள்ளன.

முப்படைகளின் அணி வகுப்பு, கடற்படையின் கடற்கலங்களின் அணிவகுப்பு, விமானப் படையின் அணிவகுப்பு ஆகியன நேற்று இடம்பெற்றன.

ஒரு யுத்தத்துக்கான ஒத்திகை போன்று அந்த நிகழ்வுகள் அமைந்தன எனலாம். விமானப் படை வசம் உள்ள கலங்களின் சாகச நிகழ்வுகள், கடற்படையின் கலங்களின் ஒத்திகைகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, யுத்தம் ஒன்றைத் தமிழர் தாயகம் மீது ஸ்ரீலங்கா அரசு தொடுக்கப்போகின்றதா என்ற கேள்வியே தமிழ் மக்கள் மனங்களில் உண்டானது.

கடந்த காலங்களில் சாதாரண அணிவகுப்புகளுடன் இடம்பெற்றுவந்த சுதந்திர தின நிகழ்வு இம்முறை மஹிந்த புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் இடம்பெறுவதால் பெரும் எடுப்பில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

படையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையிலும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதற்குப் பயிற்சி அளிக்கப்படும் என்பதனைக் கோடிகாட்டும் வகையிலும் நேற்றைய நிகழ்வுகளை மக்கள் நோக்குகின்றனர். இந்த நிகழ்வுகளை முழுமையாக அரச தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிரப்பியதன் மூலம் சிங்கள மக்களை அரசு மகிழ்ச்சியுறச் செய்திருக்கலாம்.

இந்தத் தேசத்தில் இருநாடுகள் இருக்கின்றன என்று சொல்லாமல் சொல்லும் விதத்திலும் நாட்டின் படைப் பலத்தை வெளிக்காட்டும் நோக்கிலும் எந்தவித தாக்குதல்களையும் எதிர்கொள்ளக்கூடிய வகையிலும் படையினர் தயாராக உள்ளனர் என்ற செய்தியை வெளியிடும் வகையிலும் சுதந்திரதின நிகழ்வை அரசு பயன்படுத்தியிருக்குமோ என்று நோக்கர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

### விடைகாண வேண்டியவர் ஜனாதிபதியே

கொண்டாட்டங்கள், குதூகலங்கள் எப்படியோ, என்னென்னவோ -

ஜனாதிபதி சரியான முறையில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு முடிவுசெய்யப்பட்டுள்ள அரசு -விடுதலைப் புலிகள் பேச்சுக்களை விரைவில் நடத்த உதவும் வகையில் இயல்பு நிலையை முதலில் தோற்றுவிக்க வேண்டும். அத்தகைய சூழல் ஒன்று உருவாக்கப்பட்டு, பேச்சுகள் நடத்தப்பட்டு அமைதி நிலை இந்த நாட்டில் ஏற்படுத்தப்படாவிடின் இரு தேசங்கள் தங்கள் சுதந்திர தின நிகழ்வுகளைத் தனித்தனியாகக் கொண்டாடும் நிலைக்கு வழிசமைப்பதாகிவிடும்.

அந்தநிலை உருவாக சிங்களத் தலைவர்கள் வழிசமைக்கப்போகின்றனரா அல்லது சமாதான வழிமுறையில் ஒரே நாட்டில் சுதந்திரமாக இரு இனங்கள் வாழ வழிசமைக்கப் போகின்றார்களா?

இந்தக் கேள்விகளுக்கு விடைகாண வேண்டியவராக இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளார்.

அவரின் காய்நகர்த்தல்களே நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்றன என்பது மட்டும் உண்மை. அவை எவ்வாறு அமையப்போகின்றன என்பதைத் பொறுத்திருந்து பார்ப்போம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS இன் 10 ஆவது ஆண்டு நிறைவு சிறப்பிதழ் - 2006




1996ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி ஆரம்பிக்கபபட்ட எமது நிறுவனம் எமது பிரதேசத்தில் நிலவிய பல்வேறு இக்கட்டான போர்க்கால சூழ்நிலைகளைக் கடந்து தனது 10வது ஆண்டு சேவையின் நிறைவினை இன்று கொண்டாடிக்கொண்டிருக்கின்றது. எமது இப் பத்து வருட சேவையில் இலங்கையின் வடபகுதியில் தகவல் தொழில் நுட்பக் கல்வியில் புதியதொரு பரிமாணத்தினை உருவாக்கிக் காட்டியுள்ளோம். எமது நிறுவனத்தின் வெற்றிக்கு கடந்த 10 வருடங்களில் எமது நிறுவனத்தில் இருந்து வெளியேறி சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் தமது திறமைகளை நிரூபித்துக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் மாணவர்களே சாட்சி!




## இயக்குநரின் ஆசிச்செய்தி



இன்று எமது நிறுவனம் தமது 10வது அகவையைப் பூர்த்தி செய்து 11வது வருடத்தில் குடாநாட்டு மாணவர்களுக்கு சேவையாற்றுவதற்காகக் காலடியெடுத்து வைக்கின்றது. எமது நிறுவனத்தின் கண்ணியம் மிகுந்த சேவையும் கற்கை நெறிகளின் தரமும் சேவையின் நம்பகத்தன்மையும் குடாநாட்டு மக்களினதும் மாணவர்களினதும் மனதில் இடம் பிடிப்பதற்கு ஒரு பெரும் மூலாதாரமாக அமைந்தது மட்டுமல்லாமல் எமது நிறுவனத்தின் பெயரினை உள்நாட்டு அரங்கிலும், சர்வதேச அரங்கிலும் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்வதற்கும் ஏதுவாக அமைந்தது. மேலும் குடாநாட்டு மாணவர்களுக்குப் பயன்தரக்கூடிய அரிய திட்டங்கள் பல எமது கைவசம் உள்ளன. தக்க தருணங்களில் அவற்றினை செயற்படுத்தி நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். மேலும் இப்பததாவது ஆண்டு நிறைவு நிறுவனதின விழாவில் சான்றிதழ்களையும் சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொள்ளவிருக்கும் அனைத்து மாணவர்களுககும் எனது சார்பிலும் நிறுவனத்தின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது பத்து ஆண்டு கால செயற்பாடு மிக வெற்றிகரமாக நிறுவனத்தின் இலக்கினை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

*திரு. **K**.விக்னேஸ்*
*இயக்குநர்,*
***IIS***

## MBA மாணவரின் உள்ளத்திலிருந்து



**MBA** கற்கை நெறியின் முக்கியத்துவத்தினை நன்குணர்ந்திருந்த நிலையில் மேற்படி கற்கைநெறியைப் பயில வேண்டும் என்ற ஆர்வம் என் மனதில் நீண்டகால மாக இருந்துவந்தது. ஆனால் மேற்படி **MBA** கற்கை நெறியினை கொழும்பை மையமாகக் கொண்டியங்கி வருகின்ற பல்கலைக் கழகங்களிலோ அல்லது தனியார் உயர் கல்வி நிறுவனங்களிலோ நடாததப்பட்டு வருவதால் கொழும்பு சென்று இக்கற்கை நெறியை மேற்கொள்வது மிகுந்த சிரமமாக இருந்தது. எனது சிறந்த ஒரு முகாமைத்துவ, தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் எனது கல்வித்தரத்தினை உயர்த்திக் கொள்வதோடு பதவியுயர்வுகளை மேற கொள்வதற்கும் இக்கற்கைநெறி பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.**IIS** மற்றும் **IIS City Campus** நிறுவனங்கள் குடாநாட்டு மாணவர்களுக்கு ஆற்றுகின்ற பணி மிகவும் அளப்பரியது. இன்று சான்றிதழ்களைப் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

*திரு. சுந்தரேசன்*
*முகாமையாளர்*
*ஷற்றன் நஷனல் வங்கி,*
*சுன்னாகம்.*

## HND I ஆவது பிரிவு மாணவனின உள்ளத்திலிருந்து



பொங்கிப் பிரவாகிக்கின்ற கற்பனைகள் எல்லாம் நிஜம் என்று எண்ணத் தோன்றுகின்ற இன்றைய அதிசய உலகில் புதிது புதிதாக அறிமுகமாகும் தொழில்நுட்பங்கள் எல்லாம் மனித மூளையின் சிருஷ்டிதானா என்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்றது.

நாமும் அந்த அளவிற்கு முன்னேறி விட வேண்டுமென்று உந்துதலைத்தருகின்ற இன்றைய வளர்ச்சி ஒரு புறம், இந்த எண்ணத்தை தவிடுபொடியாக்கும் சூழ்நிலைகள் மறுபுறம்.

கணனி உலகில், இத்தனைக்கும் மத் தியில் எதையாவது சாதித்துவிட வேண் டும் என்ற துடிப்புடன் இருக்கும் இன்றைய புதிய தலைமுறையினருக்கு புதுத்தெம்பூட்டியது **IIS** கணனி நிறு வனம்.

கணனி உலகில் பத்து வருடங்கள் தனக கென தனிமுத்திரை பதித்து இன்று பத்தாவது அகவை நிறைவைக் கொண்டாடும் **IIS** கணனிக்கல்வி நிறுவனம், தமிழ் இளம் சமூகத்திற்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை வழங்கித் தான் சந்தித்த வேதனைகளையும் சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி இன்று போல் என்றும் வெற்றிநடை போட உளமார வாழ்த்துகின்றேன்.

*திரு. **F.C**. நிருஷன்*
*யாழ்ப்பாணம்.*

## BIT பட்டதாரியின் உள்ளத்திலிருந்து



இவ் ஆண்டு 10ஆவது வருடத்தினை வெற்றி கரமாக பூர்த்தி செய்துள்ள **IIS** நிறுவனம இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தில தகவல் தொழில்நுட்ப சேவை வழங்கலில் முதன்மையான ஒரு கூட்டு நிறுவனமாக உள்ளது. தற்போது MBA (Sikkim Manipal University), BIT (University of Colombo School of Computing) மற்றும் HND (Edexcel International, UK) ஆகிய உயா தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளை நடாத்திக் கொண்டிருக்கும் **IIS** நிறுவனம் முதல்முறையாக யாழ்நகரில் கொழும்பு பல்கலைக் கழகத்தின் BIT கற்கை நெறியை ஆரம்பித்த பெருமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வடக்கில் **BIT** கற்கைநெறியை எந்தவொரு நிறுவனத்தினாலும் வெற்றிகரமாக நடத்த முடியாது என்ற பொதுவான ஒரு நம்பிக்கை நிலவிய நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறியினை, திறமையாக **IIS** நிறுவனம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக **IIS** இனால் வழங்கப்பட்ட அரியசந்தர்ப்பத்தினால் நான் இன்று தொழில்நுட்பமாணி பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இன்று 10 வது வருடத்தில் வெற்றிகரமாய இயங்கும் இந்நிறுவனம் மேலும் பல உயர் தகவல தொழில்நுட்ப கற்கை நெறிகளை இப்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தி வளர்ச்சி அடையவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

*திரு. J.சுதர்சன்*
*யாழ்ப்பாணம்.*

## எமது எதிர்காலத்திற்கு ஒளியூட்டி வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற IIS நிறுவனத் தாய்க்கு இவ்விதழ் சமர்ப்பணம்

## மலர் அமைப்பு:- IIS மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை சாத்தியமற்ற முனைக்குத் தள்ளுகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ!

## ஜெனீவாப் பேச்சும் இன்னொரு போர்க்களமே

## இராஜதந்திரம் என்பது இரத்தம் சிந்தா யுத்தமே!


மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துள் 'குழப்பம்' செய்வது 'முறைகேடான' செயல்கள் என


சந்திரிகா

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் கண்டித்து வருகின்றன. அத்துடன், இவ்வாறான நடவடிக்கைகள் நாடாளுமன்றத்தின் கௌரவத்திற்கு இழுக்கானது என்றும் எழுதுகின்றன.

1956ஆம் ஆண்டு தனிச்சிங் கள மசோதாவிற்கு எதிராக தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் காலி முகத்திடலில் அமர்ந்திருந்து சாத்வீக வழியில் போராடியபோது


ரணில்

அன்றைய பண்டார நாயக்கா அரசாங்கம் பொலிஸாரைப் புடைசூழ நிறுத்திவிட்டு குண்டர் கள் மூலம் நாடாளுமன்ற உறுப் பினர்களைத் தாக்கியது. அதன் விளைவு இன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களை நாடாளுமன்றக் கட்டடத் தினுள் கிளர்ந்தெளச் செய்துள்ளது.

சாத்வீக வழியிலான அத்தகைய கிளர்ச்சி இப்போது ஒரு குண்டுப் புரளிமூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய முறையிலான நடவடிக் கைகளும் இன்னொரு தர்க்கபூர்வ விளைவிற்கே இட்டுச்செல்லும்.


மஹிந்த

இலங்கை நாடாளுமன்றத்தைத் தமிழர் தமக்கெதிரான சட்டப் பயங்கர வாதத்தின் மையமாகப் பார்க்கும் நிலை வளர்ந்து செல்கின்றது. ஆதலால், நாடாளுமன்றத்தைத் தமிழர் ஒரு கௌரவமான நிறுவனமாகக் கருதும் நிலை அருகியே செல்கின்றது. தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான நாடாளுமன்றத்தின் சட்டங்கள் நாடாளுமன்றம் பற்றிய ஓர் எதிர்மறை விளைவிற்கே தமிழரைத் தள்ளியுள்ளன. தமிழரின் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வைக் காணப்போகின்றீர்கள் என்று அமைச்சராய் இருந்த ஒக்ஸ்பேட் கல்விமான் லலித் அத்துலத் முதலியிடம் அவரது ஒக்ஸ்போட் நண்பன் கலாநிதி டேவிட் சல்போன் 1980களின் முற்பகுதியில் கேள்வி எழுப்பியபோது லலித் கூறினார். ''தமிழர்களின் மண்டைகளை நொருக்கப்போகின்றோம்'' என்று தமிழர்களின் தலைகளை நொருக்க முற்பட்டதன் விளைவு தலைநகரம் நொருங்கி எரியும் யதார்த்தத்திற்குத் தள்ளப்படுவதில் முடிந்துள்ளது.

### எதிர்மறையான விளைவுகளுக்கு இட்டுச்செல்லும் செயல்கள்

தமிழருக்கு எதிரான வகையில் ஆட்சியாளர்களின் மேற்கூறியவாறான செயல்கள் எல்லாம் ஆட்சியாளர்கள் விரும்பியதற்கு நேர் எதிர்மாறான விளைவு களுக்கு வரலாறு இட்டுச் செல்கின்றது என்பதே வரலாற்றின் யதார்த்தமாய் உள் ளது.

வரலாற்றுத்தர்க்கபூர்வ யதார்த்தம் இப்படிச் செல்கையில், சிங்கள ஆட சியாளர்களின் பதவி வேட்டைக்கான யதார்த்தம் வேறுவிதமாய்ச் செல்கின்றது. இத்தகைய இரு யதார்த் தங்களும் ஒன்றுக்கொன்று எதிர்க் கணியமாகச் செல்வதால் அவை அரசியற் சமரசத்திற்கான வாய்ப்புக்களை வெளியே தள்ளி விட்டுள்ளன.

அனைத்துச் சிங்கத் தலை வர்களுக்கும் பதவிப்போட்டி யதார்த்த அரசியலில் சமயோசித மதிநுட்பம் படைத்தவர்களாவர். அவர் களது சமயோசித மதிநுட்பமா னது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படாது பதவி வேட்டைக்கு இனப் பிரச்சினையைச் சாதுரியமாகப் பயன்படுத்துவதையே இலக்காய்க் கொண்டுள்ளது. தமிழருக்கு எதிராகத்தான் பிசாசுடன் கூட் டுச்சேரத் தயார்' என்று அப்போது ஜனாதிபதியாய் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 1980களின் மத்தி யில் கூறினார்.

இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா முதல் இன்றைய ஜனாதபதி ராஜபக்ஷ வரை அனைத்துச் சிங்களத் தலைவர்களும் தமிழருக்கு எதிராக எத்தகைய 'பிசாசுகளுடனும்' கூட்டுச்சேரும் இயல்பையே கொண்டவர்கள். இதில் வலது சாரி கள் என்றும் இடதுசாரிகள் என்றும் எத்தகைய வேறுபாடும் இல்லை.

### யுத்தத்தின் மீதான விசுவாசத்தை நிருபித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

இலங்கையிலுள்ள அனைத்து நாடாளுமன்றச் சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் அடிப்படையில் வறண்டவாத, அரைகுறைத் தொழிற் சங்கவாத, இனவாத சக்திகளாகவே உள்ளன. இவர்கள் தருணம் வரும் போதெல்லாம் ஏதோ ஒரு வறண்டவாதத்தத்துவ விளக்கத்தைக் கூறிக்கொண்டு எத்தகைய உள்நாட்டு, வெளிநாட்டு பிற்போக்குச் சக்திகளுடனும் கூட்டுச்சேர்ந்து விடுவார்கள். தமிழருக்கு எதிராக ராஜபக்ஷ - ஜே.வி.பி. கூட்டு அரசாங்கம் எத்தகைய வெளிநாட்டு உதவிகளையும் பெறத்தயா ராக இருக்கும் உண்மையானது இதனைத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டவல்ல, அல்லது அவர்களின் நம்பிக்கையைப் பெறவல்ல சிங்களக் கட்சிகள் எதுவும் இலங்கையில் இல்லை. வலதுசாரிகளோ அன்றி இடதுசாரிகளோ எவ்வகைக் கட்சிகளாயினும் சரி தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறவல்ல வகையில் நடந்துகொள்ளவில்லை.

அப்படியிருந்த போதிலும் 1994ஆம் ஆண்டுத்தேர்தற் காலத்தில் திருமதி சந்திரிகாவின் மீது தமிழ் மக்கள் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தி அமோக ஆதரவளித்தனர். அக்காலத்தில் நல்லூர் கோயில் வீதியில் ''சந்திரிகா சுளகு, சந்திரிகா வளையல், சந்திரிகா சீப்பு'' என சந்திரிகாவின் பெயரை மதிப்புடன் வர்த்தக நிலையங்களில் உச்சரித்தனர். இது சந்திரிகாவின் மீது தமிழ் மக்கள் வைத்த ஆர்வமான நம்பிக்கையின் வெளிப்பாடகக் காணப்பட்டது. ஆனால் சந்திரிகா அதனை முற்றிலும் எதிர்மறையாக்கி விட்டார். அவர் சமாதானத் தீர்வின் மீது தனது விசுவாசத்தை நிரூபிக்காது யுத்தத்தின் மீதான தனது விசுவாசத்தையே நிரூபித்தார்.

### அரசியல் சதுரங்கம் ஆடினார் ரணில்

நல்லூர் வீதியில் தியாகி திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்த போது ஒரு தமிழ் மூதாட்டி அக்கோவில் வீதியில் திலீபனுக்கு திலகமிட்டு சாகும்வரையான உண்ணாவிரத்திற்கு வழியனுப்பினார். அப்போது ஜே.ஆர்.அரசாங்கத்தில் திரு. ரணில் ஒரு பொறுப்புவாய்நத அமைச்சராக இருந்தார். திலீபனின் உண்ணாவிரதத்திற்கு மதிப்பளிக்காத இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களுள் ஒருவராய் ரணில் இருந்ததையும் மறந்து திலீபனுக்கு ஒரு தமிழ் மூதாட்டி திலகமிட்ட அதே கோவில் வீதியில் இன்னொரு தமிழ் மூதாட்டி 2002ஆம் ஆண்டு ரணிலுக்கு திலகமிட்டு அவர் மீது தமது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இது ஒரு எதிர்முரண் யாதார்த்தம். இது ஒருபோதும் ஒப்பிடப்பட முடியாத வேதனை அளிக்கவல்ல வரலாற்று தாரணம். ஆனால் ரணில் அரசியற் சதுரங்கத்தை ஆடினாரே தவிர சமாதானத்தின் மீதான தமது விசுவாசத்தை நிரூபிக்கவல்ல எத்தகைய போராட்டத்தையும் அவர் நடத்திக் காட்டவில்லை.

இப்போது ராஜபக்ஷவின் காலம், தமிழ் மக்கள் சலித்துப்போன அனுபவத்தின் மூலம் ராஜபக்ஷவின் மீது எத்தகைய நம்பிக்கையும் வைப்பதாய் இல்லை. ஆனால் ராஜபக்ஷதான் சமானாதத் தீர்வைக் காணப்போவதாகக் கூறுகிறார். யதார்த்தத்தில் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளது என்பது மட்டும் உண்மை.

### சமாதானத்தை சாத்தியமற்ற முனைக்குத் தள்ளும் ராஜபக்ஷ

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் பிரச்சினைக்குத்தான் தீர்வு காணப்போவதாக ராஜபக்ஷ ஒரு புறம் கூறியுள்ள போதிலும் மறுபுறம் ஐ.தே.கவைப் பகைநிலைக்குத் தள்ளும் வகையில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவி கொடுத்துத்தன் பக்கம் மாற்றும் நாடகத்தில் ஈடுபட்டுள்ளார். இது ஐ.தே.கவின் நல்லாதரவுடன் தீர்வு காண்பதற்குரிய பாதையை மூடி ராஜபக்ஷ ஐ.தே.க. மோதலுக்கே கொண்டு செல்லும் என்பது தெரிந்திருந்தும் ஜனாதிபதி இப்படி நடந்து கொள்வது ''சமாதானத்தை'' சாத்திய மற்ற முனைக்குத் தள்ளியுள்ளது.

அதேவேளை ஐ.தே.கவை உடைக்கும் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிரான தமது போர் உத்தியாக சமாதானத்திற்கான தமது ஆதரவைத் தாம் விலக்கிக்கொள்ள நேருமென ஐ.தே.க. அறிவித்துள்ளது. இவ்வாறு இருதரப்பினரும் தமது பதவிப் போட்டிக்குப் பலியிடுவது தமிழ் பேசும் மக்களையே



ஆகும். ஐ.தே.கவை ராஜபக்ஷ உடைப்பது வெறும் பதவி விவகாரம் மட்டுமே தான். ஆனால் அதனை இப்போது ஓர் இனவிவகாரமாக்கிவிட்டார்கள். ஆதலால் எத்தகைய சிங்கள கட்சிகள் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்க முடியாத நிலையே அரசியல் யதார்த்தமாகும், இந்நிலையில் சமாதானத் தீர்வு, அதற்கான பேச்சு என்பன பற்றிய மதிப்பீடு மிகவும் தலையாய அம்சமாகும்.

தற்போதைய நிலையில் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையேயான இராணுவ வல்லாண்மை நிலையானது. புலிகள் பக்கம் தூக்கலாக உள்ளது என்பது மிகவும் வெளிப்படையான உண்மையாகும்.

அதாவது அரசு தன்னிடம் இருக்கும் சொந்த இராணுவ பலத்தில் யுத்தம்புரிய முடியாது என்ற யதார்த்தத்தின் நிமிர்த்தமே அது இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் இராணுவச் சரணாகதிக்குக் கைநீட்டியுள்ளது. மேலும் சீனா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளை நோக்கியும் தன் கரங்களை நீட்டியுள்ளது. அதாவது, உள்நாட்டு இராணுவ வலுவைப் பெற்றுக்கொண்டு புலிகளை எதிர்கொள்ள முடியாது என்பதை அரசு தெளிவாக உணர்ந்துள்ளது.

### அரச இயந்திரத்தை தமிழ் மண்ணுக்கும் வெளியேயும் சேதமாக்கும் சக்தி புலிகளிடம்

அடுத்து இரண்டாவது அம்சம் புலிகளால் நேர்கணிய வெற்றிகளைத் தமிழ் மண்ணில்ஈட்டமுடியுமா இல்லையா என்ற வாதத்திற்கு அப்பால் அரச இயந்திரத்தை தமிழ் மண்ணுக்கு வெளியேயும் உள்ளேயும் பெரிதும் சேதமாக்க அவர்களால் முடியும். இனி ஒரு யுத்தம் ஏற்படின் அது தெற்கை எரிக்கும் என்று விமானப்படை முன்னாள் தளபதி ஹரிகுணதிலகா கூறியுள்ளமை அனைத்து இராணுவ விற்பன்னர்களுக்கும் தெரிந்த விடயம்தான்.

அதாவது, தன்னைப் பாதுகாக்க முடியாத அரச இயந்திரம் இராணுவ வல்லாண்மையைக் கொண்டதாகக் கருதமுடியாது. புலிகள் வெற்றிபெறுவார்களோ இல்லையோ என்பதற்கு அப்பால் புலிகளால் அரச இயந்திரத்தை இராணுவ ரீதியில் சிதைக்க முடியும் என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

இதிலுள்ள இன்னொரு முக்கிய விடயம் என்னவெனில் யுத்தம் ஒன்று தொடங்கினால் அரசின் பொருளாதாரச் செயற்பாடுகள் முற்றிலும் படுத்துவிடும் என்பது மட்டுமல்ல பொருளாதாரப் போக்கு எதிர்கணிய நிலைக்குப் போய்விடும். பொருளாதாரச் செயற்பாட்டிற்கான வாய்ப்பை இராணுவ வல்லாண்மையிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. ஆதலால், பொருளாதாரம் படுக்கமுடியும் என்பதும் அரசுக்கு இராணுவ வல்லாண்மை யின் வீழ்ச்சிகரமான பக்கமாகும்.

இவ்வகையில் ஆகக் குறைந்த பட்ச மதிப்பீட்டின்படி பார்த்தாலே இராணுவ வல்லாண்மை புலிகளின் பக்கம் தூக்கலாகவே உள்ளது. இப்பின்னணியில் புலிகள் பேச்சுக்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்ற அச்சமே தெற்கில் பரவலாகக் காணப்பட்டது. ஆனால், புலிகள் அதற்கு மறாக ஜெனீவாவில் பேசச் சம்மதித்ததுடன் அப்பேச்சில் ஈடுபடப்போகும் தமது பக்க பெயர்ப்பட்டியலையும் கூடவே வெளியிட்டனர். அரசுக்கு முன்னர் புலிகள் பெயர்ப்பட்டியலைச் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

### அரச கூட்டணியினர் மத்தியில் அதிர்வுகளை உண்டாக்கிய ஏவுகணை

புலிகள் இவ்வாறு நடந்துகொண்டமையானது ராஜபக்ஷ அரசின் கூட்டணியினர் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஒருவகையில் புலிகள் கிளிநொச்சியிலிருந்து கொழும்பிற்கு ஏவிய அரசியல் ஏவுகணையாய் இது அமைந்தது. இந்த அறிவிப்பின் மூலம் புலிகள் இரு நன்மைகளை அடைந்துள்ளனர். ஒன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் நற்பெயரைச் சம்பாதிக்க முடிந்தமை. இரண்டு, ராஜபக்ஷ அணிக்குள் அரசியல் இழுபறி வளர்வதற்கேற்ற ஆப்பை இறுக்கியமை என்பதாகும்.

''இராஜதந்திரம் என்பது இரத்தம் சிந்தா யுத்தம்;
யுத்தம் இரத்தம் சிந்தும் இராஜ தந்திரம்''

இந்நிலையில் ஜெனீவாவும் ஒரு யுத்தகளம். இலங்கையின் அரசியல் யதார்த்தத்தின் படி பேச்சு என்பது 'விடிவாமளவும் விளக் கணையமாயை' என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று முதல் கொழும்பில் ஆரம்பம்

19 வயதுப் பிரிவுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுபபோட்டி இன்று முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது தடவையாக இலங்கையில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் 16 நாடுகளின் அணிகள் பங்குபற்றுகின்றன. கொழும்பிலுள்ள 5 விளையாட்டு அரங்குகளில் 15 நாள்கள் இப்போட்டிகள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன.

19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் மூலம் கிரிக்கெட் உலகிற்கு புதிய பல வீரர்கள் அறிமுகப்படுத்தப் படுகின்றார்கள். இப்போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டும் வீரர்கள் அந்தந்த நாடுகளின் தேசிய அணியில் இடம் பிடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இதன் மூலம் கிடைக்கின்றது.

இன்று ஆரம்பமாகும் போட்டியின் மூலம் யார் ஜொலிக்கப்போகிறார்கள், யார் தேசிய அணியில் இடம்பிடிக்கப் போகிறார்கள் என்பது போட்டியின் முடிவிலேயே தெரியவரும்.

இப்போட்டியில் பங்குபற்றும் 16 அணிகளும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரிவு 'ஏ'யில் பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ் மற்றும் உகண்டா ஆகிய நான்கும் -

'பி' பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகியனவும் -

'சி' பிரிவில் இந்தியா, இலங்கை, ஸ்கொட்லாந்து மற்றும் நமீபியா என்பனவும்

'டி' பிரிவில் இங்கிலாந்து, சிம்பாப்வே, அயர்லாந்து, நேபாளம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

# ஆஸி.மங்கை நீச்சல் சாதனை

மெல்பேர்ணில் நடைபெற்ற ஆஸ்திரேலிய தேசிய நீச்சல் போட்டியில் மகளிர் 100மீ ஃப்ரீ டைல் பிரிவில் லிபி லென்டன் உலக சாதனை படைத்துள்ளார்.

கடந்த் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில், 20 வயது லென்டன் 53.42 விநாடிகளில் பந்தய தூரத்தை நீந்திக் கடந்து சாதனை புரிந்தார்.

இதற்கு முன்பு 2004 எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஜோடை ஹென்றி 53.52 விநாடிகளில் நீந்தியதே உலக சாதனையாக இருந்தது.

# சர்வதேச கிரிக்கெட் தரப் பட்டியலில் இலங்கை அணிக்கு 7 ஆவது இடம்

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதில் இலங்கை அணி 7ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.



ஆஸ்திரேலியா 133 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முன்னிலையில் இருந்து வருகிறது. தென்னாபிரிக்கா (119 புள்ளிகள்) இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் (116 புள்ளிகள்) மூன்றாவது இடத்திலும் நியூசிலாந்து (112 புள்ளிகள்) 4 ஆவது இடத்திலும் இந்தியா (109 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும் உள்ளன.

இங்கிலாந்து, மேற்கிந்தியா, சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் முறையே 6 ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலில் 803 புள்ளிகள் பெற்று ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் முதல் இடத்திலுள்ளார். கில்கிறிஸ்ட் (ஆஸ்திரேலியா), ஸ்மித் (தென்னாபிரிக்கா), சைமன்ஸ் (ஆஸ்திரேலியா), முகமது யூசுப் (பாகிஸ்தான்), கிறிஸ் கெய்ல் (மேற்கிந்தியத் தீவுகள்), இன்சமாம் உல் - ஹக் (பாகிஸ்தான்), குமார் சங்கக் கார (இலங்கை), கிளார்க் (ஆஸ்திரேலியா), ராகுல் ராவிட் (இந்தியா) ஆகியோர் முறையே 2 முதல் 10 வரையான இடங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய வீரர் மெக்ராத் 829 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலுள்ளார்.

பிரட் லீ (ஆஸ்திரேலியா), ஷேன் பொலக் (தென்னாபிரிக்கா), முரளிதரன் (இலங்கை), நவிஸ் (பாகிஸ்தான்), சமிந்தவாஸ் (இலங்கை), வெட்டோரி (நியூசிலாந்து), இர்பன் பதான் (இந்தியா), மார்க்ந்தினி (தென்னாபிரிக்கா), ஷேன் பொண்ட் (நியூசிலாந்து) ஆகியோர் 2 முதல் 10 ஆம் இடம்வரை உள்ளனர்.

சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் பட்டியலில் இங்கிலாந்து வீரர் பிளின்ரொப் (4524 புள்ளிகள்) முதலாம் இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்க வீரர் ஷேன் பொலக் (3812) 2ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியா வீரர் சைமன்ஸ் (3811 புள்ளிகள்) 3ஆவது இடத்திலும், பாகிஸ்தான் வீரர் சொகைப் மாலிக் (3600 புள்ளிகள்) 4 ஆவது இடத்திலும், மேற் கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்ல் (3453 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும் உள்ளார். ★

# தரவரிசையில் சானியா சறுக்கல்



உலகத் டெனிஸ் தரப்படுத்தல் வரிசையில் இந்திய வீராங்கனை சானியா மிர்ஷா 34 ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

இந்தியாவின் இளம் 'நட்சத்திரப் புயல்' என்று வர்ணிக்கப்பட்ட சானியா மிர்ஷா கடந்த வருடம் தனது ஆட்டத்தின் மூலம் ஒற்றையர் வரிசையில் 31 ஆவது இடத்தைப் பிடித்திருந்தார்.

ஆனால், கடந்த மாதம் நடைபெற்ற முதல் ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டியில் மிர்ஷா 2 ஆவது சுற்று ஆட்டத்திலேயே தோல்வி கண்டு வெளியேறினார். இரட்டையர் பிரிவிலும் சானியா 2 இடங்கள் பின் தள்ளப்பட்டு 111 ஆவது இடம் பெற்றுள்ளார்.

உலக ரென்னிஸ் தரப்படுத்தலில் பெல்ஜியம் நாட்டு வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் முத லிடம் பிடித்துள்ளார்.




# சதுரங்கத்தில் ஆனந்த் ஆட்சி



கோரூஸ் சதுரங்கப் போட்டியில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் 5ஆவது தடவையாக சம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.

போலந்து நாட்டு முன்னணி வீர வீரங்கனைகள் பங்கேற்கும் கோரூஸ் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன் 13 ஆவது மற்றும் கடைசிச் சுற்று கடந்த திங்கட்கிழமை நடந்தது. சம்பியன் பட்டத்தை வெல்வது யார் என்பதனை தீர்மானிக்கும் இந்த ஆட்டத்தில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த், இஸ்ரேல் வீரர் போரின் ஜெல்பாண்டை எதிர் கொண்டார்.

5 மணித்தியாலங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் 66 காய் நகர்த்தல்களுக்குப் பிறகு ஆனந்த் வெற்றிபெற்றார். மற்றோர் ஆட்டத்தில் உலக சம்பியன் வைசெலிங் தபலோங் [பல்கொரியா] நடப்புச் சம்பியனான பீட்டர்லிகேணியை [கங்கேரி] சந்தித்து போட்டியைச் சமன் செய்தார்.

12 ஆவது சுற்றினை தபலோங் ஆனந்த்தைவிட முன்னிலை வகித்தார். கடைசிச் சுற்று சமநிலையில் காணப்பட்டது. ஆனால் ஆனந்த் அதில் வெற்றிபெற்றார்.

கடைசிச்சுற்று ஆட்டத்தின் முடியில் தபலோங், ஆனந்த் ஆகிய இருவருக்கும் தலா 9 புள்ளிகள் பெற்றதால் சமநிலை உடைப்புப் புள்ளி முன்னணி அடிப்படையில் ஆனந்த் சம்பியன் பட்டத்தை வென்றார் என அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் ஆனந்த் 5 ஆவது தடவையாக சம்பியன் பட்டம் பெற்றுச் சாதனை படைத்தார்.

# இன்சமாமை முடக்கிய முதுகுவலி



முதுகுவலிக்குச் சிகிச்சை பெறுவதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இன்சமாம் - உல் -ஹக் வெளிநாடு செல்லக்கூடும் என்று தெரிகிறது.

முதுகு வலி காரணமாக இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற 3 ஆவது டெஸ்டில் இன்சமாம் பங்கேற்கவில்லை.

இதற்கிடையே நாளை தொடங்கவுள்ள ஒரு நாள் தொடரிலாவது இன்சமாம் பங்கேற்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்புகிறது.

இந்நிலையில், முதுகு வலி சிகிச்சைக்காக வெளிநாட்டில் உள்ள சிறப்பு மருத்துவர் எவரிடமாவது இன்சமாமை அனுப்புவது குறித்து கிரிக்கெட்சபை ஆலோசனை செய்து வருகிறது.

இது குறித்து அதன் தலைவர் ஷஹாரியார் கூறும்போது:-

" முதுகு வலி என்பது இன்சமாமுக்கு பழைய பிரச்சினைதான். அவர் சில பயிற்சிகளை முறையாக செய்துவந்தால் நிவாரணம் கிடைக்கும். மேலும் வெளிநாட்டில் சிகிச்சைபெற மேற்கொள்ளும் பயணம் அவருக்கு சிரமத்தையே அளிக்கும். ஒருநாள் தொடரிலும் இன்சமாம் பங்கேற்கக் கூடாது என்று வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இருப்பினும் இத்தொடரில் அவர் பங்கேற்க முடியும் என்று நம்புகின்றோம். அதேவேளையில் இன்சமாமுக்கு நீடித்த பலன் தரக்கூடிய சிகிச்சை கிடைக்கவேண்டும் என்றும் முயற்சித்து வருகின்றோம் - என்றார்.

# கூட்டுமுயற்சியால் கிடைத்த வெற்றி

கூட்டுமுயற்சியால் கிடைத்த கராச்சி டெஸ்ட் கிரிக்கெட் வெற்றி மூலம் இந்தியாவைத் தோற்கடித்து தொடரைக் கைக்கற்றியது பாகிஸ்தான்.

இப்போட்டித் தொடரின் முதலிரு போட்டிகளும் வெற்றி தோல்வி இன்றி முடிந்தமையால் மூன்றாவது போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சொந்த மண்ணில் நடைறெுவதால் பாகிஸ்தானும் அன்னிய மண்ணில் வெற்றிக் கனியைப் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்திய அணியும் கடுமையாகப் போராடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடந்ததோ வேறு பாகிஸ்தானியர்கள் நினைத்ததைச் சாதித்து விட் டார்கள்.



மூன்றாவது போட்டி இடம்பெற்ற மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமாக இருந்தது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி வெறும் 245 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் பதான் பாகிஸ்தானின் முக்கிய விக்கெட்டுக்களை அடுத்தடுத்து சாய்த்தனர். 'ஹட்ரிக்' சாதனையும் ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவதுபோட்டியில் இளம் வீரர் இப்பாலின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அதே போல முகம்மது யூசப், யூனிஸ்கான் ஆகிய இருவருமே தாம் அனுபவ வீரர்கள் என்பதை இந்த டெஸ்டிலும் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர். இருந்தாலும் இந்த வெற்றிக்கு அடிப்படை மூல காரணமாக இருந்தவர் கம்ரான் அக்மல் என்றால் மிகையாகாது.

முதல் இன்னிங்ஸில் தொடக்கத்திலேயே பாகிஸ்தான்அணியின் முக்கிய விக்கெட்டுக்கள் வீழ்ந்தபோது மிகச் சொற்ப ஓட்டங்களுக்குள் சுருண்டுவிடும் என்றுதான் எதிர்பார்த்தனர். ஆனால், கம்ரான் அபாரமாகஆடிஅணிக்கு ஒரு கௌரவமான இடத்தை பெற்றுக்கொடுத்தார். அவரது ஆட்டம் தான் பாகிஸ்தான் வீரர்களுக்கு உற்சாகத்தை அளித்தது. கம்ரனின் சதத்தின் உதவியால் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 245 ஓட்டங்களைப்பெற்றது.

பாகிஸ்தான் அணியின் நிலைமை இவ்வாறு என்றால் இந்திய அணியின் நிலைமை படுமோசமாக இருந்தது. அந்த அணி தனது முதல் இன்னிங்ஸில் வெறும் 238 ஓட்டங்களுக்குள் சுருண்டது. யுவராஜ்சிங், பதான், கங்குலி ஆகியோர் ஓரளவு கௌரவமாக ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தபோதும் முன்னணி வீரர்கள் எவரும் பிரகாசிக்கவில்லை. பாகிஸ்தானின் அப்துல் ரஷாக், முகமது ஆஸிப் ஆகியோர் துல்லியமாக பந்துவீசி முறையே 4, 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி தமது முதல் இன்னிங்ஸின் நிலை உணர்ந்து நிதானமாகவும் பொறுமையாகவும் விளையாடி ஓட்டங்களைக்குவித்து யூனிஸ்கான், அப்துல் ரசாக், முகமது யூசுப் ஆகியோர் தம் பங்குக்கு ஓட்டங்களைக் குவித்தனர். அதேநேரம், அணித்தலைவர் இன்சமாம் - உல் - ஹக்குப் பதிலாகக் களமிறங்கப்பட்ட இக்பால், திறமையாகத் துடுப்பாடி தனது கன்னிச் சதத்தைப் பூர்த்திசெய்ததுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர வழிசெய்தார். இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தானிய அணியினரின் துடுப்பாட்டத் திறமையால் இந்திய அணிக்கு 606 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தானைச் சிதறடித்த இந்திய பந்து வீச்சாளர்களால் அந்த அணியை முழுமையாக ஆட்டம் இழக்கச் செய்ய முடியாது போனது. அவர்கள் தமது அணியின் ஸ்திர நிலையை உணர்ந்து வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு விக்கெட்டுகள் முற்றாக வீழ்த்தப்படாத நிலையில் இடைநிறுத்திக் கொண்டனர்.

ஆனால், இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் தமது நிலை உணர்ந்து விளையாடவில்லை. யுவராஜ் சிங்கைத் தவிர வேறு எவரும் சோபிக்கவில்லை. பந்துவீச்சைப் பொறுத்தவரை இந்த இன்னிங்ஸிலும் முகம்மது ஆஸிப், அப்துல் ராசிக் ஆகியோரே அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அணியின் தோல்விக்கு, அணியின் கூட்டு முயற்சி இன்மையே காரணம். இதனை அணித் தலைவர் ராவிட்டே ஒப்புக்கொண்டுள்ளார். பாகிஸ்தானைப் பொறுத்தவரை இந்த வெற்றிக்குக் காரணம் அணியின் கூட்டு முயற்சியேயாகும்.

இதேவேளை இவ்விருஅணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டிநாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இதிலும் இந்தியர்கள் சொதப்புவார்களாக அல்லது டெஸ்ட் தொடரில் இழந்த மானத்தை ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றி மீட்பரா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டமை இயல்பு நிலையின் பாதிப்புக்கு எடுத்துக்காட்டு

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் இயல்புநிலை மோசமடைந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தினை வன்மையாக கண்டிப்பதுடன், இத்தகைய நிகழ்வானது முன்னெடுக்கவுள்ள சமாதான செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் ஒன்றாகவே அமையும் என்பதனை தெளிவுபடுத்துகின்றோம்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெலிகந்தை இராணுவ சோதனைச்சாவடிக்கு அண்மையாக வைத்து 5 தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களும் மற்றும் ஐவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத வகையிலும், ஸ்ரீலங்கா இராணுவமும், அனோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக் களின் கைவரிசையில் கடத்தப்பட்டுள்ளனர். பேச்சுக்கான இடம் குறித்து இருதரப்பும் இணக்கம்காணப்பட்டுள்ள இந்நிலையில், ஓர் இயல்பு நிலையை ஏற்படுத்தி, சமாதானத்திற்கான பாதையை மேலும் பிரகாசமாக்க வேண்டி ஸ்ரீ லங்கா அரசாங்கம், இவற்றினை மேற்கொள்ளாது தனது இராணுவத்தினதும், அதனது ஒட்டுக் குழுக்களினதும் உதவியுடன் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை அராஜகத்தை அரங்கேற்றி வருவது வேதனையும் பெரும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிங்கள இனவாத அரசு தனது இனவாத போக்கினை மாற்றப் போவதிலலை என்பதனை வெளிப்படுத்தும், உணர்த்தும் நிகழ்வாகவே தற்போதைய நிகழ்வுகளை நோக்க வேண்டியுள்ளது.

ஒரு தொண்டு நிறுவனபணியாளர்கள் கடத்தப்படுவது என்பது நாட்டின் இயல்பு நிலை எவ்வளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறான தொண்டு நிறுவன பணியாளர்கள் மீதான அச்சுறுத்தலானது, ஏனைய தொண்டு நிறுவனங்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகவே அமைகின்றது.

எனவே, கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசும், அதன் தலைவர் ஜனாதிபதி அவர்களும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். தமக்கு எதுவுமே தெரியாது என்ற ஏமாற்று வேலைகளை விடுத்து, இனியும் தமிழர் தரப்பை ஏமாற்ற எத்தனிக்காது, அரசியல் கபட நாடகத்தை நிறுத்தி சமாதானத்தில் பற்றுதியான போக்கை கடைப்பிடிக்க ஸ்ரீலங்கா அரசை வேண்டுகின்றோம். எனவே, கடத்தல் சம்பவத்தினை கண்டிப்பதுடன் குறிப்பிட்ட பணியாளர்களை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# 2ஆம் ஆண்டு நினைவலையில்

பூவுலகில் 14 12 1935

புகழுலகில் 29 01 2004



அமரர்

## புரநிருபசிங்கம் பரம்சோதி

(இளைப்பாறிய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், RRAN மாவட்ட இணைப்பாளரும்)

சீர் பூத்த செம்மல் காரிருள்சூழ்ந்த பாரினில்,
சான்றோர் போற்றும் பேரொளியாகி,
பல்வேறுபட்ட அரசினரிடமும் தனியாரிடமும்
சிறந்த நிர்வாகத்திறன் மிக்கோன் எனப்
பேரெடுத்து, தன்வழிபோன்று, துணிகரம்,
பண்பு, அறிவு, சமத்துவமிக்க செயல்வீர
அறுவரை பூவுலகில் பணிதொடரச் செய்து,
விண்ணுலகிலும் தன் குடும்ப இறைதூதனாகி,
மறைந்திட்ட எங்கள் குடும்பத் தெய்வத்தின்
நிர்மலமான உதிர்வின் துயரை,
துவி திங்களாகியும் சிவமயமான அமரரின்
நினைவில் வாழும் அன்புள்ளங்கள்.

மனைவி, பிள்ளைகள்.

'மகேசபவன்'
163,3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



MÉDICOS DO MUNDO

MDM – PORTUGAL

**Médicos do Mundo – Portugal (MdM-P)** is a medical, humanitarian, non-governmental and non-profit organization based in Lisbon, Portugal, whose aim is to provide assistance to vulnerable populations regardless of their religion, ethnic identity and race, to victims of natural disasters, war and/or famine, or to refugees forced into expatriation. **MDM – Portugal** is looking for a person to work under the **MDM – P** Field Office in Vadamarachi North for the following position:

**POST OF CIVIL ENGINEER (01 POSITIONS)**

- Must possess B.Sc. degree in Civil Engineering;
- Good communication and interpretational skill & knowledge in excel, word, M-project & AutoCAD;
- High level proficiency in written and spoken English and Tamil (proficiency in Singhalese is a plus factor);
- Ability to function effectively in a team environment.

**Duty stations** – Vadamarachi North (Point Pedro)
**Duration** – Initial appointment will be for 6 (six) months with a possibility of extension
**Remuneration** – Negotiable

**Women are encouraged to apply**

Please send the letter of application with a complete CV to **MDM Portugal Office, Base Hospital Point Pedro, Point Pedro** on or before the 17th of February 2006.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 11 - 05 - 1948

உதிர்வு 06 - 01 - 2006



திருமதி

## விஜயகுமாரி இராஜேந்திரா

காலமெல்லாம் இப்பாரினில் எங்கள் உயர்விற்காக பாடுபட்டு ஓய்ந்த எங்கள் குடும்ப விளக்கிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள் உரித்தாகுக!

06.01.2006 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவியின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் சகல விதத்திலும் உதவி செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:- இன்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

விமலஸ்தான், இணுவில்மேற்கு,
இணுவில்.தொ.பே.: 021 222 7781,
0777 82 5617

கணவர், மகள், மகன், மருமகள்
இலக்கம் 7,46 [illegible]
கொழும்பு-6 தொ.பே. [illegible]



# பிறவுன்ஸ் காட்சியறை
# BROWN & CO LTD

SHARP - ELBA - CORNEL - SUMEET

SHARP CORPORATION OSAKA, JAPAN

யாழ்.நகரில் மிகவும் பிரபல்யமான பிறவுன்& கம்பனி தற்பொழுது வீட்டுப்பாவனைப் பொருள்களை விஷேட விலைக் கழிவில் வழங்குகின்றது.




- பொருட்களின் தரம், நம்பகத்தன்மை
- அனைத்து பொருள்களுக்கும் உத்தரவாதம்
- A/C பொருத்தல்கட்டணம் (FITTING) இலவசம்
- போட்டோ கொப்பியர் இலவச விநியோக சேவை
- விற்பனைக்கு பிந்திய சேவை

போன்றவற்றினால் இப்பொழுது யாழ்நகரில் இலத்திரனியல் பொருள்களை விற்பனை செய்வதில் முன்னனி வகிக்கிறது.




இச்சேவைகளை நீங்களும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய முகவரி:

பிறவுன்ஸ் காட்சியறை
89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே; 021 222 5150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ஹெய்மின் வருகையும் ஏற்பட்டுள்ள நம்பிக்கையும்

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அதிகரித்த வன்முறைகள் காரணமாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. இதில் படையினர், பொதுமக்கள், புலிகள் என சகலரும் அடங்குவதாக தெரிவிக்கப் படுகின்றது. இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. இம்மோதல்கள், தாக்குதல்கள் மீண்டுமொரு யுத்தத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற பயத்தினால் மக்கள் தவித்த வேளையில் தான் நோர்வேயின் சமாதான தூதர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் இடம்பெற்றது.

தனது விஜயத்தின் போது ஜனாதிபதியை சந்தித்து தற்போதைய சூழல் குறித்தும், இடம்பெறவுள்ள பேச்சு குறித்தும் கருத்துக்களை பெற்றுக்கொண்ட அவர் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் தரப்புக்களை சந்தித்திருந்தார். குறிப்பாக முஸ்லிம் காங்கிரசானது பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவது குறித்து எரிக் சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியதாக தெரிவித்தது.

அதேபோல எரிக்சொல்ஹெய்ம் தனது விஜயத்தின் முக்கிய நோக்கமான கிளிநொச்சி விஜயத்தின் போது பேச்சுக்கான இடம் குறித்து தீர்மானிப்பதில் வெற்றி கண்டார். குறிப்பாக விடுதலைப்புலிகள் நோர்வேயில் பேசவேண்டும் என்ற முடிவிலிருந்து இறங்கி ஜெனீவாவில் பேசுவதற்கு உடன்பட்டமையானது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானதாக அமைந்தது. இது குறித்து சமாதான தூதர் எரிக்சொல்ஹெய்ம் குறிப்பிடும்போது,







"போர்நிறுத்த மீறல்கள் அனைத்தும் இலங்கை மக்கள் மத்தியில் பெரும் பயத்தினை உருவாக்கியுள்ளது. இருசாராரும் இவ்வன்முறைகளை எவ்வாறு குறைத்து கொள்வது என்பது பற்றி கூடிக்கலந்துரையாட வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளனர். நேற்றைய தினம் அரசாங்கமும் இன்று விடுதலைப்புலிகளின் தலைமையிடமும் பேச்சுக்களை சிரமமின்றி சுவிற்சலாந்தில் வைக்கலாமென நோர்வே ஆலோசனை கூறியது. தொடர்ச்சியாக சமாதான முன்னெடுப்புகளிற்கு சுவிஸ் அரசாங்கம் ஆதரவளித்துள்ளது. மிகுந்த நெகிழ்வான போக்கையும் தயார் தன்மையையும் இவ்வரசாங்கம் காட்டி வந்துள்ளது. ஆகவே இரு சாராரும் சுவிற்சலாந்தில் பேச்சுக்களை நடாத்த ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்." எனத் தெரிவித்தார்.

– ஜீ. யோகப்பிரியா

அதேபோல இதுகுறித்து கலாநிதி அன்டன் பாலசிங்கம் "இதுவரை காலமும் ஏதோ விடுதலைப்புலிகள் இந்த பேச்சு எந்த இடத்தில் நடத்துவது என்பது தொடர்பாக, அதாவது நோர்வேயில்தான் நடத்த வேண்டும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்து கடும் போக்கை கடைப்பிடிக்கிறார்கள் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவி வந்தது. ஆனால் உண்மையில் நாங்கள் விட்டு கொடுத்து அதாவது நோர்வே அரசாங்கம் எங்களை கேட்டு கொண்டதற்கு இணங்க ஐரோப்பிய நாடொன்றான சுவிற்சலாந்தில் இந்த பேச்சுக்களை நடத்த இணங்கியிருக்கிறோம்." என்று தமது முடிவினை வெளிப்படுத்தினார்.

எவ்வாறெனினும் நாட்டில் சகல மக்களும் சமாதானத்தை தவிர வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. இதனை விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உணர்ந்து நிபந்தனைகள், பிடிவாதங்களை தளர்த்தி விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு ஜெனீவா பேச்சுக்களை வெற்றி பெற செய்ய வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 16

1. முழுவயதடைந்த ஆண்களும், பெண்களும் இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமான கட்டுப்பாடு எதுவுமின்றி திருமணம் செய்வதற்கும், ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணம் செய்யும் பொழுதும், திருமணம் ஆகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு.

2. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமானதும், முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

3. குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும், அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## சமரசத்தை விட நிரந்தர தீர்வே முக்கியம்



தர்கா நகரில் இடம்பெற்றுள்ள வன்முறைகள் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் ஒரு தொடர்ச்சியாகவே கணிக்கப்படவேண்டியுள்ளது. இடம்பெற்ற இந்த வன்முறைகள் மிக நீண்ட காலமாக இப்பகுதிகளில் ஒற்றுமையாக வாழ்ந்த சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே கசப்புணர்வுகளையும் மனத்தாக்கங்களையும் ஏற்படுத்தியன.

அளுத்கமை தர்கா நகரில் கையடக்க தொலைபேசி நிலையத்தில் திருட்டு முயற்சியின் போது ஏற்பட்ட தகராறே இந்த வன்முறைகளின் பின்னால் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் இந்த தகராறு இத்தனை பாரிய கலவரமாக உருவெடுத்தமைக்கு பொறுப்பற்ற காவல்துறையின் நடவடிக்கைகளே காரணமாக இருந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

– இக்பால் அஜீட்

இக்கலவரங்களை அடுத்து இப்பகுதிகளுக்கு விஜயம் செய்த அரச தரப்பு பிரதிநிதிகள் நிலமையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். முடிந்தளவு மக்களை அமைதிப்படுத்தியதுடன் வன்முறைகள் மேலும் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டுள்ள போதும் நாட்டில் இவ்வாறு அடிக்கடி இடம்பெறுகின்ற சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை தடுப்பதற்கான முயற்சிகள் ஏதும் இந்நாட்டில் இல்லை என்பது கவலைக்குரியதாகும். தாக்குதல்கள் இடம் பெறுவதும் பின்னர் சமரசம் செய்யப்படுவதும் ஒருபோதும் இவ்வாறான பாதிப்புக்களுக்கு தீர்வாக அமையப்போவதில்லை. அத்துடன் இந்நாட்டில் சிறுபான்மை இனங்கள் தொடர்ந்தும் அச்சநிலையில் வாழும் நிலைக்கு தள்ளுவதானது நிரந்தர சமாதானத்தை பாதிக்கும் என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டிய தருணம் இதுவாகும்.

## கருத்தாடல் களம்

### பாதிக்கப்பட்ட மனதின் குமுறல்

பேருவளை தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதல்கள் காலங் காலமாக சிங்கள மக்களோடு கூடிவாழும் முஸ்லிம்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கடந்த காலங்களிலும் இது போன்ற தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இவற்றை தடுக்க இந்த நாட்டில் எதுவித செயற்திட்டமும் இல்லை என்பது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாகும். பெரும்பான்மை இனம் என்பது ஆளப்பிறந்தது என்பதும் சிறுபான்மை இனம் என்பது அடங்கி வாழவேண்டும் என்பதும்தான் அவர்களது எண்ணமாக இருந்தால் நிச்சயம் அது இந்த நாட்டின் எதிர்கால சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் எனச்சொல்லிவைக்க விரும்புகிறோம்.

முகமட் அன்சார்
அளுத்கமை

### நிம்மதிப் பெருமூச்சு

மீண்டுமொரு போர் மூண்டுவிடுமோ என்ற பயத்தில் தவித்த மக்களுக்கு ஜெனீவாவில் பேச்சு என்ற செய்தியானது பெரும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. எனினும் வழமைபோல பேச்சுக்களுக்கான சூழல் ஏற்படும் போது அதனை குழப்ப முயலுகின்ற சக்திகள் இம்முறையும் பல்வேறு கருத்துகளைக் கூறி பிரச்சனைகளை ஏற்படுத்த முயலுகின்றன. வன்முறைகள் நிகழும் போது, உயிர்கள் பலியெடுக்கப்படும் போது, பேசாமல் இருந்து விட்டு, இப்போது ஏதாவது நல்லது நடக்கக்கூடிய சூழலில் பிரச்சினையை கிளப்புவது மிகவும் அநியாயமான செயலாகும்.

எம். எழில்வேந்தன்
ஹட்டன்

## சுமார் நான்கு வயது சிறுமி ஒருத்தியின் நாட்குறிப்பில் இருந்து

நாளை கட்டை அவிழ்ப்பார்கள்
எனக்கு யோசனையாக இருக்கிறது
எஞ்சியிருக்கும் என் ஒற்றைக் கண்ணால்
அப்பிள் பழத்தின் ஒரு பாதியை மட்டும்
தோடம்பழத்தின் ஒரு பாதியை மட்டும்
என் தாயின் பாதி முகத்தை மட்டும்தான்
என்னால் பார்க்க முடியுமா?
துப்பாக்கி குண்டை நான் பார்க்கவில்லை
என் தலைக்குள் வெடித்த
அதன் வலியை மட்டுமே உணர்ந்தேன்
பெரிய துப்பாக்கியுடன்
நடுங்கும் கைகளுடன்
கண்களில் ஒரு வெறித்த பார்வையுடன்
அந்த ராணுவ வீரன்
என் மனதில் அழியாதிருக்கிறான்
அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை

என் மூடிய கண்களால் இவ்வளவு தெளிவாக
அவனைப் பார்க்க முடியுமென்றால்
எங்கள் தலைகளுக்குள்ளே
நாம் இழக்கும் கண்களை ஈடுசெய்ய
இன்னும் ஒரு சோடிக் கண்கள் உள்ளன
போலும்

அடுத்த மாதம் என் பிறந்த நாளுக்கு
முற்றிலும் புதியதோர் கண்ணாடிக் கண்
எனக்குக் கிடைக்கும்
சில வேளை பொருட்கள் நடுவில் தடித்தும்
வட்டமாயும் தெரியக்கூடும்
நான் விளையாடும் கண்ணாடிக் குண்டுகள்
ஊடே
உற்றுப்பார்த்திருக்கிறேன்
அவை உலகத்தை வினோதமாய்க் காட்டும்

நான் கேள்விப்பட்டேன்
ஒன்பது மாதக் குழந்தை ஒன்றும்
ஒற்றைக் கண்ணை இழந்ததாக

என்னைச் சுட்ட ராணுவ வீரன் தான் -
தன்னை உற்றுப்பார்க்கும்
சின்னஞ் சிறுமிகளைத் தேடும்
ஒரு ராணுவ வீரன் தான் -
அவளையும் சுட்டானோ என்று
எனக்கு யோசனையாக இருக்கிறது

நானோ வளர்ந்தவள்
கிட்டத்தட்ட நாலு வயது
போதிய அளவு நான்
வாழ்க்கையைப் பார்த்துள்ளேன்
ஆனால் அவளோ சின்னக் குழந்தை
எதுவும் அறியாச் சின்னக் குழந்தை

(றஷா ஹெவ்சியே 1988 மார்ச் மாதத்தில் ஒரு கண்ணை இழந்தாள். இஸ்ரேல் வீரன் ஒருவன் றப்பர் குண்டுகளால் சுட்டபோது அவள் கண்ணை இழக்க நேர்ந்தது. அச்சமயம் றமல்லாவுக்கு அண்மையில் உள்ள அல் - பிறெஹ் என்ற ஊரில் பாட்டியின் வீட்டு மாடியில் றஷா நின்று கொண்டிருந்தாள். அச்சமயம் அதே போன்று வேறு இரண்டு குழந்தைகளும் ( இருவரும் 9 மாத வயது உடையவர்கள்) ஒவ்வொரு கண்ணை இழந்தனர். இன்திபாதா இயக்கத்தின் ஏழாவது மாதத்தொடக்கத்தில் சுமார் 40பேர் இதேபோல் பாதிக்கப்பட்டனர்.)


- தமிழில் எம். ஏ. நுஃமான்
நன்றி :- 'பலஸ்தீனக் கவிதைகள்'

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல. 713, டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி : villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியை உருவாக்கும் நிகழ்வுகள்




**யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலக ளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்ல மெல்ல மாறிவருகிறது எனலாம். எனினும் இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளை பலியெடுக்கும் நிலைமை தலை தூக்கி யுள்ளது.**


**இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்புப் பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரண வலி உணர்கின்றான்.**

**இதுவரை வெளிவந்த ஒன்பது கட்டுரைகளில் புவியதிர்வு, எரிமலைக் குமுறல் கள், உலக வெப்பநிலையேற்றத்தின் விளைவாக ஏற்படக்கூடிய பனிக்கட்டி உருகல் கடல்மட்ட உயர்வு, வெள்ளம், வறட்சி, சுனாமி போன்ற பல்வேறு இயற்கை அனர்த்தங்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.**

**இன்று பத்தாவது பாகம் பிரசுரமாகிறது.**

கடந்த வாரக் கட்டுரையில் நீரில் (பொதுவாக சமுத்திரத்தில்) ஏற்படும் கணத்தாக்கக் குழப்பம் (Impulsive disturbance) காரணமாக பெரிய நீர் நிரல் தொகுதியொன்று (water body) மேல் நோக்கி நகர்த்தப்படலாம் எனவும் அவ்வாறு நகர்த்தப்படும் போது அந்த நீரில் அலைத் தொடர் அல்லது தொடர்ச்சியான அலைத் தொடர் உருவாகும் எனவும் இந்த அலைத்தொடரையே சுனாமி என அழைக்கிறோம் எனவும் கூறியிருந்தோம்.

கடற்படுக்கையில் ஏற்படும் புவி நடுக்கங்கள் (Oceanic Earthquakes), நிலச் சரிவுகள் (Submarine Landslides), எரிமலைக் குமுறல்கள் (Submarine Volcanoes) மற்றும் விண்கற் தாக்கங்கள் (Impact of asteroids) போன்ற இயற்கைக் கணத்தாக்க நிகழ்வுகளும் அணுகுண்டு வெடிப்புகள் (Atomic bomb explosions) போன்ற செயற்கைக் கணத்தாக்க நிகழ்வுகளும் சுனாமி உருவாகக் காரணமாயமைகின்றன எனவும் கூறியிருந்தோம்.



படம் 68

இக்கட்டுரையில் கணத்தாக்க நிகழ்வுகளால் சுனாமி எவ்வாறு உருவாகுகிறது , சுனாமிக்கும் சாதாரண சமுத்திர அலைகளுக்கும் இடையேயான வேறுபாடென்ன என்பவற்றைப் பற்றி அறிந்துகொள்வோம்.

***நீரடிப் புவிநடுக்கத்தின்போது சுனாமி உருவாகுதல்***

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி பெரும்பாலான சுனாமிகள் நீரடியில் ஏற்படும் புவி நடுக்கத்தாலேயே ஏற்படுகின்றன. முதலாவது கட்டுரையில் (உதயன் 13.11.2005) கூறியபடி புவிப்பாறை மண்டலத் தட்டுகள் ஒன்றுக்கொன்று சார்பாக வருடத்தில் ஒன்று முதல் பன்னிரண்டு சதம மீற்றர் என்ற வேகத்தில் தொடர்ச்சியான அசைவு இயக்கத்தில் உள்ளன. இந் நகர்வுகள் குறைகோடுகள் (Fault Lines) சார்பாக நடைபெறுகின்றன. இந்நகர்வுகள் புவிநடுக்கங்களையும் எரிமலைக் குமுறல்களையும் ஏற்படுத்த வல்லன எனக் கண்டோம். சமுத்திரப் படுக்கைகளில் ஏற்படும் புவிநடுக்கங்களும் எரிமலைக் குமுறல்களும் நீரின் சமநிலை இடநிலையைக் குலைத்துப் பெரியதொரு நீர்த்தொகுதியை இடம்பெயர வைத்து சுனாமியை ஏற்படுத்தலாம்.



**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
*விஞ்ஞான பீடாதிபதி*
*(யாழ்.பல்கலைக்கழகம்)*

பின்வரும் நிகழ்வுகள் நீரின் சமநிலை இடநிலையைக் குலைத்துப் பெரியதொரு நீர்த்தொகுதியை இடம்பெயர வைக்கலாம் (படம் 66,67)

தட்டொன்றின் நிலைக்குத்து நகர்வு


படம் 66

1) புவித்தட்டொன்று குறைகோடு வழியே அயற் புவித்தட்டிற்குச் சார்பாக நிலைக் குத்தாக மேலெழல். (படம் 66,67).
2) பாரமான நிலத்தட்டு பாரம் குறைந்த தட்டொன்றின் மேல் மோதும்போது பாரம் கூடிய தட்டு அமிழ அதன் தாக்கத்தால் பாரம் குறைந்த தட்டு திடீரென மேலெழல் (படம் 68,69).

இவ்வாறாகப் பெரியதொரு பாறைத் தொகுதி (தட்டு) திடீரெனத் தாழும் போது (அல்லது மேலெழும் போது) பெருமளவு சக்தி வெளிவிடப்பட்டு அச்சக்தி நீர் நிரலுக்குக் கொடுக்கப்படும். இச்சக்தி (சமுத்திர) நீரைக் கீழ் நோக்கி (அல்லது மேல் நோக்கி)த் தள்ளும். இவ்வாறு தள்ளப்பட்ட இராட்சத நீர்த்தொகுதி அலைத் தொடராக அல்லது தொடர்ச்சியான அலைத் தொடராக நகரும். இவ்வலைகள் அல்லது அலைத் தொடர்களே சுனாமி எனப்படும்.

***சுனாமியை உருவாக்கக்கூடிய இதர நிகழ்வுகள்***

ஏற்கனவே குறிப்பிட்டது போல் சமுத்திரப் படுக்கையில் நிகழும் எரிமலைக் குமுறல்களும் பெரியதொரு நீர்த்தொகுதிக்குப் பெருமளவு சக்தியைக் கொடுத்து அதனை மேல் நகர்த்த முடியும். புவிநடுக்கம் காரணமாக சமுத்திரத்தின் அடியிலுள்ள பெரும் கற்பாறைகள் அல்லது எரிமலைக் கூம்புகள் சரிந்து விழுவதாலும் பெரியதொரு நீர்த் தொகுதி வேகத்துடன் மேல் நகர்த்தப்படலாம். இந்நிகழ்வுகள் எல்லாவற்றிலும் சக்தியானது சமுத்திரப் படுக்கையிலிருந்து மேல் நோக்கி வெளிவிடப்பட்டு நீர்த்தொகுதிக்குக் கொடுக்கப்படுகிறது.


இவற்றைவிட பின்வரும் இரு வழிகளிலும் பெரும் நீர்த்தொகுதியை நகர்த்தக்கூடிய சக்தி நீர்நிலையொன்றுக்குக் கொடுக்கப்படலாம்.

(அ) பெரிய விண்கல் ஒன்று சமுத்திரம் அல்லது பேரேரியொன்றில் வந்து விழுதல்.

(ஆ) சமுத்திரம் அல்லது பேரேரி ஒன்றின் பக்கலிலுள்ள இராட்சத மலைப் பாறைகள் சரிந்து நீர் நிலையுள் விழுதல். இதற்கு உதாரணமாக, 1958 ஆம் ஆண்டு அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தின் லித்துயா விரிகுடாவில் நடந்த நிகழ்வைச் சென்ற வாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

மேற்கண்ட இருவகை நிகழ்வுகளாலும் உருவாகக்கூடிய சுனாமியும் முன்னர் கூறிய புவியதிர்வு, எரிமலைக் குமுறல்கள் போன்றவற்றால் உருவாகக்கூடிய சுனாமி போன்றதே. வேறுபாடு என்னவெனில் பிற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளின் போதும் சக்தியானது சமுத்திரத்திற்கு வெளியேயிருந்து நீர்நிரலுக்குக் கொடுக்கப்படுகிறது.


## சாதாரண நீரலைகளும் சுனாமியும்




***சுனாமிக்கும் சாதாரண நீரலைகளுக்கும் இடையேயான வேறுபாடு***

சுனாமி எனப்படும் கொலைகார அலைகள் தோற்றுவிக்கப்பட்டபின் அவற்றின் செலுத்துகையையும் நடத்தையையும் அலைக் கொள்கையின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

சுனாமி சாதாரண நீர் அலைகள் போன்ற பௌதிக அமைப்பைக் கொண்டவையே. இரண்டினதும் பௌதிக சாராமாறிகள் ஒரே விதமாகவே அளவிடப்படுகின்றன. ஆனால், இவற்றின் பருமன்கள் பெரிதும் வேறுபடு கின்றன. (படம் 70)



படம் 69

காற்றால் சமுத்திர மேற்பரப்பில் உருவாகும் சமுத்திர அலைகள் போலன்றி ஆழ்கடலில் உருவாகும் சுனாமி மிகக்கூடிய அலைவு காலத்தையும் அலை நீளத்தையும் உடைய தாயிருக்கும். (படம் 70). சுனாமியின் அலை நீளமானது 100 கிலோ மீற்றரை விட அதிக மானதாகவும், அலைவுகாலம் ஒரு மணித்தியாலம் வரையானதாகவும் இருக்கமுடியும். அதிகரித்த அலை நீளம் காரணமாக சுனாமி குறைந்த ஆழ நீரலைகள் (Shallow Water Waves) போற் செயற்படும். நீரின் ஆழத்திற்கும் அலையின் அலைநீளத்திற்குமிடையேயான விகிதம் குறைவாக அமையும் போதே அலையொன்று குறைந்த ஆழ நீரலையாகச் செயற்படும்.

குறைந்த ஆழ நீரலைகளின் வேகம் செக்கனுக்கு V மீற்றர் எனின், அது

$v = (g \times d)$ இன் வர்க்கமூலம் என்ற சமன்பாட்டால் தரப்படும். இங்கு g என்பது பூமியின் மேற்பரப்பில் ஈர்ப்பினா லான வேகவளர்ச்சி (9.8 $ms^{-2}$) d என்பது மீற்றரில் நீரின் ஆழம்.

உதாரணமாக நீர் ஆழம் d = 4 km ஆகவுள்ள கடலில் சுனாமி (9.8 x 4000) இன் வர்க்கமூலம் = 198 $ms^{-1}$ அல்லது 700 kmph எனும் வேகத்தில் பயணிக்கத்தக்கது. 26 டிசம்பர் 2004 இல் இந்தோனேசிய சுமாத்திரா கடற்பரப்பில் உருவாகிய சுனாமி 4500 கி.மீ. (2800 மைல்கள்) தொலைவிலுள்ள கிழக்காபிரிக்க நாடான சோமாலியாவை ஏழு மணித்தியாலத்தில் சென்றடைந்தது. இவ்விரு இடங்களுக்குமிடையே ஜெட் விமானத்தில் பறந்தால் கூட இவ்வளவு விரைவாகச் சென்றடைய முடியாது.

சிறிய அலைநீளமுடைய அலைகள் சக்தியை விரைவாக இழக்கும். பெரிய அலை நீளமுடைய அலைகள் சக்தியைக் குறைந்தளவிலேயே இழக்கும். அதாவது சக்தி இழப்பு வீதம் அலை நீளத்துடன் நேர்மாறு விகிதமாகத் தொடர்புற்றிருக்கும். ஆகவே

**ஒப்பீடு: சுனாமியும் காற்றால் உருவாகும் சாதாரண சமுத்திர அலைகளும**

| அலை அம்சம் | காற்றால் உருவாகும் சமுத்திர அலைகள் | சுனாமி |
|---|---|---|
| அலை வேகம் | 5 – 60 mph (8 – 100 kmph) | 500 – 600 mph (800 – 1,000 kmph) |
| அலைவு காலம் | 5 முதல் 50 செக்கன்கள் வரை | 10 நிமிடம் முதல் 2 மணித்தியாலம் வரை |
| அலை நீளம் | 300 – 600 அடி (100 – 200 மீற்றர்) | 60 – 300 மைல்கள் (100 – 500 கி. மீ.) |

பெரிய அலைநீளமுடையனவான சுனாமி உயர் வேகத்தில் குறைந்தளவு சக்தி இழப்போடு மிகக்கூடிய தூரங்களைக் கடக்க வல்லது. கடல் வற்றுப்பெருக்கலைகளுக்கும் (Tidal Waves) சுனாமிக்கும் இடையேயான

படம் 71





பிரதான வேறுபாடுகள் அவற்றின் பருமன், வேகம், முதல் (source) ஆகியனவே.

மேலே தரப்பட்டுள்ள அட்டவணை சுனாமிக்கும் காற்றால் உருவாக்கப்படும் சாதாரண சமுத்திர அலைகளுக்குமிடையேயான முக்கிய வேறுபாடுகளைக் காட்டுகிறது. இங்கு சமுத்திரத்தின் ஆழம் அண்ணளவாக 5.5 கி.மீ. எனக் கொள்ளப்பட்டது:

***சமுத்திரத்தில் சுனாமியின் இயக்கம்***

கடல் நீரானது மேல்நோக்கி தள்ளப்பட்டதும் அந்நீர்த்தொகுதியின் மீது ஈர்ப்பு விசை தாக்கி சக்தியை கிடையாக நீரினூடு செல்ல வைக்கும். இது குளமொன்றில் அல்லது கிணற்றில் கல்லொன்றை எறியும்போது குற்றலைகள் ஏற்படுத்தும் தோற்றப்பாடு போன்றது. ஆனால் எதிர்த்திசையில் நடைபெறுவது. குளத்தில் கல்லெறியும் போது வெளியிலிருந்து நீருக்குள் செலுத்தப்பட்ட கல்லின் விசையால் நீர் சக்தியைப் பெறுகிறது. ஆனால் நீரடிப் புவியதிர்வால் பாதிக்கப்பட்ட சமுத்திர நீரானது சக்தியை உள்ளிருந்து பெறுகிறது.

சுனாமி உருவாகுதல் - ஒரு வகை



படம் 67

புவியுட்பகுதியில் ஏற்பட்ட குழப்பத்தால் உருவான பெருவிசை சுனாமிக்கு பெரு வேகத்தைக் கொடுக்கிறது. சுனாமியின் உண்மையான வேகம் முன்னர் குறிப்பிட்டபடி வேகம் $(V) = (g \times d)$ இன் வர்க்கமூலம் எனும் சமன்பாடு மூலமாகவே கணிக்கப்படும். இங்கு d என்பது சுனாமி கடந்து செல்லும் புள்ளியின் ஆழம். இதனிலிருந்து சுனாமி ஆழம் குறைந்த நீரிலும் பார்க்க ஆழமான நீரில் வேகமாக இயங்கும் என்பது பெறப்படும்.

ஆழ்கடலில் சுனாமியின் அலைநீளம் மிகப் பெரிது. நூறு கிலோ மீற்றருக்கு மேற்பட்டது. சுனாமி கரையை அண்மிக்கும் வரை அதன் உயரம் மூன்று அடியை (ஒரு மீற்றர்) விட அதிகமாகவிராது. ஆகவே ஆழ் கடலில் பயணிப்பவர்களுக்கு கடல் மட்டம் சாதாரணமாகக் காணப்படுவது போல் தட்டையாகவே காட்சியளிக்கும். கடல் மேற்பரப்பு அவர்களது கவனத்தை ஈர்க்கு மளவிற்கு வித்தியாசமானதாகத் தெரிவதில்லை.

(படம் 71).

சுனாமி கரையை அண்மிக்கும் போது பெரும் மாற்றங்கள் ஏற்படும். அவற்றை அடுதத கட்டுரையில் பார்ப்போம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட நிர்மாணத்துறை பதவி வெற்றிடம்

**வவுனியா நகரில் மேற்கொள்ளப்படும் புதிய கட்டட நிர்மாண வேலை ஸ்தலங்களுக்கு கீழ்க் குறிப்பிடும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதி உடையோர் தங்கள் தொடர்பு தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.**

1) பொறியியலாளர்:
3வருட அனுபவத்துடன் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் அல்லது அதற்குச்ள சமமான தகைமையுடைய வர்கள்

2) தொழில்நுட்ப உத்தியோகத்தர்:
**N.D.T./ N.D.E.S./ H.N.D.E** சித்திபெற்றோர்
3 வருடஅனுபவத்துடனும் அல்லது N.C.T. [Civil] 6வருட அனுபவத்துடன் உள்ளவர்கள்

3) **Quantity Surveyor:-**
**City and Guilds** அல்லது **N.C.T.[Civil]** 5வருடஅனுபவத்துடன் உள்ளவர்கள்

4)மேற்பார்வையாளர்:
**N.C.T. [Civil]** அல்லது அதற்குச் சமமான தகைமையுடைய 4 வருட அனுபவத்துடன் உள்ளவர்கள்.

5)காவலாளிகள்: தமிழ்-சிங்களம் தெரிந்த இதே துறையில் அனுபவம் உடையவர்கள்

6)சாரதி (லொறி): 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உடையவராகவும் தமிழ்-சிங்களம் தெரிந்தவராகவும் உள்ளவர்கள்.

**பணிப்பாளர்**
**வி.வி. இராமநாதன் கொம்பனி பிறைவேட் லிமிட்டட்,**
**வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,**
**வவுனியா.**

## கட்டட நிர்மாணத்துறை பதவி வெற்றிடம்

**கிளிநொச்சி பொன்னகரில் மேற்கொள்ளப்படும் யாழ். விவசாய பீட புதிய கட்டட நிர்மாண வேலைத்தலத்திற்கு கீழ்க் குறிப்பிடும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதி உடையோர் தங்கள் தொடர்பு தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.**

1) பொறியியலாளர்:
3வருட அனுபவத்துடன் பல்கலைக்கழகப் பட்டதாரிகளோ அல்லது அதற்குச் சமமான தகைமையுடைய வர்கள்

2) தொழில்நுட்ப உத்தியோகத்தர்:
**N.D.T./ N.D.E.S./ H.N.D.E** சித்திபெற்றோர் 3வருட அனுபவத்துடன் அல்லது **N.C.T. [Civil]** 6வருட அனுபவத்துடன் உடையவர்கள்

3) **Quantity Surveyor:-**
**City and Guilds** அல்லது **N.C.T.[Civil]** 5வருட அனுபவத்துடன் உள்ளவர்கள்

4)மேற்பார்வையாளர்:
**N.C.T. (Civil)**அல்லது அதற்குச் சமமான தகைமையுடைய 4 வருட அனுபவத்துடன் உள்ளவர்கள்.

**பணிப்பாளர்**
**வி.வி. இராமநாதன் கொம்பனி பிறைவேட் லிமிட்டட்,**
**வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,**
**வவுனியா.**

# 45 ஆம் நாள் நீங்காத நினைவுகளுடன்

மலர்வு: 09.02.1948 உதிர்வு: 23.12.2005



"இராசா" என்றும் "மந்திரி" என்றும் " சித்தப்பா" என்றும்
அன்பாக அழைக்கப்படும் எங்கள் அப்பாவே!
உங்கள் நலனைப்பாராது ஊருக்காகவும், உறவுகளுக்காகவும்
வாழ்வை அர்ப்பணித்த எங்கள் அப்பாவே!
அம்மாவும், படிப்படியாக நாங்களும் உங்கள் வாழ்க்கையில்
இணைந்தபின் எங்களுக்காகவும் உங்கள் வாழ்வை
அர்ப்பணித்த எங்கள் அப்பாவே!
யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் நாங்கள் நிறைவாக வாழ
அந்நிய மண்ணில் உதிரத்தை வியர்வையாக்கிய எங்கள் அப்பாவே!
அராஜக இடப் பெயர்வு ஏற்பட்டு திசைதெரியாது
நாங்கள் ஓடியபோது தீவிரமாகச் செயள்பட்டு
எம்மை இணைத்துக் கொண்ட எங்கள் அப்பாவே!
அந்நிய மண்ணில் நாங்கள் வளமாக வாழ
அன்புடன் அறிவூட்டி வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
எங்களுக்காக மெழுகுவர்த்தியாகிக் கொண்ட
உங்களை எப்படியெல்லாம் வைத்துப்பார்க்க வேணுமென
நாங்கள் கட்டிய கற்பனைக் கோட்டைகளை
தகர்த்து விட்டீர்களே எங்கள் அப்பாவே!
நான், எனது மனைவி, பிள்ளைகளை சுயத்துடன்
வாழத்தயாராக்கிவிட்டேன் என்ற திருப்தியுடன்
எம்மைப்பிரிந்தீர்களா? எங்கள் அப்பாவே!
நீங்கள் காட்டிய பாதையில், பிறந்த மண்ணில்
பண்புகளுடனான உங்கள் நினைவுகளுடன்
[illegible] எங்கள் அப்பாவே!

## கார்த்திகேசு கணபதிப்பிள்ளை. செல்வநாயகம்

நீர்வேலி - தெல்லிப்பழை, சுவிஸ்

**THUNSTASSE 32**
**3150, SCHWARZENBURG**
**SWISS**
**T.P. NO. 0041-317313650**

மனைவி: யோகாம்பாள்
பிள்ளைகள்: பிரபாலினி
நிஷ்கலாஜினி

(46237)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசு அமைப்பதற்கு முன் 'ஹமாஸ்' நிலைப்பாடு மாறுமா?

பலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் தீவிரவாத ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மை வெற்றிபெற்று அரசு அமைக்கும் நிலையை அடைந்திருப்பது அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அதிர்ச்சி அலைகளை அனுப்பியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க இந்த நாடுகளின் பொருளாதார உதவியின்றி ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு நடத்தமுடியுமா என்ற தர்மசங்கட நிலை ஹமாஸிற்கு ஏற்பட்டிருப்பதையும் மறந்துவிடமுடியாது.

'ஹமாஸ்' அமைப்பைப் பொறுத்தவரை அதன் குறுகியகால இலட்சியம் ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலை துரத்தியடிப்பது. அதன் 'போர்' நடவடிக்கை காரணமாகத்தான் 2005ஆம் ஆண்டில் காஸாவிலிருந்து இஸ்ரேல் விலகிச்சென்றது என்பது அதன் நிலைப்பாடு. அதன் நீண்டகாலக் கொள்கை என்னவென்றால் 1948ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த எல்லைகளைக்கொண்ட ஓர் இஸ்லாமிய அரசை நிலைநாட்டுவதாகும்.

2000ஆம் ஆண்டு காஸாவிலும் மேற்



ஹமாஸ் பிரதம வேட்பாளர் இஸ்மாயில் ஹானியா

குக் கரையிலும் இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட பலஸ்தீன எழுச்சிப் போராட்டத்தை அடுத்து இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்புகளின் ஆதரவுடன் 'ஹமாஸ்' அமைப்பு அமைக்கப்பட்டது.

இஸ்ரேலுக்கு எதிராக ஏராளமான தாக்குதல்களை நடத்தியுள்ளது 'ஹமாஸ்'. அவற்றில் ஏராளமான சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். அதன் ஆன்மீகத் தலைவரும் நிறுவுநருமான ஷெயிக் அகமத் யாஸின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையிலிருந்த அஸ்தஸில் ரன்டிஸ்ஸி ஆகியவர்கள் 2004ஆம் ஆண்டு இஸ்ரேலியத் தாக்குதல்களில் கொல்லப்பட்டமை அதற்குப் பேரிழப்பாகக் கருதப்பட்டது.

**ஒஸ்லோ ஒப்பந்தம்**

1993ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒஸ்லோ அமைதித் தீர்வை 'ஹமாஸ்' ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த ஒப்பந்தத்தின்படி பலஸ்தீனத்தில் ஆக்கிரமிப்பு இடங்கள் யாவற்றிலிருந்தும் இஸ்ரேல் வெளியேறிவிடவேண்டும். அதேபோல் இஸ்ரேல் மீதான சகலவிதமான தாக்குதல்களையும் பலஸ்தீனர்கள் நிறுத்திவிடவேண்டும். இந்த ஒப்பந்தத்தை மிகக்கடுமையாக எதிர்த்து வந்துள்ள 'ஹமாஸ்' இஸ்ரேலுக்குக்கெதிராகத் தொடர்ச்சியான தாக்குதல்களையும் நடத்திவந்துள்ளது. அதன் இராணுவப் பிரிவான எஸதின் அல்-கஸம் படை அணி 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பலஸ்தீன எழுச்சியைத் தொடர்ந்து தற்கொலைத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்றது.

எவ்வாறாயினும் பலஸ்தீனத் தலைவர் மக்மூத் அப்பாஸ் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்படுத்திய போர் நிறுத்தத்தில் அதுவும் ஒரு பங்காளியாக இருக்க ஒப்புக்கொண்டிருந்தது. அந்த ஆண்டு முடிவுடன் ஒப்பந்தத்தை நீடிக்க அது விரும்பாவிட்டாலும் இதுவரை அதனை மீறிவிட்டதாகத் தகவல் இல்லை.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 'ஹமாஸ்' முன்வந்ததால் யதார்த்த நடைமுறைக்கு அது திரும்புவதாகப் பலர் கருதினார்கள். அதன் பிரதம வேட்பாளராகவிருந்த இஸ்மாயில் ஹானியா அமைப்பின் மிதவாதக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர் என்று கருதப்படுகின்றார்.

**மாற்றம் வருமா?**

எதுவானாலும் ஹமாஸ் தனது அடிப்படைச் சிந்தனைகளில் பல மாற்றங்களைச் செய்தாகவேண்டும் என்று உலக நாடுகள் பலவும் கருதுகின்றன.

குறிப்பாக வன்முறைக் கோட்பாடுகளைக் கைவிடவேண்டும். இஸ்ரேல் என்றொரு நாடு இருப்பதை அங்கீகரிக்கவேண்டும் என்று

## பலஸ்தீனத்தின் எதிர்கால விடிவுக்கு உலக நிதி ஆதாரம் தேவை

ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஐ.நா. சபை ஆகியவற்றைக் கொண்ட அமைப்பு வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி பலஸ்தீன அரசு ஏற்கனவே அங்கீகரித்துள்ள ஒப்பந்தங்கள், கடப்பாடுகளையும் நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று இந்த அமைப்பு கேட்டுள்ளது. 'ஹமாஸ்' புதிய அரசை நிறுவி செயற்படுத்துவதாயின் சர்வதேச மட்டத்திலான பெருமளவு உதவிகள் தேவைப்படும் நிலையில் மேற்கத்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டாகவேண்டும்.

இதுவரைகாலமும் பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் இருந்து வந்துள்ள 'ஹமாஸ்' இம்முறை போட்டியிட்டு வெற்றியீட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீனத்திற்கு உதவி வழங்கும் நாடுகள் விதித்துள்ள நிபந்தனைகள் பற்றி உடனடியாகக் கருத்துத் தெரிவித்த 'ஹமாஸ்' பேச்சாளர் அந்த நிபந்தனைகளை நிராகரித்துள்ளார். ''முதலில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் வன்முறைகளையும் நிறுத்தும்படி அவர்கள் கேட்கட்டும். பாதிக்கப்பட்டவன் ஆக்கிரமித்தவனை அங்கீகரித்து அவன் முன் கைவிலங்கோடு நிற்கவேண்டும்'' என்று கூறுகிறார்களா? என்று கேட்டுள்ளார் அவர்.

புதிய அரசை நிறுவுவதற்கு எப்படியும் 3 மாதங்களாவது ஆகும். இந்த இடைக்காலத்தில் 'ஹமாஸ்' தன் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து ஏனைய கட்சிகளுடனும் ஆலோசித்து முடிவெடுக்க அவகாசம் உண்டு என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கை வகுக்கும் பிரிவின் தலைவர் ஜாவியர் சொலொனா இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ''தற்பொழுது பலஸ்தீன நிர்வாகத்



ஹமாஸ் ஆதரவாளர்கள் மேற்குக்கரை ரமல்லாவில் ஆர்ப்பாட்டம்.

துக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நிதி ஆதாரம் இன்னும் மூன்று மாத காலத்துக்குப் போதுமானதாய் இருக்கும். அந்தக் கால அளவில் எமது நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால் பலஸ்தீன அதிகார சபைக்குத் தொடர்ந்து நிதிகளை வழங்குவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோம்'' என்று கூறினார். கடந்த ஆண்டில் பலஸ்தீன அதிகாரசபைக்கு 500 மில்லியன் யூரோவை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது.

பலஸ்தீனத்துக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலீசா ரைஸ் அம்மையார் 'ஹமாஸ்' இயக்கத்தின் கடும் போக்கைக் கண்டித்தார். "ஆட்சிபுரியும் போது கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்புக்கள் இருக்கின்றன. பலஸ்தீன மக்கள் மேம்பட்ட வாழ்க்கை நிலைகளை அனுபவிக்க வேண்டியவர்கள் '' - என்றார்.

புதிய அரசை நிறுவுவதற்கான முக்கிய ஆலோசனைகளை ஆரம்பிக்கப்போவதாக பலஸ்தீனிய அதிபர் மக்மூத் அப்பாஸ் அறிவித்துள்ளார். இஸ்ரேலுடன் பேச்சுக்களை நடத்தவேண்டிய கடப்பாடு தமக்கு இருப்பதாகக் கூறிய அப்பாஸ் அவசியமானால் 'ஹமாஸ்' அமைப்பை ஓரங்கட்டிவிட்டு இஸ்ரேலுடன் பேசவிருப்பதாக மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

* * *





## அமெரிக்க பிரமுகர்களை விசாரிக்க ஐரோ. நாடாளுமன்றக் குழு விருப்பம்

**அமெரிக்கப் பிரமுகர்களையும் விசாரிக்க வேண்டும்**

கைதிகளை அமெரிக்க உளவுப் படையினர் (சி.ஐ.ஏ.) சித்திரவதை செய்து விசாரித்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது அமெரிக்க முக்கிய தலைவர்களை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற குழுவொன்று விசாரிக்க முடிவுசெய்துள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிவிப்பில் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ. கைது செய்பவர்களை இரகசியமாகச் சிறைகளில் வைத்து சித்திரவதை செய்துள்ளது என்ற குற்றச்சாட்டின் மீது அமெரிக்க உபஜனாதிபதி டிக் செனே, பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் ஆகியோர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்கள்.

விசாரணைக் குழுவொன்றில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சில ஐரோப்பிய மற்றும் அமெரிக்கத் தலைவர்கள் சாட்சியமளிக்க வருவதற்கு மறுத்துள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயம், அவர்களின் பெயர்களை வெளியிடவும் தாங்கள் தயங்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

சி.ஐ.ஏ. கைதுகள், கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பாவிலுமுள்ள ''இரகசிய இருட்டு அறைகளில்'' வைத்து வதை செய்து விசாரிக்கப்படுகிறார்கள். அல்லது அவர்களை வதைசெய்து விசாரிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றிய விமான நிலையங்களின் வழியாக கொண்டு சென்றுள்ளார்கள் என்று எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக இந்த நாடாளுமன்றக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவுக்கு ஐரோப்பிய ஆணையகத்தின் ஆதரவு உண்டு என்றாலும் சட்ட அதிகாரங்கள் இல்லை.

இந்தக் குழு எவரையும் சாட்சியம் அளிக்க வரும்படி வற்புறுத்தப் போவ தில்லை. ஆனால் அமெரிக்க உதவி ஜனாதிபதி செனே, இராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ், வெளிவிவகார செயலாளர் ஜெக் ஸ்ட்ரா, ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு கொள்கை வகுக்கும் குழுத் தலைவர் ஜேவியர் சொலானா ஆகியோர் விசாரணைக்கு அழைக் கப்படவேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் லிபரல் ஜனநாயக உறுப்பினர் பரோனஸ் லுட்போர்ட் அம்மையார் தெரிவித்துள்ளார்.

* * *

## தீவிரவாதிகளின் மரணப்பிடியில் அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர்

**பத்திரிகையாளரின் நிலைமை**

பத்திரிகையாளர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைப்பதும் அவர்களை வைத்துக்கொண்டு பேரம் பேசுவதும் உலக தீவிரவாதக் குழுக்களுக்கு ஒரு வேடிக்கையான விஷயமாகப் போய்விட்டது. செய்திகள் சேகரிப்பதும் வெளியிடுவதும் மட்டுமே அவர்களின் பணி. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஏதேதோ காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளை உலகின் கவனத்துக்குக் கொண்டுவருவதும் உலக அபிப்பிராயத்தை உருவாக்குவதும் அவர்கள் பணி. எனவே, அவர்களை அரசியல் கைதிகள் போல பிடித்துவைத்துக் கொண்டு பேரம் பேசுபவர்கள் என்னதான் நியாயமான கொள்கைகளுக்காகப் போராடுபவர்களானாலும் உலகத்தின் கண்ணில் நல்ல மனிதர்களாகக் காணப்படமாட்டார்கள். பயங்கரவாதம் என்ற வரம்புக்குள் நிற்பவர்களும்கூட இந்தக் காரியத்தைச் செய்யத் துணியக்கூடாது.

ஈராக்கில் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளை விடுவிக்கும்படி கோரி அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர் ஒருவரை தீவிரவாதிகள் கடத்தி வைத்திருக்கிறார்கள். கடைசியாக அல்ஜெஸீரா தொலைக்காட்சியில் அமெரிக்க பெண் பத்திரிகையாளர் ஜில் கரோல் அரபுப் பெண்களைப்போன்று தலையில் முக்காடிட்டு அழுது கண்ணீர் வடிந்தபடி காட்சியளித்தார்.



அல்ஜெசீரா தொலைக்காட்சியில் அமெரிக்க பத்திரிகையாளர் ஜில்கரோல்

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளை விடுவிக்கும்படி அமெரிக்க இராணுவத்தையும் ஈராக்கிய உள்துறை அமைச்சையும் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்.

ஈராக்கிய சிறைகளில் உள்ள பெண்கள் விடுவிக்கப்படவேண்டும். இல்லையெனில் ஜில் கரோல் கொல்லப்படுவார் என தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்க பத்திரிகையான 'கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்' சார்பில் செய்தி சேகரிக்க சென்றுள்ள ஜில்கரோல் 28 வயதான சுயாதீன பத்திரிகையாளர் ஆவார்.

பயங்கரவாதிகளின் கோரிக்கைகளுக்கு இணங்கமுடியாது என்று அமெரிக்க அரசின் சார்பில் பேசிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஐந்து பெண் கைதிகளை அமெரிக்க இராணுவம் விடுவித்தது. ஆனால், அது முன்கூட்டியே எடுக்கப்பட்டிருந்த தீர்மானப்படியே அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் பயங்கரவாதிகள் கோரிக்கைக்கும் அதற்கும் சம்பந்தமில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் சில பெண் கைதிகள் விடுவிக்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஜில் கரோல் ஜனவரி 7ஆம் திகதி பணயமாக ஆயுதம் தரித்த தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அவருடனிருந்த ஈராக்கிய மொழிபெயர்ப்பாளரை அவர்கள் அந்த இடத்திலேயே கொன்றுவிட்டார்கள்.

* * *

**ஈரானின் அணு ஆய்வு**

ஈரானின் அணு ஆய்வுத் திட்டம் தொடர்பாகப்பாதுகாப்புச் சபையின் தலையீட்டை கோருவதற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் முயற்சி செய்துகொண்டிருக்கும் அதேவேளை ஈரான் தனது நிலைப்பாட்டிலிருந்து சிறிதும் விட்டுக்கொடுக்காமல் இருந்து வருகின்றது. ''ஈரான் விடயத்தை பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான சட்ட அடிப்படை எதுவுமில்லை. அவ்வாறு ஏதும் நடந்தால் ஐரோப்பியர்கள் அதற்காக கஷ்டங்கள் அனுபவிப்பார்கள் என்று ஈரான் சார்பில் கருத்துத் தெரிவித்த ஈரான் அணுசக்தி குழுவின் உறுப்பினர் கொலாம்ரேஸா அகா ஸாடேற் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி ஆணைக்குழு இந்த வாரத்துக்குள் பாதுகாப்புச் சபைக்கு ஈரான் அணுசக்தி விடயத்தில் பாதுகாப்புச் சபையுடன் ஒத்துழைக்க என்னசெய்யவேண்டும் என்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் முக்கிய ஐந்து நாடுகள் முடிவெடுத்துள்ளன.

ஈரான் பற்றி பாதுகாப்புச் சபையிடம் நேரடியாக முறையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி கோருவதிலிருந்து இந்த முடிவு தவிர்த்திருந்தாலும் ஈரானின் அடுத்த நடவடிக்கைகளைப் பொறுத்து வேறுவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சண்டெல் தொலைபேசி Booth மற்றும் P - IV Computer என்பன இன்ரநெ[illegible] இணைப்புடன் விற்பனைக்கு உண்டு. [illegible]ாடர்பு: T.P. 0777299842, 0776699697. (46344)

நெல்குற்றும் ஆலைக்குரிய அவியல் தொட்டி புதியது விற்பனைக்கு உண்டு. அத்துடன் அச்சகத்திற்குத் தேவையான புத்தகங்கள், பைண்டிங் செய்யும் வயரிங் மெசின் மின்சாரத்தில் இயங்கக்கூடியது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077- 6179047. (46300)

40....xxxx தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள கொழும்பு - யாழ்ப்பாணம் ஓடுகின்ற 350 கண்டர் வாகனம் (மர பொடியுடன் கூடியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: கரன், 89, சீனிவாசகம் வீதி, கொட்டடி. T.P. 0777448091 (46310)

கிறேடன் x டோபர்மான் பின்சர் 3 ½ மாதக் குட்டிகள், அல்சேசன் ஜேர்மன் ஸ்ரக்வேட் 1½ மாதக்குட்டிகள், டோமன் ஸ்ரக்வேட் 3 மாதக் குட்டிகள், பொமேரியன் 1½ மாதக் குட்டிகள் என்பன குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கி தடுப்பூசி போடப்பட்டது. தொடர்பு: நுணாவில் - பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. T.P. 0776170686, 0776568166 (46313)

## கார் விற்பனைக்கு

19 xxxx தொடரிலக்கத்தினையுடைய வெள்ளை நிற நிசான்சனி யப்பான் கார் Full obtion உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.45, சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். தொ.பே.இல. 0773053064. (46377)

## கடைக்கட்டடம் விற்பனைக்கு

சுன்னாகம், பஸ்நிலையத்துக்கு முன்பாக கடைக்கட்டடம் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: இ.இரவீந்திரகுமார் (ரவி) T.P. 0777118979, 0779233387. (46356)

## வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கலைச்செல்வன், பலாலி றோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P.0773053063. (46076)

கொக்குவில் கிழக்கில் அச்சக ஒழுங்கையில் (Press Lane) 3 ¾ பரப்புக்காணி, தனிக் கிணறு மற்றும் பிரயோசனங்களுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 - 222 2638, 0777 - 079746. பாவித்த வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. (46380)

## தவறிவிட்டது

சூராவத்தை, சுன்னாகத்தில் வசிக்கும் சுந்தரலிங்கம் அன்றூ என்பவரின் தேசிய அடையாள அட்டை (802781636V) 29.01.2006 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 021-222 2206 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (46385)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.02.2006 திங்கள் பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை-நெல்லியடிக் கிளைகளிலும், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்- 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47500)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1977ஆம் ஆண்டு, நட்சத்திரம் பூரட்டாதி, கணனியில் MSC, MIT பெற்று பிரபல கொழும்பு நிறுவனத்தில் சிரேஷ்ட கணனி பொறியியலாளர் பதவி வகிப்பவருக்கு தகுந்த, நல்ல குடும்பத்தில் உள்ள, நற்குணமுள்ள, படித்த, அழகான பெண் தேவை. விளம்பர இல. 2798 மே/பா உதயன். (46308)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976 அவிட்டம், 3ஆம் பாதம், கும்பராசி, 12இல் செவ்வாய் சுயதொழில் செய்யும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. சகல விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2800, மே/பா உதயன். (46387)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் - கச்சேரி நல்லூர் வீதியில் 6 அறைகளுடன் நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பிற்கு: T.P.021-222 5283 (46369)

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையாக வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0773126902, 0773221413 (சி-47701)

பலாலி வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.No. 077 6087896 (சி-47701)

திருநெல்வேலிக்கு அருகில் (கோணாவளை வீதியில்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 021 - 222 5C53 இல.191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (46388)

## வாடகைக்கு

திருமண தேவைகள் மற்றும் உல்லாச பயணங்களிற்கும் குளிரூட்டப்பட்ட வெள்ளை நிற நிசான் சனிகார் மலிவான வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு. 0773583864. 0773053064 (46376)

## காணவில்லை

வெள்ளை பிறவுண் நிற பொமனேரியன் (3வயது உடையது) நாயை 30.01.2006 முதல் காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: த.அருமைரத்தினம் இல.35, கச்சேரி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (46345)

## பௌர்ணமி நிலா நூல் வெளியீடு

நவாலி, பெப்.5

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பௌர்ணமி நிலா மலர் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கலாநிதி இ.இராசேந்திரப் பிரசாத் தலைமையில் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் இடம்பெறும்.

மலரின் ஆய்வுரையை மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் செ.கேசவராசனும் சிறப்புரைகளை மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கமும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கோ.சிவராசாவும் நிகழ்த்துவர். (எ-100)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அருகில் 6 அறைகள், தொராசோ பதிக்கப்பட்ட 24X16 அடி விஸ்தீரணம் உடைய கோல் 80X12 அடி நீளமுடைய பிறிதொரு கோல், வாகனத்தரிப்பிட வசதி, இதர வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்குண்டு.

தேவைப்படின் குளிரூட்டல் வசதி செய்துதரப்படும். (அரசசார்பற்ற நிறுவனங்களுக்குப் பொருத்தமானது)

தொடர்பு: **வே.முருகையா,**
*198, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.*
(46283)

## குமுதினி படகு மீண்டும் பழுது

நெடுந்தீவு - குறிகட்டுவான் சேவையில் ஈடுபடும் அரச படகான குமுதினி மீண்டும் பழுதடைந்துள்ளது.

படகுச்சுக்கானில் ஏற்பட்ட தேய்வு காரணமாக கடந்த சில தினங்களாக இந்தப் படகு சேவையில் ஈடுபடவில்லை.

எனவே, மேற்படி படகுச் சேவையை நடத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இது விவகாரத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து, படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-111-188)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

நல்லூர், பெப்.5

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் பிரதி பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிய க.சிவராசா நாவலப்பிட்டி தபாலகத்திற்கும்- மேற்பார்வை தபாலதிகாரியாகக் கடமையாற்றிய எஸ்.தருமராசா ஹற்றன் தபாலகத்திற்கும் பிரதம தபாலதிபர் தரத்திற்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ-111)


FedEx Express R அனுசரணையுடன்

திருமுருகன் கொம் நெற்றின்

காலாண்டு பரிசு மழை

எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் உறவுகளுக்கு துரிதகதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O.பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் காலாண்டுக்கு ஒருமுறை குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

48, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310 | 26, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253 | இகன் தொலைத்தொடர்பகம் 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்


### இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை - யாழ்ப்பாணம்
### ஜனாதிபதி நிதியத்தின் உதவியுடனான குறுங்கால தொழிற்பயிற்சி நெறிகள்

| பயிற்சி நெறி | இடம் | தகைமை |
|---|---|---|
| i) கணனி | சண்டிலிப்பாய் | G.C.E (O/L) (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் நிறைமைச்சித்தி) |
| ii) அலுமினியப் பொருத்துநர் | கோப்பாய் | ஆர்வமுள்ளவர்கள் |
| iii) தச்சுவேலை | சாவகச்சேரி | " |
| iv) வீட்டுமின்னிணைப்பு | பருத்தித்துறை | " |
| v) மோட்டார் சைக்கிள் திருத்துநர் | கரவெட்டி | " |

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடங்கள்:
i) கணனிப்பயிற்சிநெறி - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்
ii) ஏனைய பயிற்சிநெறிகள் - இல.11, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

- ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடனும், சான்றிதழ்களுடனும் 14.02.2006 காலை 9.30 மணிக்கு நேரடியாக சமுகமளிக்கவும்.
- பயிலுநர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத்தொகை வழங்கப்படும்.

*திட்ட உதவியாளர்.*
(46372)(21.16.17)

### JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
### VADDUKODDAI

வடக்கு - கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளரின் நிதியுதவியுடன் யாழ்.அரச அதிபரின் மேற்பார்வையின் கீழ் எமது தொழில்நுட்ப நிறுவனத்தில் பின்வரும் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1. **கட்டட வேலை** - Masonry
2. **மரவேலை** - Carpentry

காலம்:- 6 மாதங்கள்

**விண்ணப்பதாரிகள் 14.02.2006 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேர்முகத் தேர்வு மூலம் இப்பயிற்சி நெறிக்கான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பயிலும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்படும். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Director.
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

T.Phone: 0602213139 (c/47697) Email Jcit@sltnet.lk


Restricted 15 Members only in a batch

50% Concession only for this batches

MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு

Hardware & Networking பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.

100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

Valuable course materiel Free

100% Practical oriented field training centre


An Indian Engineers study centre

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு நிர்வாகம்

Near Jaffna Hindu College, Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.

UNIT Education
16/1, Kilinar Lane, Jaffna.


## மரண அறிவித்தல்



### கதிர்காமு இராசதுரை
(கட்டட ஒப்பந்தகாரர் -வாகனச் சாரதி)

நல்லூர், அரசடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு இராசதுரை அவர்கள் 31.01.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் கணவரும் ராஜகாந்தன் (ராஜன் - கனடா), அமரர் ராஜநேசன், ராஜமோகன் (மோகன்- ஜேர்மனி), நந்தினி (கனடா) ஆகியோரின் தந்தையும் தனம்(கனடா), ஜெமிலா(கனடா), காவேரி(ஆஷா- ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் ஜெரோனி, கீர்த்திகா, ராதிகா, கரிகரன், தீபிகா, ரஜீவன், ரதீசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(46378)(21.16.17)

தகவல்:
க.கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரதினத்தன்று ஹர்த்தால் சோபையிழந்த திருமலை—

திருகோணமலை பிரதேசத்தில் நேற்றைய தினம் ஹர்த்தால், கடை அடைப்பு என்பன இடம்பெற்றுள்ளன.



திருமலை நகரின் நேற்றைய காட்சி

ஹர்த்தாலுக்கான ஏற்பாட்டினைத் திருகோணமலை மாவட்ட மக்கள் எழுச்சிப் படையணி மற்றும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வு அமைப்பு என்பன மேற்கொண்டிருந்தன. இந்த ஹர்த்தால் காரணமாக திருகோணமலை நகரம் சோபை இழந்து காணப்பட்டது. குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் கடத்தப்பட்டமையைக் கண்டித்தும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ளவிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை முறியடிப்பதற்காகவே நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவித்தும் -

ஊடகவியலாளர் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் -

58ஆவது சுதந்திர தினத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனையும் தெரிவித்தே இந்த ஹர்த்தாலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டதாக இந்த அமைப்புகள் விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே தமிழ் மக்கள் பேரவைப் பிரதிநிதிகளுக்கும் கிழக்குப் பிராந்திய பொலீஸ் மா அதிபர் மற்றும்

**திருமலை மடல்**

அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை திருகோணமலையில் உள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபர் பணிமனையில் இடம்பெற்றுள்ளது. தமிழ்மக்கள் பேரவையின் சார்பில் பேரவையின் தலைவர் என்.விக்னேஸ்வரன் தலைமையிலான பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பின்போது ஆலயங்களுக்கு அண்மையில் உள்ள படையினரின் காவலரண்களை 50 யார் தூரத்திற்கு அப்பால் கொண்டுசெல்ல பிரதிப் பொலீஸ்மா அதிபர் இணக்கம் தெரிவித்ததாக விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## ஆலயங்களுக்கு அருகிலுள்ள காவலரண்களை பின்னகர்த்த பொலீஸ் அதிகாரி இணக்கம்

இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கான தொடர்புகளை மேற்கொள்ளும் வகையில் இரண்டு உதவிப் பொலீஸ் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே - திருகோணமலை துறைமுகப் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் தாக்குதல் சம்பவத்தினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மீன்பிடித் தடையால் மீனவர்கள் பெரும் பாதிப்பினை அடைந்து வருவதாகவும் இந்தத் தடையினை நீக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், இவ்வாறு கோரிக்கை விடுத்த போதும் இது தொடர்பான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை - ஆழிப் பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு தங்கள் வீடுகளை இழந்து தற்காலிக இல்லங்களில் வாழ்ந்து வரும் மக்கள் தங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தற்போது அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருகின்றன என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரி வருகின்றனர். ★

**சங்கீத்**

# ஹர்த்தாலால் தென்தமிழீழம் கடந்த வாரம் களையிழந்தது

ஹர்த்தால் காரணமாக தென்தமிழீழப் பிரதேசம் கடந்த வாரம் களையிழந்து காணப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை, செய்தியாளர் சுகிர்தராஜன் கொல்லப்பட்டமை போன்ற காரணங்களை முன்வைத்தே இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

குறிப்பாக, மூவினமக்களும் செறிந்து வாழ்கின்ற அம்பாறை மாவட்டம் கடந்த வெள்ளியன்று ஹர்த்தால் காரணமாகப் பூரணமாகச் செயவிழந்திருந்தது. அதனால் அன்று அம்பாறை நகரில் நடைபெறவிருந்த 'மிக்ஸ் மீடியா போரத்தின்' ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம் பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப்பட்டது.

கருணாகுழுவினருடனான தொடர்புகளைத் துண்டிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரமொன்றும் கடந்த வாரம் தென்தமிழீழம் எங்கும் பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தது. ''எச்சரிக்கிறோம்'' என்ற தலைப்பில் ''அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை'' என்ற பெயரில் அப்பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

தமிழர் தாயகப் பகுதியில் செயற்படும் சிங்களப் படையினருடனும் அவர்களுடன் இயங்கும் தமிழ்த்தேசிய விரோதிகளான கருணா குழுவினருடனும் தமிழ்பேசும் மக்கள் எந்தத் தொடர்புகளையும் வைத்திருக்கக் கூடாது என்றுஅப்பிரசுரத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மேற்படி குழுக்களுக்கு புகலிடம் அளிப்பவர்களுக்கும் தண்டனை வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முஸ்லிம் மக்களுக்கும் அதில் ஓர் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. ''கடந்த கால தவறுகளை மன்னிக்கிறோம். இனிமேலும் உங்கள் பிரதேசங்களில் கருணா குழுவினரின் நடவடிக்கைகளுக்கு இடமளித்து, மீண்டும் இன மோதல்களில் ஈடுபடவேண்டாம். கருணா குழுவினருடனான அனைத்து உறவுகளையும் துண்டிப்பதோடு அவர்களுக்குப் புகலிடம் அளிக்கவேண்டாமென அன்புடன் வேண்டுகிறோம்.

இனவாதம் பேசும் குறுகிய நோக்கம் கொண்ட சுயநல அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகச் செயற்படாது தமிழ் முஸ்லிம் இன உறவை தொடர ஒத்துழைப்பை நாடுகிறோம்'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட கடந்த வாரத்தில் ஏட்டிக்குப் போட்டியாக தமிழ், முஸ்லிம் தரப்புகளிடையே மீண்டும் இனமுறுகலை ஏற்படுத்தக்கூடிய மிக மோசமான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்தநிலையில், அறுவடை ஆரம்பமாகியிருப்பதால் பெரிதாக ஹர்த்தால், கடையடைப்புத் தொடர வாய்ப்பில்லை.

அறுவடை என்றதும் இணைந்த அறுவடை இயந்திரங்கள் இம்முறை கூடுதலாக அம்பாறை மாவட்டத்துக்கு தருவிக்கப்பட்டுள்ளன. சுமார் 40 லட்சம் ரூபா வரை ஓர் இயந்திரத்திற்குச் செலவாகுமென்பது ஞாபகத்திற்கு வருகிறது. இதனால், அறுவடைத் தொழிலாளர்களுக்கு இருந்துவந்த 'மவுசு' குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆழிப்பேரலை நிவாரணம் கிடைக்கப்பெற்ற பிற்பாடு தொழிலாளிகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவியமையும் இங்குசுட்டிக்காட்டப்படவேண்டும்.

## நிவாரணம் வழங்குவதிலும்— இனங்களுக்கிடையில் பாரபட்சம்— மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

**செயலிழந்த பிரதேச செயலகம்**

நிந்தவூர் பிரதேச செயலகம் தாக்கப்பட்டதன் எதிரொலியாக அங்கு கடமையாற்றிய அனைத்து ஊழியர்களும் கடந்த ஒரு வார காலமாக காரைதீவு பிரதேச செயலகத்தில் கையொப்பமிட்டு விட்டு வீடு திரும்புகின்றனர்.

கடந்த மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது நிந்தவூர் பிரதேச செயலகம் தாக்கி சேதமாக்கப்பட்டமை தெரிந்ததே.

அங்கு கடமையாற்றிய பிரதேச செயலர்

**அம்பாறை மடல்**

எஸ்.எல்.எம். ஹசீமுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் பிரதேச செயலகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. கடந்த ஒரு வாரகாலமாக எந்தவொரு செயற்பாடும் இடம்பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

பதில் பிரதேச செயலாளராக எஸ்.இராமகிருஷ்ணன் செயலாற்றினார். இந்தநிலையில், கடந்த முதலாம் திகதி புதன்கிழமை அம்பாறை அரச அதிபர் ஹேரத் அபேதீர காரைதீவு பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்து, நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர்களுக்கு கூட்டமொன்றை நடத்தினார்.

கரையோரப் பிராந்திய மேலதிக அரச அதிபர் யூ.எல்.ஏ.அசீஸ், நிந்தவூருக்கு நியமிக்கப்பட்டுள்ள இறக்காமம் பிரதேச செயலாளர் ஜனம் ஹனிபா ஆகியோரும் இதில் சமுகமளித்திருந்தனர்.

நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர்கள் தமக்குரிய பிரச்சினைகளை அரச அதிபரிடம் விலாவாரியாக எடுத்துக்கூறினர்.

நாளை திங்கட்கிழமை நிந்தவூர் பிரதேச செயலகத்தை இயக்கவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென அரச அதிபர் இந்தச் சந்திப்பில் கேட்டுக்கொண்டார்.

நிந்தவூர் [illegible] புதிய பிரதேச செயலர் ஜனாப் [illegible] பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹனிபா ஏலவே கடமையாற்றிய இறக்காமப் பிரதேச செயலகத்திற்கு நிந்தவூர் பிரதேச செயலராகவிருந்த எஸ்.எல்.எம். ஹசீம் கடந்த முதலாம் திகதியிலிருந்து பரஸ்பரம் இடம்மாறிச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பிரதேச செயலர் ஹசீம் மாவட்டத்தைவிட்டு கொழும்பு செல்ல, அரச அதிபரிடம் கேட்டுள்ளதாகவும் அதற்கு சிபார்சு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. எனினும் திங்களன்று பிரதேச செயலகத்தைப் பூரணமாக இயக்க முடியாது. ஏனெனில், அங்குள்ள தளபாடங்கள், ஆவணங்கள் எல்லாம் சேதமாக்கப்பட்டிருந்தன. படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பலாமென தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சாய்ந்தமருதில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிலர் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறிகல்முனைமனித உரிமை ஆணைக்குழுப் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர்.



ஹர்த்தாலினால் வெறிச்சோடிய அம்பாறை பொதுச்சந்தை

அம்முறைப்பாடுகளுக்கான விசாரணை கடந்த வியாழக்கிழமை மனித உரிமை ஆணைக் குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் இரா. மனோகரன் முன்னிலையில் பல மணி நேரம் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலகம் சார்பாக உயரதிகாரிகள் சிலர் இதில் கலந்துகொண்டு பதிலளித்தனர். ஓய்வுபெற்ற உபதபாலதிபர் பீ.எம்.ஏ.ஜப்பார் தலைமையிலான நூறுபேர் கொண்ட குழுவினர்சாட்சியளித்தனர். 200 மீற்றருக்கு அப்பால் பாதிக்கப்பட்டிருந்தும் வீடமைப்பு மானிய நன்கொடை வழங்க மறுப்பதாகக் கூறிப் பெரும்பாலான முறைப்பாடுகள் பதியப்பட்டிருந்தன.

''முதலாம் கட்டக் கொடுப்பனவு கூட மறுக்கப்பட்ட [illegible]ல் மேலதிக அரச அதிபர் [illegible] அசீஸிடம் முறையிட்ட போதும் எவ்வித பதிலுமில்லை; பயனுமில்லை. வேறு வழியில்லாமல் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளோம்'' என்று அம்மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, ஆழிப்பேரலை அகதிகளுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ்வழங்கப்பட்ட கோதுமை மா விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்டவேளை, கல்முனைப் பொலீஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கல்முனையில் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

உலக உணவுத்திட்டத்தின் கீழ் அம்பாறை அரச அதிபரால் வழங்கப்பட்ட மாமூடைகளை ஏற்றிக்கொண்டு கல்முனையை அடுத்துள்ள பெரியநீலாவணைக்கு லொறியொன்று சென்றுள்ளது.

அங்கு சென்ற மறுகணம் அதே லொறி கல்முனையை நோக்கி திரும்பிச் செல்வதைக் கண்ணுற்ற மக்கள் சந்தேகம் கொண்டு கல்முனைப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர், பொலீஸாரும் உஷாரானார்கள்.

அவர்கள் பாண்டிருப்பு வீதிச் சோதனைச் சாவடியில் லொறியை மடக்கிப் பிடித்த போது பல உண்மைகள் வெளியாகின.

கல்முனை ப.நோ.கூ.சங்கமூடாக பெரிய நீலாவணை ப.நோ.கூ.சங்கக் கிளைக்கு 260 மூடை மா கொண்டுசெல்லப்பட்டதாகவும் அதில் 100 மூடையைக் கல்முனை வர்த்தகர் ஒருவருக்கு விற்றதாகவும் அதனைக் கையளிக்க கொண்டு செல்கையில் அது மாட்டியதாகவும் தகவல்கள் வெளிவந்தன.

கல்முனைத் தலைமைப் பொலீஸ் அதிகாரி விஜயதிலகவின் கட்டளையின் பேரில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் எம்.கே.இப்னு அசார் தலைமையிலான பொலீஸ் குழுவினர் அதிரடி நடவடிக்கையில் இறங்கியதன் பேரில் 100 மூடை மாவுடன் லொறி கைப்பற்றப்பட்டது. ★

**ராஜபுத்திரன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கற்கைகள்

## மார்க்கோனியின் நாடு தழுவிய தபால்மூல கற்கைகள்

**01. Dip in Electronic Technology**
Basic, Tr& IC Cicuit Designing, Remote & Transmitting, Radio, TV, VCD & DVD, (VCD) 5 months, Full Fee - 2000/= (100 0 + 1000 பகுதிகளாக செலுத்தலாம்)

**02. Dip in Cellular Technology**
Batteries, AF & RF, G.S.M Networks, Softwares & Hardware Components, Diagrams, Tools & Cables, Total Phone Service, (VCD). 3 months, Full Fee - 1400/= (1000 + 400)

**03. Dip in AC & Refrigeration**
Thermo studies, Needed Wiring, Gas Filling, Total Studies of Repairs & Servicing of Window & Split AC, Package Plant, Central Plant, (VCD). 2 months, Full Fee - 1400/= (1000 + 400)

**04. Dip in Electrical Wiring**
Electricity, AC Meters, Tools, All Type of MCB's, All phase wiring, Capacitors, Timers, Surge Arrestors, Home & Building Wiring, (VCD). 3 months, Full Fee - 1400/= (1000 + 400)

**05. Dip in Fan & Motors Rewinding**
AC & DC Electricities, AC capacitors, Needed Instruments, Total Rewinding Theory, Fan, Grinder, 3 Phase Motors, Generators, (VCD). 3 months, Full Fee - 1400/= (1000 + 400)

**06. Dip in Computer Hardware**
Basic Electronics, IC & Processors, Hardware PCB's, OS Installation, BIOS Setup, Mother Board & PS Check up & Service, Basic Networking, (VCD). 3 months, Full Fee - 1000/= (500 + 500)

**07. Dip in Computer Equipments Repairing**
Electronics, Repairing & Servicing of Printer, Scanner, Monitor, Power supply, UPS, Woofer, Floppy, CD & DVD Reader and Writer, (VCD). 4 months, Full Fee - 1800/= (1000 + 800)

**08. Dip in Auto Mobile Technology**
Mechanical Engineering, Oil Properties, Diesel & Petrol Engines, Total studies of auto motion, All mechanical parts, Total Service, (VCD) . 3 months, Full Fee - 1400/= (1000 + 400)

**09. Dip in Satellite Antenna Installation**
Basic Electronics, Satellite Names, Bands & Covered area, Transmitting & Receiving, Designing & Installing Antenna, Channel Tuning, (VCD). 3 months, Full Fee - 1400/= (1000 + 400)

கட்டணத்தினை நேரடியாக அல்லது வங்கியூடாக அல்லது மணியோடர் மூலமாக செலுத்தலாம். HNB Bank - **0090651986**, Commercial Bank - **8100025135**. Name - Marconi Technical Institute, Branch - Wellawatte, Account Type - Saving Account. மணிஓடர் பத்திரமாயின் பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatte Post office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. Bankல் அல்லது Post office ல் பெற்ற ஒரிஜினல் பற்றுச் சீட்டையும், தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் **பதிவுத் தபாலில்** அனுப்புதல் வேண்டும்.

அனைத்து கற்கைகளுக்கும் பாட அலகுகளை விட மேலதிகமாக வீடியோ செய்யப்பட்ட வெவ்வேறு **VCD** படத்தட்டுக்களும் அனுப்பப்படும். இதன் மூலம் மாணவர்கள் நேரடியாக வகுப்பில் பயிற்சியில் ஈடுபடுவதைப் போன்ற அனுபவத்தைப் பெறமுடியும். மேலதிக தகவல்கள் தேவையாயின் ரு 5 முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக நீள கடித உறையை வைத்து அனுப்பவும்.

அண்மையில் சேர்க்கப்பட்ட கற்கைநெறிகளுக்கு தகுதியான தொழில்நுட்ப ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அனைத்து கற்கைகளிலும் வழமையான மார்க்கோனியின் தபாற் கற்கைகளுக்குரிய தனித்தன்மை பேணப்படும் (தரம், முழுவிளக்கம், சந்தேகம் தீர்த்தல்).

**MARCONI TECHNICAL INSTITUTE** We Open All Days
410, 2nd Floor, Galle Road, Wellawatta.TP: 2361362, marconiinstitute.com


### தம்பாட்டியில் கடலுணவு பதப்படுத்தல் பயிற்சி

குருநகர்,பெப்.5

ஊர்காவற்றுறை, தம்பாட்டிப் பகுதியில் அநாதரவான நிலையில் உள்ள பெண்களுக்கான கடலுணவு பதப்படுத்தல் பயிற்சிநெறி வகுப்பு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கு சுமார் 20 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் சுமார் 20 நாள்கள் வரை இப்பயிற்சி நெறி வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-51)

### கலந்துரையாடல்

குருநகர், பெப் 5

கட்டட ஒப்பந்தக்காரர்களுடனான மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

(எ-51)


## வாடகைக்கும் விற்பனைக்கும்

நெல்லியடியில் கடை ஒன்று கண்ணாடி பிற்றிங்குடன் வாடகைக்கு உண்டு. விரும்பினால் A.C பிற்றிங்குடன் சேர்த்தும் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு கணனிகள், ரெலிபோன் பூத், போட்டோக் கொப்பி மெசின் என்பனவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777251281 (சி-47711)
0779582288

**COLLEGEVIEW International**



Special classes for Spoken English & IELTS

Basic Qualification G.C.E. (O/L)

Your VISA to the World

**STUDY IN LONDON**
CANADA, MALAYSIA, SINGAPORE
SWITZERLAND,CYPRUS & INDIA

Available Courses

- Management
- Business Ad. (BBA, MBA, Phds)
- Marketing
- HRM
- Law
- Computer Science
- IT Networking,
- Pattern Designing & Textile
- Nursing etc.
- Hotel Management
- Travel & Tourism
- Engineering (Aerospace, Electrical & Electronical etc...)
- Medicine
- Dental
- Fine Arts
- Beauty Culture
- Shipping Courses,

All Courses are available in any field

# February & may Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

# பகுதிநேர வேலைவாய்ப்பு.

# இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்

**COLLEGEVIEW International**
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk


## மரண அறிவித்தல்

### வீரவாகு செல்லையா



காரைநகர், வாரிவளவைச் சேர்ந்த வீரவாகு செல்லையா அவர்கள் 01.02.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு - கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பேரம் பலம் இளையபிள்ளையின் மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சுப்பிரமணியம், தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசரத்தினம் (வவுனியா), பாலாமணி, கணேசலிங்கம் (லண்டன்), சாவித்திரிதேவி, சாரதாதேவி, லோகேஸ்வரன் (லண்டன்), லோகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற தனபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகாந்தி, வரதராசா , தங்கபுஷ்பம் (லண்டன்), தர்மலிங்கம், சிவகுமார் (நவாலி), மகிந்தன் (லண்டன்), அனுசியா (லண்டன்) ஆகியோரின் மாமனும் பிரணவன், பிரசாந்தன், பிரகலாதன், பிரநீதன், திருவரங்கன், சிறிரங்கன், வாரீசன், ரம்யா, வினித், வித்தியாதரன், கௌரிதரன், ஆரணி, குணரதன், சிவகஜன், சிவசொரூபன், அபிசன், ஆரூரன், அபிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.02.2006) ஞாயிறு காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வாரிவளவு, தகவல்:
காரைநகர் மனைவி, மக்கள்,
தொ.பே:0776549791 மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம்,பெப்.5

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளையின் நினைவு விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி மேலதிக பீடாதிபதியும், மேற்படி கல்லூரியின் பழைய மாணவனுமான எஸ். கே.யோகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு "புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை விருத்தியாக்கும் பிரயோகங்கள்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

(எ-72)

## மின்வழங்கக் கோரி கி.அபி.சங்கம் மகஜர்

வலி. தென்மேற்கு, பெப். 5

மாகியப்பிட்டி, கொம்பனிப்புலம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாகியப்பிட்டி கிராம அபிவிருத்தி சங்கம் இலங்கை மின்சாரசபை, யாழ். பிராந்திய பொறியலாளரிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

பின்தங்கியுள்ள நிலையிலுள்ள இக்கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு மின் விநியோகம் அவசியம் தேவைப்படுவதாகவும் - ஆகவே விரைவில் மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகளை செய்து உதவுமாறு மேற்படி கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

(எ-135)


## சாரதி தேவை

கொழும்பு சென்று வருவதற்கு அனுபவமுள்ள லொறிச் சாரதி தேவை

**பேப்பர் ஹவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-47708)

HUMEDICA LANKA
INTERNATIONAL SCHOOL
MANIPAY

**WANTED**

a) **VICE - PRINCIPAL,**
*A STRICT DISCIPLINARIAN*
*A GRADUATE/ FLUENT IN ENGLISH.*

b) **THE GRADUATE TEACHERS**
*ATTRACTIVE SALARY*
*APPLY WITH BIO DATA*

**DIRECTOR HUMEDICA**

INTERNATIONAL SCHOOL MANIPAY — SCHOOL WITH A DIFFERENCE — humedica

(46349)

**G.C.E (O/L)** இன் பின்னர்...... தெரிவு செய்ய வேண்டிய மிகச் சிறந்த பாதை

**FOUNDATION DEGREE PROGRAMME**

- மிகக்குறுகிய காலத்தில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட தகைமைகள்
- தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் பரந்துபட்ட பயிற்சி நெறி
- UK, Canada, Australia, New Zealand போன்ற நாடுகளில் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அடிப்படை பாடநெறி
- வெளிநாடுகளில் உயர்கல்வியை தொடர்வதற்கான Student Visa வினை பெற்றுக்கொள்ளஅவசியமான தராதரங்களை வழங்கும் கற்கை நெறி

- O/L பரீட்சையின் பின்னரான ஓய்வு காலம், **Foundation Degree Programme** இனை பயில்வதன் மூலம் பயன்படுகிற போது உங்கள் எதிர்கால வாழ்வுக்கான வளமான அடித்தளம் இடப்படுகின்றது.
- பாடப்பரப்பு
  - Information Technology
  - English Communication
  - Personality & Skills Development
- பாடநெறிக்காலம்
  3 மாதங்களைக் கொண்ட முழு நேர பாடநெறி
- கற்கை நெறியின் பயன்பாடு
  1. உடனடி வேலை வாய்ப்பு
  2. உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வி

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25 A, Hospital Road, Dehiwala. Tel : 011 5518666, 0777 715788

GoodWIN Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஜுரத்தில் திணறும் தமிழகம்

தமிழகத்தில் மீண்டும் மூன்றாவது அணி பற்றிய எண்ணம் துளிர்விடுகிறதாம். இலங்கையில் செயற்படும் தமிழீழ தேசியக்கூட்டமைப்பு போல்தமிழகத்திலும் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று பழநெடுமாறன் தலைமையில் நடைபெற்ற தமிழீழ ஆதரவாளர்கள் கூட்டத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. அப்போது அதிமுக, தி.மு.க., அல்லாத மூன்றாவது அணியை அமைக்கவேண்டும். ஏற்கனவே டாக்டர் இராமதாஸும் திருமாவளவனும் இணைந்து ஏற்படுத்திய தமிழ்ப்பாது காப்பு இயக்கத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அதே போல தேர்தல் நேரத்திலும் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்த மூன்றாவது அணியை ஏற்படுத்த வேண்டும் என்று அழுத்தமாகப் பேசப்பட்டதாம்.



இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தியும்,கருணாநிதியின்

## வை.கோ. முதல்வராக ஆதரவு

மகள் கனிமொழியும் இணைந்து'கருத்து' என்ற இணையத் தளத்தை நடத்துகின்றனர். இதில் தமிழகத்தின் அடுத்த முதல்வர்பத விக்கு தகுதியான நபர் யார்? என்று கருத்துக் கணிப்பு இடம் பெற்றது. வைகோ அடுத்தமுதல்வராகத் தகுதி பெற்றவர் என 70 சதவிகிதம் பேர் ஆதரவு தெரிவித்தனர்.

வைகோவிடம் தான் இளைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் அவர் பெரிய சக்தியாக இருக்க மாட்டார் என்றாலும் எதிர்காலத்தில் பெரிய சக்தியாக மாறுவார். தி.மு.க.வில் பெரும் பகுதியினர் அவர் தலைமையை ஏற்பார்கள் என்ற ரீதியில் வைகோவுக்கு ஆதரவு இருந்ததாம்.

கருணாநிதிக்கு வயதாகிவிட்டது. அவர் இளைய தலை முறையினருக்கு வாய்ப்புக் கொடுத்துத் தேர்தல் ,அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளவேண்டும் என்று சிலர் கருத்துச் சொல்லியிருந்தார்களாம். ஜெயலலிதா பற்றி பேச்சே இல்லையாம். என்ன நடந்ததோ தெரியவில்லை. கடந்த 18ஆம் திகதி முதல் இந்தக் கருத்துக் கணிப்பை யாரும் பங்கெடுக்க முடியாதபடி நிறுத்திவிட்டனர்.

தேர்தல் ஜுரத்தில் திணறிக்கொண்டிருக் கிறது தமிழகம். எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத ஆரம்பத்தில் தமிழக சட்டசபைக்கு சட்டமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய உள்ளனர். தமிழக மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தமிழக முதல்வரை தீர்மானிப்பார்கள்.



அடுத்து ஆட்சி யார் கையில் என்பதே தமிழகத்தின் பெறுமதிமிக்க கேள்வியாகி உள்ளது. இதனால் அரசியல்வாதிகளின் பார்வைகளுக்கும் சிறு அசைவுகளுக்கும் கூட ஆயிரம் அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன.

வாக்காளர் பட்டியல் மீளமைப்பு, வாக்களிப்புக்கான ஏற்பாடு, தேர்தல் திகதி வரையறை என்று தேர்தல் ஆணையகம் முழு வீச்சில் ஒருபுறம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மறுபுறம் அரசியல் தலைவர்கள் வெற்றிக்கான வியூகங்களை வகுப்பதையே முழுவீச்சாக கொண்டிருக்கிறார்கள். தமிழ் திரையுலகைச் சேர்ந்தவர்களான நடிகர் விஜயகாந்த், நடிகர் கார்த்திக் ஆகியோர் கட்சித் தலைவர்களாக புதிய அவதாரம் எடுத்துள்ளமை வேறு பரபரப்பை அதிகப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியின் ஒற்றுமை காக்கப்படுமா? அல்லது அதில் குழப்பம் ஏற்பட்டு கூட்டணி மாறி ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் அதிகரிக்குமா? என்பதே தமிழக அரசியல் களத்தில் அலைமோதும் கேள்விகள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைவர் கருணாநிதி வைகோ வின் ம.தி.மு.க, டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி உட்பட பிராந்தியக் கட்சிகளையும் காங்கிரஸ் கட்சியையும் இணைத்து ஏழு கட்சிக் கூட்டணியை அமைத்தார். இக் கூட்டணியை ஆட்சியிலிருந்து அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா கிள்ளுக் கீரையாக நினைத்தார். ஆனால் அக் கூட்டணி அனைத்துத் தொகுதிகளிலும் வென்று ஜெயலலிதாவுக்கு மரண அடியைக் கொடுத்தது. அந்த அனுபவப் பாடத்தை மறந்து, மீண்டும் தவறிழைக்க அவர் தயாராகவில்லை.

### அனுபவப் பாடங்கள்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.கவையும், பா.ம.கவையும் ஒதுக்கிவிட்டு வாங்கிய அடியை கருணாநிதியும் மறக்கவில்லை. அதனால் தி.மு.க. கூட்டணியில் சிறுவிரிசல் கூட வந்து விடாதபடி கவனமாகவிருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலையில் தி.மு.க. கூட்டணியை உடைப்பதில் ஜெயலலிதாவும் அதனை முறியடிப்பதில் கருணா நிதியும் தமக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் செய்து வருகின்றனர்.



தேர்தல் சமீபத்து வரும் வேளையில் புது அணியொன்றை உருவாக்கும் திட்டத்தில் ஜெயலலிதா முனைப்புக் காட்டுகிறார்.

நடிகர் விஜகாந்தின் தேசிய முன்னேற்ற திராவிடர் கழகம், நடிகர் கார்த்திக் முக்கிய பொறுப்பேற்றுள்ள 'போர் வேர்ட் பிளக்' கட்சி ஆகியவற்றையும் ஏற்கனவே தி.மு.கவுடன் அதிருப்தியில் இருப்பதாகக் கூறப்படும் வைகோவின் ம.தி.மு.க., கூட்டணி குறித்து இன்னும் முடிவுசெய்யாத திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவற்றையும் இணைத்து புதிய அணியாகக் களமிறங்க ஜெயலலிதா பிரயத்தனம் செய்து வருகிறார்.

இதனைச் சாதித்துக்காட்ட அவர் களமிறக்கியுள்ளவர் - அவரது உயிர்த்தோழி - உடன் பிறவா சகோதரி சசிகலாவின் கணவர் எம்.நடராஜன். இதில் ஓரளவு நடராஜன் வெற்றிபெற்றுவிட்டார் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### ஜெயலலிதாவுக்கு சாதகம்

கடந்த பொங்கல் தினத்தையொட்டி தஞ்சாவூரில் இரண்டு நாள்கள் பொங்கல் விழா நடத்தினார் நடராஜன். பிரமாண்டமாக நடத்தப்பட்ட இந்த விழாவில் ம.தி.மு.க. அவைத் தலைவர் எல். கணேசன், விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன், 'போர்வேர்ட் பிளக்' கட்சிப் பொதுச் செயலாளர் பதவியேற்றுள்ள நடிகர் கார்த்திக், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிபோன்றவர்களும் கலந்து கொண்டனர். தி.மு.க. கூட்டணியை உடைப் பதில் ஜெயலலிதாவுக்கு சாதகம் கிடைத்திருப்பதைக் காட்டுவதாக அ.தி.முக. மாவட்டச் செயலாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால், இதனை ஏற்க தி.மு.க.வினர் தயாராக இல்லை. நடராஜன் தி.மு.கவைத் தவிர பிற கட்சித் தலைவர்களுடனும் தோழமை கொண்டிருப்பவர். அவர் அழைத்ததின் [illegible] தி.மு.க. கூட்டணிக் கட்சி[illegible] கள் பொங்கல் விழாவில் கலந்துகொண்டனர். அதனால் அவர்கள் தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகிவிட்டார்கள் என்றெல்லாம் கருதத் தேவையில்லை என்கிறார் தி.மு.கவின் நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஒருவர்.

### சலுகைகள்

கூட்டணிக் கட்சிகளை நம்பியிருக்காமல் தமிழக அரசின் ஊடாக சலுகைகளை அள்ளிக் கொட்டி பொது மக்களைக் கவர முயற்சிக்கிறார் முதல்வர் ஜெயலலிதா.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வென்று ஜெயலலிதா முதல்வரான பின்னர், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், வீதிப் பணியாளர்கள் ஆகியோர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுத்தார். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களைக் கூண்டோடு வீட்டுக்கு அனுப்பினார். தொழிற்சங்கத் தலைவர்களை ஆண், பெண் வித்தியாசமின்றி நள்ளிரவில் வீடு புகுந்து கைதுசெய்தது தமிழகப் பொலீஸ்.

சுமார் 70 ஆயிரம் வீதிப் பணியாளர்களை ஒரே உத்தரவில் வேலையிழந்து வீட்டுக்குச்செல்ல வைத்தார் முதல்வர் ஜெயலலிதா. இதனால் வறுமை காரணமாக சுமார் 70 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்று இன்றும் குற்றஞ் சாட்டுகிறது தி.மு.க.

நெசவாளர்களும் அ.தி.மு.க. அரசால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களையெல்லாம் சமாதானப் படுத்த விசைத்தறியாளர்களுக்கு மின்கட்டணம் குறைப்பு, அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள், சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி நியமனம் என்று அள்ளி வழங்கிவருகிறார் ஜெயலலிதா.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டும் சும்மா இருப்பாரா? மார்ச் மாதம் தி.மு.க. மாநில மாநாட்டைத் திருச்சியில் நடத்தி தமிழகத்தின் கவனத்தைத் தம் பக்கம் திருப்பத் திட்டமிட்டுள்ளார். 'சன்' தொலைக்காட்சியின் துணையுடன் ஜெயலலிதாவின் சலுகை அறிவிப்புகளுக்குப்பதிலடி கொடுக்கவும் ஆரம்பித்துவிட்டார்.

வழக்கமாகத் தொகுதி பங்கீட்டில் கடுமையாக இருப்பவர் என்று கருதப்படும் கருணாநிதி சமீபகாலமாகத் தோழமைக் கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசிவருகிறார் என்றார் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர்.

'சன்' தொலைக்காட்சியின் தொல்லையைச் சமாளிக்க அந்த நிறுவனத்தைச் சட்ட நடவடிக்கைகள் மூலம் மடக்க ஜெயலலிதா காய்நகர்த்துகிறார். அதற்குப் பதிலடியாக மத்திய அரசின் கீழ் செயற்படும் வருமான வரித்துறையினரை அ.தி.மு.கவினர் மீது பாய வைத்திருக்கிறார் கருணாநிதி என்கின்றனர் ஆய்வாளர்கள்.

### கோஷ்டிகளை உருவாக்கத்திட்டம்

தி.மு.க. கூட்டணியை உடைக்கமுடியாவிட்டால் கூட்டணியில் உள்ள கட்சிகளில் கோஷ்டிப் பூசலை உருவாக்கி, கூட்டணிப் பலத்தைக் கலகலக்க வைக்கவும் ஜெயலலிதா திட்டமிட்டுள்ளார் என்று தமிழக அரசு அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள்




கட்சியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் நால்வர் அ.தி.மு.கவுக்குக் கட்சி தாவியதை அந்த அதிகாரி தனது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்.

இதற்கென வடமாநிலத் தலைவர் ஒருவர் ஊடாக பல கோடி ரூபா பணம் கொண்டு வரப்பட்டு 'கோல்டன் மிடாஸ்' என்ற மதுபானத் தொழிற்சாலையில் பதுக்கப்பட்டிருந்ததாகவும் இது தெரிந்த கருணாநிதியே வருமான வரித்துறை அதிகாரிகளை ஏவி அங்கு சோதனையிட வைத்தார் என்றும் -

ஆனால், மொத்தப் பணத்தில் சிறு தொகையையே அதிகாரிகளால் கைப்பற்ற முடிந்ததாகவும் -

பெயர் குறிப்பிட விரும்பாத காவல் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆக, மொத்தத்தில் தேர்தல் ஜுரம் வாக்களிப்பு நெருங்கும் போது குலைப்பன் காய்ச்சலாகிவிடும். அதில் தப்பிப் பிழைப்பவர்கள் யார்? தவறப்போகிறவர்கள் யார்? என்பது மக்கள் என்ற மருத்துவர் கையிலேயே உள்ளது.

*

## சிவனொளிபாதமலை யாத்திரிகளுக்கு 'சித்தாலேப' நிறுவனம் இலவச முதலுதவி



சிவனொளிபாத மலையில் ஏறும் யாத்திரிகர்களின் நன்மை கருதி 'சித்தாலேப' நிறுவனம் இலவச முதலுதவி சேவையை ஆரம்பித்திருக்கிறது.

தொடர்ந்து 28 வருடங்களாக இலவச முதலுதவிச் சேவையை வழங்கி வருகின்ற இந்த நிறுவனம் தற்போது சிவனொளிபாத மலை யாத்திரிகர்களுக்கான சேவையையும் ஆரம்பிக்கின்றது.

கங்குல தன்னவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்தாலேப வைத்திய நிலையத்தில் அனைத்து முதலுதவிச் சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வுக்கு அடிப்படையான ஆதாரங்கள் இன்றி இடர்படும் மக்கள்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங் களில் ஒன்று பள்ளிக் குடா. கடற்கரைக்கு சமீபமாக உள்ள இந்தக் கிராமத்தில் அகதி முகாம் ஒன்றில் 164 குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்த முகாமில் உள்ள மக்களின் நிலைமை மிகவும் மோச மானது; பரிதாபத்துக்குரியது. மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு ஏற்ற எந்தவோர் அடிப்படை கட்டுமானங்களும் - புற நிலை களும் இல்லா - ஓர் இடத்தில் குடியமர்த்தப் பட்டிருக்கின்றன இந்த 164 குடும்பங்கள்.

கொடிய யுத்தத்தினால் ஏதிலிகளாகி இருப்பிடம் இழந்து போன இந்தக் குடும்பங்களில் சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தைகள் உட்பட ஏராள மானவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இல்லை...



மழை வெள்ளம்சூழ்ந்த நிலையில் குடிதண்ணீர்க் கிணறு.

இல்லை... வாழத்துடித்துக்கொண்டுகிறார்கள்.

சுற்றிலும் புற்றைகள், முட்புதர்கள். நிலத்தின் அமை விடமோ மிகவும் தாழ்வானது. இங்கு சிறு சிறு குடிசைகள், கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு மழைபெய்தால் அவ்வளவு தான். சுற்றும் முற்றும் ஒரே வெள்ளக் காடாகக் காட்சிதரும்.


**வன்னிமடல்**

குடிசைகளும் கூடாரங்களும் வெள்ளத்தில் மிதக்கும். எனினும் அங்குள்ள மக்கள் செய்வதறியாது - மாற்று வழி புரியாது மழைநீருக்கு நடுவே தமது வாழ்க்கைப் படகை வலிந்து இழுத்துக்கொண்டே இருக் கிறார்கள்.

**குடிதண்ணீர் வசதி மருந்துக்கும் இல்லை!**

குடிதண்ணீர் வசதிகள் இங்கு சிறிதளவும் கிடையாது. அதற்கான கிணறு வசதியோ குழாய் மூலம் நீர்பெறக் கூடிய வாய்ப்போ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இத னால் அங்குள்ள மக்கள் குடிதண்ணீர் பெறு வதற்கு சுமார் 200 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள சேவையர் தோட்டம் என்னும் பகுதிவரை செல்ல வேண்டி யிருக்கிறது. அங்கு இருப் பது ஒரே யொரு கிணறு மட்டுமே.

மழை காலத்தில் அந்தக் கிணற் றைச் சுற்றி மழைநீர் தேங்கி நிற்கிறது. கிணற்றுக்கு உள்ளேயும் கூட அந்த அழுக்கு நீர் உட்புகுந்துவிடும். இவ் வாறான நிலைமைகளில் தண் ணீருக்காக இங்குள்ள மக்கள் படுகின்ற இன்னல் சொல்லிமாளாதது.



வெள்ளத்தில் மிதக்கிறது வாழ்க்கை.....

**மலசல கூடம் இல்லை!**
**இதனால் சுகாதாரக் கேடு!**

இந்த அகதி முகாமில் மலசல கூட வசதிகள் கூட இல்லை. இயற் கைக் கடன்களைக் கழிப்பதற்கு இந்த மக்கள் அருகிலுள்ள பற்றைக் காடு களை நாடிச் செல்கின்றனர்.

இதனால் அங்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் எழுந்துள்ளது.

இது ஒரு புறமிருக்க இக்குடியிருப்பைக் சூழவுள்ள காடு களிலிருந்து வெளிவரும் விஷஜந்துக்களின் தாக்கங்க ளுக்கும் மக்கள் இலக்காகின்றனர். இவ்வாறு நோய்களினால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதற் குரிய மருத்துவ வசதிகளும் இப்பகுதியில் போதியளவு இல்லை.

இங்கு வசிப்போரில் பெரும்பாலான மக்கள் கூலித் தொழில் செய்து வாழ்பவர்கள் இவர்கள் தமது அன்றாட ஜீவனோபாயத் துக்கே மிகவும் கஷ்ரப்படுகிறார்கள்.

வாழ்வதற்கான ஆதாரங்கள், அடிப்படை வசதிகள் ஏது மற்ற நிலையில் இங்குள்ள சிறார்கள் கல்வியில் பெரிதாக நாட்டம் செலுத்துவதில்லை. இந்த மக்களை இங்கு குடியி ருத்திய அரச அதிகாரிகள் கூட அங்கு சென்று அவர்களின் குறைகளைக் கேட்பதோ, அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோ இல்லை.

இன்று பல அரச சார்பற்ற நிறுவனங்களும் தொண்டர் அமைப்புக்களும் வறிய மக்க ளுக்கு ஏராளம் உதவிகளைச் செய்து வருகின்றன. எனவே அத்தகைய தொண்டு நிறுவனங் கள் பள்ளிக்குடா கிராமத்தில் உள்ள அகதி முகா மிக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கும் ஏதாவது சேவையை வழங்க வேண்டும். பெரிதாக இல்லாவிட்டாலும் கூட அடிப்படை வசதிகளான இருப்பிடம், குடி தண்ணீர், மலசல கூடம், மருத்து வம் போன்ற வசதிகளைப் போதியளவில் அந்த மக்களுக்கு ஏற்படுத்தி வழங்க முன்வரவேண்டும் அது மட்டுமன்றி தொடர்புடைய அரச திணைக்களங்களும் இவர்கள் விடயத்தில் கூடிய அக்கறை செலுத்திச் செயற்பட வேண்டியது அவசியமாகும். ✱

## பள்ளிக்குடா முகாம் குறித்து ஒரு பார்வை

*ச.உதயசங்கர்- வெள்ளாங்குளம் செய்தியாளர்.*

# கனகராயன் குளம் வீதியில் பாதுகாப்பற்ற பாலம்; புனரமைக்க எவரேனும் முன்வருவார்களா....?

வவுனியா வடக்கு, கனகராயன் குளத்திலிருந்து கரப் புக் குத்தி, பெரியமடு, குளவிசுட்டான், நெடுங்கேணி, நயினா மடு ஆகிய பகுதிகளுக்குச் செல்லக்கூடிய வீதி யில் கனகராயன் குளத்திலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத் தில் கனகராயன் ஆறு வடக்குப் பக்கமாக குறுக்கறுத்துச் செல்கின்றது.



சேதமான பாலத்தில் டிராக்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி இருக்கும் காட்சி.

இந்த ஆறு குறுக்கறுக்கும் பகுதியில் தற்காலிக பால மொன்று பாதுகாப்பற்ற முறையில் உள்ளது. இதனால், அப்பகுதியூடான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பல வாகனங்கள் தொடர்ந்தும் விபத்துக்குள்ளாகி வருகின் றன. அத்துடன், மழை காலங்களில் அப்பாதுகாப்பற்ற தற்காலிக வளைவு பாலத்திற்கு மேலாக 10' (பத்துஅடி) இற்கு மேலாக மழைநீர் பாய்கின்றது.

இப்பகுதியில் வாழ்கின்ற அனைவரும் விவசாயத் தையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண் டுள்ளனர். இதனால், தமது விளை பொருள்களை மழை நேரங்களில் சந்தைப்படுத்த முடியாதுள்ளனர்.

**காண்டீபன்**

அக்கிராமப்பகுதிகளிலிருந்து ஜி.சீ.ஈ.சாதாரண, உயர்தரத்தில் தமது கல்வியைத் தொடர்வதற்கு கனகராயன் குளம் மகாவித்தியாலயத்திற்குச் செல் கின்ற மாணவர் கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

பொதுப் பரீட்சைகள் நடைபெறுகின்ற காலங் களில் மாணவர்கள் பலர் தமது பரீட்சைகளை எழுத முடியாது பல இன்னல்களையும் சந்தித்து வருகின்றனர்.

கரப்புக் குத்தியிலிருந்து கனகராயன் குளம் பாட சாலைக்கு வருவதற்கு 4 கிலோ மீற்றர் தூரம் வர வேண்டும். ஆனால், பாலத்தினூடாக போக்கு வரத்து தடைப்படுகின்ற வேளைகளில் நயினா மடு புளியங்குளம் ஊடாக சுமார் 40 கிலோமீற்றர் தூரம் சென்று வருகின் றனர்.

அப்பகுதி மக்களது இன்னல்களைக் கவ னத்தில் கொண்டு நெடுங்கேணி அபிவிருத்தி நிறுவனத்தினர் 2004 ஆம் ஆண்டு அப்பாலத் தைப் பாதுகாப்பாக புனரமைக்க54 லட்சம் ரூபாவை பிற நிதி மூலங்களிலிருந்து ஒதுக்கியிருந்தனர்.

இப் பாலத்தைப் புனரமைப்பதற்கான திட் டத்தை அப்போதைய வவுனியா வடக்கு பிர தேச செலய கத்திடம் சமர்ப்பித்து அனுமதி கோரியிருந்தனர்.

ஆனால், பிரதேச செயலகத்தினர் தமது அரசு சார்பு நிதி மூலங்களிலிருந்து புனரமைப் புப் பணிகளை மேற்கொள்வதாகக் கூறி அத் திட் டத்திற்கு அனுமதியை மறுத் திருந்தனர். பின் னர் இதுவரை அப்பாலம் புனரமைக்கப்பட வில்லை. அப்பிரதேச செயலரும் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ தன்னார்வு தொண்டர் நிறுவனங்களோ அப்பகுதியில் வாழ்ந்துவருகின்ற மக்களது நீண்டகாலப் பிரச்சி னைகளைக் கருத்திற்கொண்டு அப் பாலத் தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர் கள் என எதிர்பார்த்து அப்பகுதி மக்கள் காத்தி ருக்கின்றனர். ✱


## கண்ணீர்க் காணிக்கை

அமரர்
**மாட்டின் கிட்லர்**
(ஜோசேப் மாமா)



மலர்வு 30-03-1950
உதிர்வு 03-02-2006

உங்களைப் போலவே உங்கள் மறைவும்
மௌனமாகவே நடந்தது எனினும்
எல்லோரையும் மௌனிக்க வைத்து விட்டீர்கள்
உங்கள் இளகிய இதயத்தால்!
எல்லோர் இதயங்களிலும் அன்பனாய் நண்பனாய்
அனைவருக்கும் உதவும் அயலவனாய்
குடியிருந்த உங்களை
உங்கள் இதயமே ஒரு கணம் நின்று
எம்மை விட்டுப் பிரிந்ததுவோ...

*உங்கள் ஆத்மா இறைவனில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.*
இவரின் பிரிவால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-47707)
(17-11-18)

- குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
17 - 03 - 1940

ஆண்டவன் அரவணைப்பில்
07 - 01 - 2006

**அமரர் நாகலிங்கம் தம்பிராசா**
*திதி:05.02.2006*

*07.01.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் தம்பிராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு அரசடி, கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி யளவில் நடைபெறும். அத்தருணம். இடம்பெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*மேலும் அன்னாரின் திடீர்மறைவினையிட்டு நாம் துயரத்தில் இருந்தபோது எம்முடன் இருந்து ஆறு தல் தெரிவித்தவர்களுக்கும் அவரின் இறுதியாத் திரையின் போதுகலந்துகொண்டவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் தமது அனுதாபத்தினை தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உதவிகள் புரிந் தவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

அரசடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(46400)(18.11.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டெழுத்தாளர் தேவை

பால்:- ஆண் அல்லது பெண்.
வயது:- 18 வயதிற்கு மேல் அல்லது ஓய்வு பெற்ற வயதினரயினும்.
தட்டச்சு:- தமிழ் அல்லது தமிழும் ஆங்கிலமும் தட்டச்சுச் செய்யத்தக்கவராகவும், அல்லது கொம்பியூற்ரரிலுள்ள பாமினி (Bamini) என்ற தமிழ் எழுத்தில் பரீட்சையமுள்ளவரும் விரும்பத்தக்கவராவார்.

பிரத்தியேக எம் உதவி:- வறுமைக் கோட்டிலுள்ளோர், தாரமிழந்தோர, பிறரின் உதவி அற்றோருக்கும் உதவி நிமிரத் தம் முதலிடம் கொடுக்கப்படும்.
விண்ணப்பதாரி:- பிரத்தியேக (கணக்கு-வழக்குப் போன்ற) உதவித் திறன் இருப்பின் அது அல்லது அவை அவரின் தகைமையைக் கூட்டும்.
மேலதிக விபரங்கள்:- நேரில். (கல்வித் தகமை, நற்சாட்சிப் பத்திரம் போன்றனவற்றைத் தவிர, எவரது அறிமுகமும் தேவையில்லை.)
வதிவிடம்:- கொற்றாவத்தை என்ற கிராமத்திற்கு அண்மித்திருத்தல் அவரின் பயணத்திற்கு நன்று.

**தொடர்புக்கு:-**
**பிருந்தாவனம், கொற்றாவத்தை,**
**வல்வெட்டித்துறை. தொ.பே.021 226 3657**
**ஈமெயில்:- gnanam_12@hotmail.com**



யாழ் மண்ணில்
"மிகப்பெரிய" புரட்சி

டிஜிட்டல் பெயர்ப்பலகைகள்
டிஜிட்டல் பனர்கள்
டிஜிட்டல் பிறின்ரிங்
அடையாள அட்டைகள்

☆☆☆ தரமே எமது தாரகமந்திரம்

மிராக்கில் மீடியாவேர்க்ஸ் (பிறைவேற்) லிமிற்டட்
768,பருத்தித்துறை வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2225640,0773126471
MMW



## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்
பணியாளர் திரு.க.சிசுபாலன் அவர்களின் தாய்
**திருமதி பத்மாவதி கணேசு**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(46364)(26.11.19)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 09 07 1991
மறைவு 24 12 2005





### செல்வன் இந்திரசித்து ( பவுண் ) தசன்

கடந்த 24.12.2005 இல் அகால மரணமடைந்த அமரர் இந்திரசித்து (பவுண்) தசன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும், யாழ்.வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் வேறுபல வழிகளில் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (06.02.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலியிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சாந்தை, பண்டத்தரிப்பு. - குடும்பத்தினர்.



இலங்கை தேசிய மொழிக்கொள்கை பிரகடனம்
இருமொழி புலமையினருக்கு கொடுப்பனவுகள்
- செய்தி 03.02.2006 புதினம்.COM

**இலவச சிங்கள வகுப்பும்**
**பயிற்சி நெறியும் சான்றிதழும்**
காலம் : 11.02.2006 சனிக்கிழமை
**விவரம் : புதன்கிழமை உதயனில்**



**தேவை**
கல்வியங்காடு, திருநெல்வேலியை அண்மித்த பகுதியில் 1½ - 2 பரப்பு வீட்டுடன் கூடிய காணி தேவை.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொ.பே.0776622121
(46351) (பிற்பகல் 4.30இற்குப் பின்னர்)



**VNC**
தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1அடி நீளம் 4" அகலக் கல்லின் விலை 26/= மட்டும். நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுச் செல்லவும்.
**VNC**
கும்பழாவளை பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(46180) (21.11.19)



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**1. ஆங்கிலம்** : பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. **காலம் : 3 மாதங்கள்**
**2. சிங்களம்** அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. **காலம் : 2 மாதங்கள்**
**கட்டணம் ரூபா 3000/-**

**சிறப்புச்சலுகை நீடிப்பு**
இன்றும் நாளையும் பதிவோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள், CD இலவசம்

**SAAMSTECH**
**233/4, Kasthuriar Road, Jaffna**


## புங்குடுதீவு கணேசாவுக்கு மின் பிறப்பாக்கி அன்பளிப்பு

புங்குடுதீவு,பெப்.5

சிறுவர் பாதுகாப்பு நிதியம் புங்குடுதீவு கணேசா மகாவித்தியாலயத்திற்கு மின் பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியப் பணிப்பாளர் அ.பேரின்பநாதன் இந்த மின்பிறப்பாக்கியை பாடசாலை அதிபர் எஸ். கே.சண்முகலிங்கத்திடம் அண்மையில் கையளித்தார்.

மின்பிறப்பாக்கி இன்மையால் பாடசாலையில் இருந்த கணனிகளைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டதாகவும்- மின் பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றதை அடுத்து அவற்றைப் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

(எ-188)

## உணவகங்களில் திடீர் பரிசோதனை

சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள உணவகங்களிலும், தேநீர் கடைகளிலும் சுகாதார பரிசோதகர்களினால் கடந்த வியாழக்கிழமை திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இப் பரிசோதனையின் போது சண்டிலிப்பாய் சீரணி சந்திக்கு அண்மையிலுள்ள உணவகம் ஒன்றில் பழுதடைந்த நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த "ரோல்"கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் நடத்திய இப்பரிசோதனையின் போது ஆனைக்கோட்டைச் சந்தியிலுள்ள உணவகம் ஒன்றிலும் சுகாதாரச் சீர்கேடுகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக் குறைபாடுகளை சீர்செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

(எ-135)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

வலி.தென் மேற்கு பிரதேச செயலகத்தினால் கடந்தவாரம் 500 தென்னம் கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

தென்னை அபிவிருத்திச் சபையினால் மேற்படி பிரதேச செயலகத்திற்கு விநியோகிக்கப்பட்ட இந்தத் தென்னம் கன்றுகள் கிராம அலுவலர்கள் ஊடாக மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-135)


## லங்கா பெல்லுக்கு நீங்கள் தேவை...

இலங்கையில் CDMA தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் லங்கா பெல் நிறுவனம் திறமையாளர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது. திருகோணமலை, வவுனியா, அம்பாறை, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள உங்களால் தற்போது லங்கா பெல்லுக்கு பலம்சேர்க்க முடியும். கீழுள்ள வெற்றிடங்களுக்கு தேவையான தகைமைகளை நீங்கள் கொண்டிருப்பின் லங்கா பெல் எதிர்பார்ப்பது உங்களையாகும்.

### விற்பனை பிரதிநிதிகள்

உங்களின் பொறுப்புக்கள்
- நிறுவனத்தின் விற்பனை இலக்கை பூர்த்தி செய்தல்
- CDMA தொலைபேசி இணைப்புகளுக்கு ஊக்கமளித்தல் • வாடிக்கையாளர் உறுதியுடன் கையாளும் ஆற்றல் • வாடிக்கையாளர் முகாமைத்துவப்படுத்தல்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த தொடர்ப்பாடல் திறமை
- சிறந்த நற்புறவு இணைப்புகளை ஏற்படுத்தும் திறமை
- சிறந்த அறிமுகப்படுத்தல் ஆற்றல்
- தொழில்முறையாக, பிரதிநிதியாகவும் பயனளிக்கும் பேச்சாற்றல்
- உருவாக்கல் திறமை
- பிரிதொரு நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக சேவை புரிந்த அனுபவம்
- அறிமுக ஆற்றலுள்ள பாடசாலையைவிட்டு விலகியவர்களும் விண்ணப்பிக்களாம்
- க.பொ.த. ச/த கணிதம் மற்றும் சிங்கள/தமிழ் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
- ஏனைய உயர் கல்வி தகமைகள் அனுகூலமாக அமையும்.

### வாடிக்கையாளர் சேவை பிரதிநிதி

உங்களின் பொறுப்புக்கள்
- உட்புற மற்றும் வெளிப்புற வாடிக்கையாளர் சேவை நடவடிக்கைகள்
- பணம் மற்றும் வங்கி நடவடிக்கைகள் • அமைப்புக்குள்ளான தேவைகளை நிறைவேற்றல்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- நல்ல தோற்றமுள்ளவராக இருத்தல் வேண்டும்
- கணனி அறிவு, ஆங்கிலம் மற்றும் தமிழில் சிறந்த தொடர்பாடல் திறமை
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஆகக்குறைந்த 6 மாத கால அனுபவம்
- கா.பொ.த. ச/த பரீட்சையில் கணிதத்தில் சித்தியும் ஆங்கிலத்தில் திறமை சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் உ/த பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும்

### காசாளர்கள்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- உயர்தரத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும், தமிழிலும், ஆங்கிலத்தில் சிறந்த பேச்சுத்திறமையை கொண்டிருக்க வேண்டும்
- பாதுகாப்பு வைப்பாக 100,000/- இனை செலுத்த வேண்டும்
- நீண்ட நேரம் தொழில் செய்ய கூடியவராகவும், சனிக்கிழமை வேலை செய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும்

### தொழில்நுட்ப அலுவலகர்கள்

உங்களின் பொறுப்புக்கள்
- வலைப்பின்னல் சம்பந்தப்பட்ட சிக்கல்களை திருத்தல் வேண்டும்
- தொழில்நுட்ப சிக்கல்களை திருத்தல் வேண்டும்

நீங்கள் குழுவாக இயங்கக்கூடியவராகவும் பின்வரும் தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும்
- 28 வயதுற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
- தேசிய டிப்ளோமா தொழில்நுட்ப சான்றிதழை (NDT) அல்லது அதற்கு சமமான தகுதியினை கொண்டிருத்தல் வேண்டும்
- எந்த நேரத்திலும் சேவையாற்றும் தன்மையை கொண்டிருக்க வேண்டும்
- Microwave & Data transmission உபகரணங்கள் பற்றிய அறிவினை கொண்டிருத்தல் வேண்டும்

மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் உள்ள விண்ணப்ப தாரர்களிடம் இருந்து மட்டுமே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்விளம்பரம் பிரசுரமாகி 10 தினங்களினுள் உறவினர்கள் அல்லாத நடுவர்கள் இருவரின் தொடர்பு இலக்கங்களுடன் உங்கள் விண்ணப்பங்களை கீழ்காணும் விலாசத்துற்கு அனுப்பி வையுங்கள்.

பொது முகாமையாளர்,
மனிதவள வசதி மற்றும் நிர்வாகம்,
லங்கா பெல் (தனியார்) நிறுவனம்,
தொ.பே.1719
கொழும்பு.
இணையத் தளம் : careers@mail.lankabell.com

லங்கா பெல் CDMA
Sarva Incognito


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-19.11)


## ஒத்துமாறல்

வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் எத்திணைக்களத்திலும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு:
077 3151600,
077 6510413. (46370)(32-16)

## உடன் தேவை

ஒய்வுபெற்ற ஆங்கில மருந்தாளர் (Pharmacist) உடன் தேவை.

தொடர்பு: தொ.பேசி.இல.077-3288795
(46341)(32-16)







(21) ஆவது அகவையில் கால் பதிக்கும்......

## கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

**மகளிருக்கான துரித ஒரு மாத/3 மாதப் பயிற்சிகள்**

- கேக் ஐஸிங் (24 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐஸிங் முறைகள்)
- உணவு தயாரித்தல் (மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள்)
- கூந்தல் அலங்காரம் (20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் போடுதல்)
- அடிப்படை Facial கலையும் மணப்பெண் அலங்காரமும்
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறி பிளவ்ஸ் Saree - Blouse வெட்டித்தைக்கும் முறை
- 3 மாத Fabric Painting பூவேலை, கைவேலைப் பயிற்சிகள்
- 6 மாத உடை தயாரித்தல் (தையற்கலை) பயிற்சிகள்
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.

கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம் : 10.02.2006
சனி - ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம் : 11.02.2006

மேலும் விவரங்களுக்கு காலை 9 மணிமுதல் பி.ப. 2.30 மணி வரை நேரில் வரவும்.

(சி/47676) (33-34-49) இயக்குநர்.


## பெரியவிளானில் அபிவிருத்தி நிலையம்

வலி.தென்மேற்கு,பெப்.5

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவுக்கான சமூக அபிவிருத்தி நிலையம் பெரியவிளான் கிராமத்தில் நிறுவப்படவுள்ளது.

இந்த நிலையக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபை பெரியவிளானிலுள்ள சபைக்குச் சொந்தமான காணி ஒன்றை வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கி உதவியுள்ளதாக பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

'யுனிசெப்' என்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்படி நிலையம் விரைவில் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## மரண அறிவித்தல்

### அருளம்பலவனார் தியாகராஜநாதன்
(சொக்கு)



காரைநகர், சம்பந்தர்கண்டியைப் பிறப்பிடமாகவும், U.K.-New Malden வசிப்பிடமாகவும் கொண்ட அ.தியாகராஜநாதன் அவர்கள் 30.01.2006 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதமணி அருளம்பலவனார்- விஜய சவுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும் வைத்திய கலாநிதி தேவகுஞ்சரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான காரைநகர், பத்தர் கேணியடியைச் சேர்ந்த M.A. கந்தையா - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் லக்ஷ்மி, கிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரநாதன், மகேஸ்வரிதேவி, சிவானந்தநாதன், கலாதேவி, சிவயோகநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-02-2006 ஞாயிற்றுக் கிழமை லண்டன் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1, ALDRIDGE RISE,
NEW MALDEN,
SURREY,
KT 35 Rj,
U.K.
T.P.: 0044 208 949 5826

தகவல்:
தேவகுஞ்சரி (மனைவி),
பிள்ளைகள்.

(சி/47687)(32-16)

## 12 ஆவது சிராத்த தினம்



தோற்றம் 12 - 07 - 1918

மறைவு 19 - 01 - 1994

அமரர் **வைரமுத்து கந்தப்பிள்ளை**
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்)
திதி : தை பூர்வபக்க அட்டமி

கோப்பாய்,
இருபாலை. (46315)(32-16) -குடும்பத்தினர்.

## வீடமைப்புக்கு விவரம் சேகரிப்பு

வலி.மேற்கு,பெப்.5

யாழ்.மாவட்டத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பணிப்பிற்கிணங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் வீடு மற்றும் அதனோடிணைந்த தரவுகள் கிராம அலுவலர்கள் மூலம் திரட்டப்படுகின்றன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குடும்பம் சம்பந்தமான விவரங்கள், வீடு சம்பந்தமான விவரங்கள், வீடற்ற குடும்பங்களின் விவரம், காணி சம்பந்தமான விவரங்கள், நிர்மாணத்துறையில் பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் பற்றிய விவரம், நிர்மாணத்துறை உற்பத்தியாளர் சம்பந்தமான விவரம்ஆகியவையே திரட்டப்படுகின்றன. (ஒ-175)

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 13.02.2006ஆம் திகதி நண்பகல்12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். 13.02.2006 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவர். கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 13.02.2006ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (வற்15% உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | மீசாலை வயற்கரை வீதி திருத்தம் | M9 | 10,000.00 | 575.00 |

மேற்குறிப்பிடப்படும் கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 10.02.2006ஆம் திகதி பி.ப.2 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வேலை 10.03.2006ஆம் திகதிக்கு முன் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
03.02.2006.

திரு.கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

(சி/46530)(32-16)


## UNIT
## Ultimate Offer

Printer/Scanner/Table/USB Flash/
TV Tuner/Home Theater Woofer/UPS with Screen Filter,
Dust Cover, Mouse Pad & CD Cleaner
Are Totally Free

Offer Products

இன்னும் 2 தினங்களுக்கு மட்டுமே

IBM World Leading Branded Systems @ Offer Price

புதிய P4 கணனிகள் 3 வருட முழு உத்தரவாதத்துடன் கொழும்பை ஒத்த விலைக்கே



Attractive Woofers & Home Theatres 10% Discount

சகல கணனிசார் உதிரிகளும் சலுகை விலையில்

தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை

இது எங்கள் மொபைல் சர்வீஸ் நீமுடன் இணைக்கப்பட்டது.

An Indian Qualified Engineer's Workshop

**Possible which Impossible**

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134730


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரில்மூழ்கி போராளி சாவு!

வவுனியா,பெப்.5

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா சேம மடுப் பகுதியில் நீரில் மூழ்கி போராளி ஒருவர் சாவடைந்தார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை கார்மருதன் (இராசேந்திரம் ரஜீவன் - புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை) என்ற போராளியே சாவடைந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-13)

## வவுனியாவில் ஆணின் சடலம்

வவுனியா,பெப்.5

வவுனியா கூமாங்குளம் பகுதியில் இனந் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டனர்.

உயிரிழந்தவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு அவ்விடத்தில் போடப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ-164)

# நீதிச்சேவை ஆணைக்குழுவின் 2 உறுப்பினர்கள் ராஜினாமா!

கொழும்பு, பெப். 05

நீதிச்சேவை ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களில் இருவர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து விட்டனர்.

தமது பதவிவிலகல் கடிதங்களை கடந்த வியாழனன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா ஆவார். ஏனைய இரு உறுப்பினர்களாக உயர் நீதிமன்ற நீதியரசர்களான கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, ரி.பி. வீரசூரிய ஆகியோரே தற்போது பதவி விலகியிருக்கின்றனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் தமது கடமைகளை மனச்சாட்சிக்கு ஏற்ப ஆற்ற முடியாதிருப்பதாகத் தாங்கள் கருதுவதனாலேயே தாங்கள் தங்களது உறுப்பினர் பதவிகளை விட்டு விலகுகின்றார்கள் என அவர்கள் தங்களது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிய வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான சில வழக்குகளை விசாரிப்பதினின்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சிலர் தாமாகவே விலகிக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## வெலிகந்தவில் கஞ்சாவுடன் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு,பெப்.5

கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகந்த பொலீஸ் நிலைய சோதனைச் சாவடியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸில் இந்தக் கஞ்சா கடத்திச்செல்ல முயற்சிக்கப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிளிடம் 18 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-13)

## மானிப்பாய் இந்துவில் நூல் வெளியீடு

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'பௌர்ணமி நிலா' என்ற தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியின் வாகீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி இ.இராஜேந்திரப் பிரசாத் தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரைகளை மருதடி விநாயர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக் கள், வணபிதா சாம்இராஜ சூரியர் ஆகியோரும் -

நூலின் ஆய்வுரையினை மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் செ.கேசவராஜனும் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட வர்த்தக விரிவுரையாளர் கே. சிவராசா நிகழ்த்துவார். (ஐ-13-185)




G.C.E. O/L G.C.E. A/L படித்த மாணவர்களுக்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

3C, 3S or 3B, 3C தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி.

UK, USA, Canada, Singapore, Cyprus, Malasia, Australia, New Zealand, Rusia போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு University, College அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருகிறது.

அனுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

மலேசியாவின் Tafe College மிகப்பெரிய Technical கல்லூரி ஆகும். Automotive Enginerring, Multimedia Computing, Computer & Network Technology, Software Engineering Technology, Business Accounting, Finance, Business Management போன்ற பெரிய அளவிலான படிப்பை குறைந்த செலவில் படிப்பதற்கு சலுகைகளைப் பெற்றுத்தருகிறது.

Courses Available
- Computing
- Business Management
- Engineering & Mathematical Sciences
- Art
- Business Studies
- Law
- Urban Planning
- Social Sciences
- Architecture & Construction
- Education & Training
- Humanities
- Sciences
- Commercial Management
- Tourism Management
- Research Degree MA/MPHIL/PHD
- MBA
- MSC & MA
- Bachelor of Business Administration
- BSc. (Hons.)
- BA
- E-Business
- Biotechnology
- Microbiology
- Software Engineering
- Information Technology
- Computer Administration
- Medichine
- Economics
- Hotel Management
- Accounting
- Marketing Management
- Travel & Tourism

2006 February, April ற்கான பதிவுகள் நடைபெறுகின்றன

SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSLTANTS
No. 7-1/2, W.A.Silva Mawatha, Wellawatte, Sri Lanka. Tel: 0773 175767
E-mail: Mohamedhaniffa_riyas@yahoo.co.uk


## வீதியைப் புனரமைக்க கோரிக்கை

மாகியபிட்டி கிராம அபிவிருத்தி சங்கம் மாகியப்பிட்டி நொங்குத்துறை வீதியைப் புனரமைபுச் செய்து தருமாறு வலி.தென் மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். (எ-135)


**ST. PATRICKS COLLEGE JAFFNA**

**REV. FR. S.N.ARULNESAN, OMI**

*(Former Rector 1954 - 1959)*

had passed away on 03.02.2006, in Colombo

A Requiem Mass will be offered for the repose of his soul on Monday, 6th February 2006, at 10.15 a.m. at St. Mary's Cathedral, Jaffna.

All Patricians are kindly requested to attend this memorial service.

(46454)
(54-15-45)

**- Rector.**



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 21 . 02 . 1939



உதிர்வு 06 . 01 . 2006

**அமரர் வல்லிபுரம் இராசா**

*06.01.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.02.2006) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(46451)
(25-54-15-45)

குடும்பத்தினர்.



**பிரத்தியேக வகுப்பு**

ஆண்டு 9,10,11 ஆகிய வகுப்புகளுக்கு கணிதம் அடிப்படையில் இருந்து முழுமையாக வீட்டில் வந்து தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சொல்லிக் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 077 6511686
(3 நாள்களுக்குள் தொடர்பு கொள்க)



**REFRESH SYSTEM**

* Computer Service/Sales * Video Convertions
* Visiting Cards Making
At your Place
Conduct: Suthumalai South, Manipay.
T.P.: 077 3253104, 077 6279671. (46452)



**மனோகரா யாழ்ப்பாணம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
(Dts நவீன ஒலிஅமைப்புடன்)
**ஆதி**
தினசரி பு.நே.
10.30, 1.30, 4.30, 7.30



**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**

அல்டிமேட் அஜீத், லைலா மற்றும் பலர் நடித்த
**பரமசிவன்**
காட்சி நேரம்:
10.30, 2.30





**ராஜா யாழ்ப்பாணம்**



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்



**நாகம்ஸ் சுன்னாகம்**



சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி:
... 3.00


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் கற்பகநாதன்

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கற்பகநாதன் அவர்கள் 03.02.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கற்பகநாதனின் அன்பு மனைவி யும் திருமதி சரஸ்வதி கதிரவேலு, திருமதி இராஜலட்சுமி ஆனந்த வடிவேலு, திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிரவேலு, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, திருமதி தவமணி (பத்தமேனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வசந்தராசா, திலகவதி, கோபாலகிருஷ்ணன், புவிநாதன், சிறீதரன், யோகநாதன், இம்முருகன், வசந்தாதில்லை நாதன், கீர்த்தன், சசிகலா, ரஜி, விஜி, கண்ணன், மதி, பதுமகாந்தன் பத்மகாந்தன், யாழினி ஆகியோரின் ஆசையம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2006) ஞாயிற்றுக் கிழமை அல்வாயில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நவஜீபவன்'
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி-47715)
(54-15-45)

தகவல்:
க.இராசரத்தினம்
(சகோதரன்).

### சின்னையா இராசநாயகம்

**(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், முன்னாள் ஆவரங்கால் சிவன் தேவஸ்தான பற்றுச் சீட்டு விற்பனை முகாமையாளர்)**

ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்தவருமாகிய சின்னையா இராசநாயகம் அவர்கள் நேற்று (04.02.2006) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவபூசணியின் (உமா) அன்புத் தந்தையும் சச்சிதானந்த குமாரனின் அன்பு மாமனாரும் சுகப்பிரியா, செந்தூரன், ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.02.2006) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(46457)
(54-15-45)

தகவல்:
வே.கனகரத்தினம்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

கடந்த 29.12.2005 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்னை
திருமதி
**வள்ளியம்மை முத்துக்குமாரு**

அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி, பருத்தி கலட்டி, சுன்னாகத்தில் அமைந்துள்ள Dr. சிவபாலன் வீட்டில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*முகவரி:*
*நாகேஸ்வரி வித்தியாசாலை,*
*பருத்திகலட்டி, சுன்னாகம்.*

(46455)
(54-15-45)

தகவல்:
சி.சுபேந்திராதேவி
(மகள்).

## நீங்கா நினைவலைகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி சிதம்பரம் வள்ளிப்பிள்ளை (பூரணம்)

கடந்த 06.01.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி சிதம்பரம் வள்ளிப்பிள்ளை அவர்களின் சபிண்டீகரணப் பிரார்த்தனை இன்று (05.02.2006) ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நண்பகல் மதியபோசனமும் நடைபெறும். இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*அம்பொால்லை,*
*புலோலி மத்தி,*
*பருத்தித்துறை.*

(சி-47717)
(54-15-45)

தகவல்:
மகன்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தலின் உள்நோக்கம் குறித்து சர்வதேசத்துக்கு எடுத்துரைப்போம்!

### கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா



கிளிநொச்சி,பெப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் ஆயுத முனையில் கடத்தப்பட்ட சம்பவத்தைக் கட்டுக்கதை என்று கூறி திரிபுபடுத்த அரசு முயற்சிக்கின்றது. இதற்கான பதிலை நாங்கள் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறோம். இந்தக் கடத்தலின் உள்நோக்கம் குறித்தும், நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் இதனால் ஏற்படப் போகும் பாதிப்புகள் குறித்தும் உள்நாட்டிலும் வெளி உலகிலும் எடுத்துரைக்கவுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நடத்திய சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்புக் குறித்து அவர் கூறியதாவது:-

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகவும் கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களினை விடுவிப்பது பற்றியும் பேசினோம்.

சிறிலங்கா அரசு நடத்தவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளரைக் கேட்டிருக்கிறோம்.

உள்ளூராட்சித் தேர்தல் நடந்தால் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் செல்லாமல் தடுப்பதற்காக எமது தேசத்தின் விடுதலையின் மீது பற்றுக் கொண்டவர்களை அந்தத் தேர்தலில் பங்குபற்றச் செய்வதற்கான சாத்தியங்களையும்இன்றைய சந்திப்பில் ஆராய்ந்தோம்.

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது பற்றி விவாதித்தோம்.

வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் போன்றவர்கள் இதனை கட்டுக்கதை என்று கூறுவதற்கு சரியான பதிலை நாடாளுமன்றில் கூறியிருக்கிறோம். ஆவணபூர்வமாகவும் ஆதாரபூர்வமாகவும் பத்திரிகைகளுக்கும் சர்வதேசத்துக்கும் இதனை எடுத்துரைக்கும் நடவடிக்கையினை செய்யவுள்ளோம்.

ஜெனீவா பேச்சுவார்த்தையானது யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகவே நடைபெறவுள்ளது. குறிப்பாக துணை இராணுவக் குழுக்களைக் கலைத்தல், தமிழ் மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவித்தல் என்பன நடந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுக்களில் கலந்துகொள்ள சாத்தியம் இருப்பதாகக் கருதுகின்றோம்.

விடுதலைப் புலிகள் பேசுவதற்கு மாறானவர்கள் அல்லர். அரசு தனது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் - என்று தெரிவித்தார். (ஐ)

## கடத்தப்பட்ட அதிபர் வீடு திரும்பினார்

மட்டக்களப்பு,பெப்.5

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்பட்ட வாழைச்சேனை இந் துக் கல்லூரி அதிபர்எம்.தவராசா நேற்று வீடுதிரும்பியுள்ளார்.

வழமைபோல் பாடசாலையில் கடமையில் இருந்தபோது இனந்தெரியாதவர்கள், இவரைக் கடத்திச் சென்றனர் என்று வாழைச்சேனை பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நேற்றுக் காலை வீடு திரும்பியுள்ள அதிபர் தம்மை எவரும் கடத்திச் செல்லவில்லை என்று தெரிவித்துள்ளார். (ஐ-13)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
A/L 2008 புதிய பிரிவு
Che-அன்பழகன் Bio-அல்போன்ஸ்
Phy-ஜெயசீலன் Maths-கோணேஸ்
- பிரபா
- விமல்ராஜ்
* இரசாயனவியல் கருத்தரங்கு 7,9ஆம் திகதிகளில் நடைபெறும். (46343) (25-15-45)

வெற்றிவழி A\L தமிழ் செயற்றிட்டம்
வாராந்தப் பரீட்சை - புதன் 7-8/8-9
தொடர் கருத்தரங்கு - செவ். 2.15 - 4.00
நாக.தமிழிந்திரன் (இ.அ.மு.ஆ) (46294) (25-15-45)
Note: முற்பதிவு அவசியம்
இயக்குநர்:
BEACON யாழ்ப்பாணம்.

## தேசியப் பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியப் பட்டியல் எம்.பி. பதவி வெற்றிடத்துக்கு ஜோசப் பரராஜசிங்கத்தின் துணைவியார் மற்றும் திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் உட்பட பலரது பெயர்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டன எனத் தெரிகிறது. எனி னும் அம்பாறை பிரதேசத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் ஒருவரை அப்பதவிக்கு நியமிப்பதற்கு முன்னுரிமை அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது. (ஐ-3-13-190)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை இரவு கடையொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக அப்பிரதேசவாசிகளின் தகவல்களின் படி இக்கடையில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகவும்.

இஸ்லாமிய சமூக சீர்திருத்தவாதிகளினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் கடை உரிமையாளரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னரும் ஒரு தடவை இவ்வியாபார நிலையம் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தாக்குதலை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே நடத்தியுள்ளனர்.(ஐ)

கும்பலில் கோவிந்தாவிற்கு இது இடமல்ல
20 ஆம் பக்கம் பார்க்க

# ஐ. தே. கட்சி, ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் பௌத்த பிக்குகளும் வைபவத்தைப் புறக்கணிப்பு

கொழும்பு,பெப்.5

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று அரசு பிரமாண்டமான முறையில் நடத்திய சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் எவரும் கலந்துகொள்ளவில்லை. இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு எதிர்க் கட்டத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்ருந்த போதும் அவர் வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை.

அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பிரமுகர்கள் எவருமே விழாவில் காணப்படவில்லை. ஹெல உறுமய கட்சியினரும் சுதந்திரதின வைபவத்தைப் புறக்கணித்துவிட்டனர்.

முக்கியமான பௌத்த துறவிகளும் அரசின் சுதந்திரதின வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை என்று செய்திகள் தெரிவித்தன.

அனுரா பண்டாரநாயக்க வெளிநாடு சென்றிருந்தார். இதனால் அவரும் விழாவில் கலந்து கொள்ளவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் அவரும் விழாவுக்கு வருகை தரவில்லை.

தமிழ்க் கட்சிகள் தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே சுதந்திரதின விழாவில் காணப்பட்டார். (ஐ)

# ரி.ஆர்.ஓ. பணியாளர்களை விடுவிக்குக! காங்கிரஸ் பிரதிநிதிகள் வலியுறுத்து

நியூயோர்க்,பெப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவம் சமாதான நடவடிக்கைகளுக்கு பெரும் அச்சுறுத்தலானது என்று தெரிவித்திருக்கும் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள், கடத்தப்பட்டவர்களை விடுவிக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கக் காங்கிரஸின் பிரதிநிதிகளான ஷெரோட் பிறவுண், பற்றிக் கிபேறி ஆகிய இருவரும் இது தொடர்பாக தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி ராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா அம்மையாருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். (ஐ)

## இராமகிருஷ்ண மிஷனின் மட்டு. மாவட்ட தலைவர் காலமானார்

மட்டக்களப்பு,பெப்.5

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் சுவாமி ஜீவானந்த ஜீ மகராஜ் (வயது 79) நேற்றிரவு காலமானார்.

கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் நேற்றிரவு 7.30 மணியளவில் உயிர் நீத்தார்.

1927 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மலையிறவில் பிறந்த ஜீவானந்த ஜீ மகராஜ் கடந்த பல ஆண்டுகளாக இராமகிருஷ்ண மிஷனின் தலைவராகப் பணிபுரிந்து வந்தார்.

சுவாமியின் உடல் மட்டக்களப்பு விபுலானந்த மணி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிபிர், ஹெலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவீச்சு விமானங்களையும் அணி வகுப்பில் இணைத்துக் கொண்டன. காலிமுக கடற்பரப்பில் கடற்படையின் 'டோறா' படகுகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

இவற்றைவிட இராணுவ டாங்கிகள், கவச வாகனங்கள் என்பனவும் அதிக எண்ணிக்கையில் அணி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன.

மொத்தத்தில் இராணுவத்தின் கடும் திறனை (Fire Power) வெளிப்படுத்துவதாக கண்காட்சி அமைந்தது என்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

அணி வகுப்பில் இடம்பெற்ற இராணுவ சாதனங்கள், சுடுகலன்கள் காலிமுகத் திடல் பகுதியில் கடந்த புதன்கிழமை முதல் தரிக்க விடப்பட்டிருந்ததால் அப்பிரதேசத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முப்படைகளினதும் வலுவை வெளிப்படுத்திய அணி வகுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார். முன்னதாக அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. (ஐ)

தமிழ்
திரு.குழந்தை
A/L 2008 ஆரம்பம்
6.2.2006 திங்கள்
5 p.m. (N.T)
A/L 2007
திங்., புத.,
வெள்ளி. 4 p.m.
புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
புதிய
யூனிவேசல் அக்கடமி
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)
A/L 2007
பொருளியல்
ஆரம்பம்: 6.2.2006 5 p.m.
(46334) (25-15-45)

கற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்
14ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்க முடியும். அதன்படி தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டாலும் அதற்கு முன்பாக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும். தற்போதைய சூழ் நிலையில் தமிழர் தரப்பு இந்தத் தேர்தல் குறித்து அக்கறை கொள்ள முடியாது. எனினும் வேட்புமனுக்கள் விடயத்தில் புறம் தள்ளி இருந்துவிடமுடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தாலேயே வாக்களிப்பு நடத்தப்படும். அவ்வாறு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு வாக்களிப்பை குறிப்பிட்ட ஒரு காலப் பகுதிக்கு ஒத்திவைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கலாம். அந்த சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகள் உள்ளூராட்சி நிர்வாகங்களில் தெரிவாகும் நிலைமை உருவாகலாம். இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக தமிழ்த் தேசியத்தின் மீது விடுதலையின்மீது பற்றுக்கொண்டவர்களை உள்ளடக்கிய பட்டியல்களை தயார் நிலையில் வைத்திருப்பதுடன் 'டம்மி' வேட்பாளர்களைக் கொண்டு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துகொள்வதற்கான சாத்தியங்கள் குறித்து தமிழர் தரப்பில் ஆராயப்பட்டுள்ளது.

- இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான நேற்றைய சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களின் அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-13-190)

SKY COMPUTERS (Pvt) Ltd
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel No. 012 4590325
E-mail : skycom@wow.lk
On Line Courses
Affiliated with Irish International University (H.E)
MS OFFICE XP 2 MONTHS 2000/=
DESK TOP PUBLISHING
HARDWARE TECHNOLOGY
COMPUTERIZED ACCOUNTING (ACCPAC, MYOB, Quick books)
KID's PROGRAM
CERTIFICATE COURSES DURATION 1 MONTH
INTERNET & E-MAIL 2 WEEKS
MS-WORD
MS-EXCEL
MS-ACCESS
MS-POWER POINT
PHOTOSHOP 8.0
PAGEMAKER 7.0
CORELDRAW 12
(யாழ் கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies...
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: reservations@expoavi.com, jaffna@expoavi.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
05.02.2006

மன்னார் அடம்பன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் 15 போராளிகளும் கொல்லப்பட்டனர் என முதலில் அரச ஊடகங்கள் முண்டியடித்துச் செய்திகளை வெளியிட்டன. ஆனால், உண்மையில் அவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை என்பதைத் தற்போது அந்த ஊடகங்கள் உட்பட யாவரும் அறிவர். இதுகுறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. கபில புஞ்சிமான்னகே எழுதி 'இருதின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

# தனது ஊடகங்கள் மூலம் மக்களை முட்டாளாக்கும் அரசு

## தமிழ்ச்செல்வன் குறித்த செய்தியில் மூக்கு உடைபட்டு நிற்கிறது!

நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் அப்பகுதிகளில் பிரகடனப்படுத்தப்படாத யுத்தமொன்று இடம்பெற்றுவருவதான தோற்றத்தை கடந்த வாரம் வரை வெளிப்படுத்தின. கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலம் முதல் கடந்தவாரம் வரையான கால இடைவெளியில் நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பல தரப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கிளைமோர்க் குண்டுவெடிப்புகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், ஆள்கடத்தல்கள், ஆள்கள் காணாமற்போதல் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் என்பவற்றால் இப்பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியது.

பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள் என்பவற்றாலும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், கைதுகள் என்பவற்றாலும் அமைதியற்ற சூழ்நிலை நிலவிவந்தது. இச்சம்பவங்கள் காரணமாகப் பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள்ஆகிய இரு தரப்புகளிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்க நேர்ந்தது.

இத்தகைய பின்னணியில் கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதியன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பான பேச்சுகள் குறித்து சர்வகட்சி மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. தற்போதைய அரசியல்நிலை தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தென்பகுதி அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாடொன்றை எட்டமுயலும் நோக்கிலேயே இந்தச் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. இவற்றின் மத்தியில் நோர்வே விசேட பிரதிநிதி சொல்ஹெய்மும் அமெரிக்க அரசின் அரசியல் விவகாரங்கள் தொடர்பான ராஜாங்கச் செயலாளர் நிக்கலஸ் பேர்ண்ஸ்ஸும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

தென்பகுதி அரசியலரங்கில் இத்தகைய குழப்பமும் சிக்கலுமான நிலை உருவாகியிருந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி மன்னாரில் அரச படைகளால் விடுவிக்கப்படாத அடம்பன் பிரதேசத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றதாக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களால் செய்தி வெளியிடப்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட பகுதி அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என்பதால் சம்பவம் குறித்த உத்தியோகபூர்வ அறிக்கையெதுவும் அரசினால் வெளியிடப்படவில்லை. இதன் காரணமாக இச்சம்பவம் குறித்துத் தாம் நினைத்த விதத்தில் தென்பகுதி ஊடகங்கள் செய்தி வெளியிட முயன்றமையை கடந்தவாரப் பத்திரிகைச் செய்திகளை அவதானித்தபோது தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிந்தது.

ஒரு சனிக்கிழமையன்று இடம்பெற்றதாகக் கூறப்பட்ட இச்சம்பவம் குறித்து அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகமொன்று தான் விரும்பிய விதத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. ''மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பின் காரணமாக 15 பேர் உயிரிழப்பு; சம்பவத்தின் பின்னர் தமிழ்ச்செல்வன் தொடர்பான தகவலேதும் இல்லை''- என அச்செய்தியின் தலைப்புக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை உறுதிசெய்யும் விதத்தில் ஜனவரி 23 ஆம் திகதி திங்கட்கிழமை அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் பத்திரிகை ஊடகமும் இலத்திரனியல் ஊடகமும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தகவல் தொடர்புகள் செயலிழந்தன. தமிழ்ச்செல்வன் மற்றும் சூசை ஆகியோர் பற்றித் தகவலேதும் இல்லை என்ற வகையில் வெளிவந்த இந்தச் செய்தியுடன் மேலதிகமாக தமிழ்ச்செல்வனின் மரணத்தால் வெற்றிடமான அரசியல் துறைப் பொறுப்பாளர் பதவிக்கு பிரபாகரனுக்கு மிக நெருக்கமான பாலகுமார் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தகைய விதத்தில் அரச ஊடகங்கள் மூலம் தமிழ்ச்செல்வன் குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்துவிட்டார் எனச் செய்தி உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அரச கட்டுப்பாட்டில் இயங்கும் 'தினமின' பத்திரிகையின் முற்பக்கத்தில் அரசியல் தலைவரொருவரின் மரணத்துக்கு முக்கியத்துவம் வழங்கிச்செய்தி வெளியிடும் விதத்தில் தமிழ்ச்செல்வனின் அரசியல்.வாழ்க்கையில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களின் பட்டியல் அவைகுறித்த புகைப்படங்களுடன் பிரசுரமாகியிருந்தது. அது மட்டுமன்றி, தனியார் ஒலிபரப்புச் சேவைகளும் இச்செய்திக்கு முக்கியத்துவம் வழங்கி ஒலிபரப்பியிருந்தன.

அரச கட்டுப்பாட்டு ஊடகங்களும் ஒரு சில தனியார் செய்தி ஊடகங்களும் இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாகவும் அதில் சிக்கி தமிழ்ச்செல்வன் மரணமடைந்தார் எனச் செய்தி வெளியிட்டு அது பொதுமக்களைச் சென்றடையச் செய்யும் வகையில் செயற்பட்டிருந்தன.



ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மரணமடைந்துவிட்டதாகப் பரவிய - திட்டமிட்டு ஊடகங்கள் பரப்பிய செய்தியைப் பொய்ப்பிக்கும் வகையில் அரச ஊடகங்களால் இவ்விதம் கொலைசெய்யப்பட்ட தமிழ்ச்செல்வன் அடுத்தநாள் செவ்வாய்க்கிழ்மை மாலை தமிழ்நெற் இணையத்தள ஒளிபரப்பில் தோன்றினார். அது லண்டனிலிருந்து இலங்கை வந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கை அரசு ஒழுங்குசெய்த ஹெலிகொப்டரில் கொழும்பிலிருந்து கிளிநொச்சியில் சென்றிறங்கியபோது தமிழ்ச்செல்வன் அவரைக் கைலாகுகொடுத்து வரவேற்பதான காட்சியே.

இவ்விதம் தமிழ்நெற் இணையத்தளத்தில் வெளியானது. அதுமட்டுமன்றி, அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகை ஊடகங்களான 'சிலுமின' மற்றும் 'தினமின' என்பவற்றாலும் ஒருசில தனியார் தொலைக்காட்சிச் சேவைகளாலும் படுகொலை செய்யப்பட்டார்என விவரிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கடற்படைத்தளபதி சூசையும் அந்த வரவேற்பில் பங்குகொண்ட காட்சியையும் அந்தத் தமிழ்நெற் இணையத்தளத்தில் காணக்கூடியதாய் இருந்தது.

அதற்குப் பின்னரே தமிழ்ச்செல்வனுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என விடுதலைப் புலிகள் அமைப்புத் தெரிவிக்கிறது எனத் தமது பத்திரிகையின் முன் பக்கத்தில் சின்னஞ்சிறு செய்தியாகப் பிரசுரித்து தனது பொட்டுக்கேட்டை மழுப்பும் விதத்தில் அந்தப் பத்திரிகை நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால், தாம் வெளியிட்ட அந்தப் பச்சைப் பொய்யை மீண்டும் குழிதோண்டிப் புதைத்து சிரமமெனக் கருதினவோ என்னவோ அவ்விதம் பொய்யான தகவலை வெளியிட்ட இலத்திரனியல் ஊடகங்கள் தாம் ஆரம்பத்தில் வெளியிட்ட செய்தி பொய்யானதென்பதை வெளிப்படுத்த எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஊடகத் தர்மத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தமது தவறான செய்தி வெளியீட்டுக்காக மன்னிப்புக்கோரத்தானும் அவை முன்வரவில்லை.

இந்த நாட்டில் கிராமப்புறங்களில் வாழும் லட்சக்கணக்கான பொதுமக்களும், நகர்ப்புறங்களில் வாழும் கணிசமான தொகையினரான பொதுமக்களும் நாட்டின் அன்றாடச் சம்பவங்களை அறிந்துகொள் வதற்கு இத்தகைய செய்தி ஊடகங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அதிலும் குறிப்பாக அரச கட்டுப்பாட்டுச் செய்தி ஊடகங்கள் வெளியிடும் செய்திகளில் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படுவதாக அவர்கள் நம்புவது யதார்த்தமே. பொதுமக்களின் இந்த நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில் நியாயமற்ற, அநாகரிகமான விதத்தில் இத்தகைய பொய்யான செய்திகளை வெளியிடுவதன் மூலம் இத்தகை ய ஊடகங்கள் பொதுமக்களை முழுமுட்டாள்களாக ஆக்குவதற்கு முயல்கின்றன. ஊடகத் தர்மத்தைக் கடைப்பிடிக்கத் தவறும்-முண்டியடித்துக் கொண்டு உறுதிப்படுத்தப்படாத செய்தியை வெளியிடுவதன் மூலம் - வேண்டுமென்றே செய்திகளைத் திரிவுபடுத்தி வெளியிடுவதன் மூலம் - பொதுமக்களின் உணர்வுகளைத் திசை திருப்ப - பொதுமக்களை முட்டாள்களாக எண்ணிச் செயற்பட விழையும் இத்தகைய ஊடகங்கள் இயங்குவதற்கான அனுமதியை வழங்கும் பொறுப்பான அதிகாரி குறித்து நாட்டுமக்கள் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமானதொன்றாகும்.

யுத்தமுனைப்புடன் மன்னார், அடம்பன் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றதென்னவோ உண்மைதான். இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால், அரச ஊடகங்கள் தத்தமது விற்பனைக்கு ஏற்றவாறு இவ்விதம் இட்டுக்கட்டி அந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார் என எந்த அடிப்படையில் பொய்யான செய்தியை வெளியிட முடிந்தது என்பது கேள்விக்குரியதாகியுள்ளது. உண்மையில் அச்சம்பவத்தில் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டிருந்தால்அச்செய்திக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கி வெளியிடுவது குறித்துப் பிரச்சினையோ விவாதமோ எழமுடியாது.

அரச பாதுகாப்புப் படைகளுக்கு எதிராகச் செயற்படும் யுத்தத்தின் பங்காளிகளான இத்தரப்பினருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டுமென எதிர்பார்க்கஇயலாது. இவ்விதம் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் எவராவது கொல்லப்பட நேர்ந்தால் அச்செய்தி சிங்கள மக்களது உணர்வுகளில் மாற்றங்களை உருவாக்கும் என்பதும் நியாயமானதே. ஆனால், வடபகுதியில் இடம்பெறும் சம்பவங்களை திரிவுபடுத்திச் செய்தியாகத் தென்பகுதி மக்களுக்குவழங்குவதன் மூலம் அவர்களது மன உணர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தவிளையும் இம்முயற்சி பின்னர் குறிப்பிட்ட செய்தி பொய்யானதொன்றென நிருபணமாகும் வேளையில் அவ்விதம் பொதுமக்களைத் தவறான வகையில் வழிநடத்துவதன் மூலம் அவர்களை முழுமுட்டாள்களாக ஆக்குவதாக அமைகிறது.

அதுவுமன்றி, பொதுமக்களுக்கு இத்தகைய ஊடகங்கள் மீதான நம்பிக்கை அற்றுப்போகவும் இது காரணமாக அமைந்துவிடுகின்றது. இவற்றுக்கும் மேலாக ஊடகத் தர்மம் உரியவகையில் கடைப்பிடிக்கப்படாத இத்தகைய செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு தலைகுனிவை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது. அத்துடன் இத்தகைய ஊடகங்களின் இத்தகைய செயற்பாடுகள் பொய்யானவை என நிரூபணமாகும் வேளையில் தமது முகத்தில் தாமே கரி பூசிக்கொள்வது போல மூக்குடைபடுவதால் வெட்கித் தலைகுனியவேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

இத்தகைய பொய்யான செய்திகளை அரச ஊடகங்கள் வெளியிடுவதன் மூலம் பொதுமக்களை முட்டாள்களாக்கிய சந்தர்ப்பம் இப்போதுதான் முதல்தடவையாக இடம்பெற்றது என்றில்லை. கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும்கூட தமது செய்திகள் மூலம் அரச ஊடகங்கள் கொலைசெய்துள்ளன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து பரபரப்பான செய்தியொன்றினை அரச ஊடகங்கள் வெளியிட்டன. அந்தவேளையில், அரச ஊடகங்கள் உட்பட வேறு சில ஊடகங்களும் பிரபாகரன் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்துவிட்டார் எனத் திரும்பத்திரும்ப பல தடவைகள் செய்தி வெளியிட்டன. ஆனால், கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி தமது மாவீரர் தின உரையை பிரபாகரன் நிகழ்த்தியபோது அது குறித்த விவரங்களை இத்தகைய ஊடகங்கள் போட்டி போட்டு வெளிப்படுத்தின.

தற்போது தமிழ்ச்செல்வன் விடயத்தில் பொய்யான செய்தியைப் பிரசுரித்து மூக்கு உடைபட்டதைப் போன்றே அன்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தார் எனத் தம்மால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி பிரபாகரனின் மாவீரர் தின உரைகுறித்து செய்தி வெளியிட்டதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தம்மைப் பொய்யர்களாக இந்த ஊடகங்கள் நிலைநிறுத்தித் தலைகுனிய நேரிட்டது.

ஐ.தே.கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு விமானப் படையினரின் பாதுகாப்புடன் ஹெலிகொப்டர் வசதி ஏற்படுத்திக் கொடுத்ததற்காக ஐ.தே.கட்சி அரசின் மீது இத்தகைய ஊடகங்கள் பலதரப்பட்ட விமர்சனங்களை மேற்கொண்டன. அதே போன்று ஐ.தே.கட்சி அரசின் அந்த நடவடிக்கைகளை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொண்ட கடுங்கோட்பாட்டாளர் தரப்பை மௌனமாக்கி- தற்போது அரசு ஏற்படுத்திக்கொடுத்த ஹெலிகொப்டர் வசதியைப் பயன்படுத்தி - கிளிநொச்சியில் போய் இறங்கிய அன்ரன் பாலசிங்கத்தை வரவேற்க அதே ஊடகங்கள் தமது செய்திகளின் மூலம் கொலைசெய்த தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் காத்திருந்ததைக் கண்டு சிங்கள மக்கள் இந்த ஊடகங்களை எள்ளி நகையாடியிருப்பர் என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் தமது பொய்ப் பிரசாரங்களின் மூலம் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியை அடைவதற்கு இத்தகைய ஊடகங்கள் வழிவகுத்துக்கொடுத்தன. அவற்றில் முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவினால் விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டைக் கடுமையாகக் கண்டித்துப் பலதரப்பட்ட விமர்சனங்களை இந்த ஊடகங்கள் மேற்கொண்டன. ஆனால், தற்போது வடபகுதியில்இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களில் பாதுகாப்புப் படைவீரர்கள் உயிரிழக்கநேர்வதையும் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க நோர்வேயின் விசேட பிரதிநிதி சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம்மேற்கொண்டதையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துகையில் - விமர்சிக்கையில் இந்த ஊடகங்கள் மெத்தவே அடக்கி வாசிக்க முயன்றதை அவதானிக்க முடிந்தது. இத்தகையவிதத்தில் பொய்யான தகவல்களை அரச ஊடகங்கள் வெளியிடுவதன் மூலம் தென்பகுதிச் சிங்களமக்களது இனப்பற்றையோ, இனத்தின் மீதான அபிமானத்தையோ வளர்க்க இயலாது- பதிலாக பொதுமக்களது அப்பாவித்தனத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களை குழப்பத்துக்கு உள்ளாக்குவதாகவே அமையும்.

எனவே, ஊடகங்கள் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் மரணமடைந்ததாகவோ தகவல் வெளியிடுவதன் மூலமோ அல்லது வேறுவித பொய்த் தகவல்களை வெளியிடுவதன் மூலமோ பொதுமக்களை முட்டாளாக்குவதற்கு அரசு முயற்சிப்பது ஏன் என்பதே தற்போது விடைகாண இயலாத வினாவாகத் தொக்கி நிற்கின்றது.

தமிழில்: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைசெய்வதற்கான மகிழ்ச்சியான சூழலை உருவாக்கிக் கொடுப்பது எப்படி?



பாடசாலைகள் உட்பட அரசாங்க நிறுவங்களில் வினைத்திறன் மந்தகதி அடைந்திருப்பது பற்றிய குற்றச்சாட்டுகள் பரவலாகக் கூறப்படுகின்றன.

ஒரு நிறுவனத்தின் வினைத்திறன் அதன் பணியாளர்களின் திருப்தியில் தங்கி உள்ளது. பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான - திருப்திகரமான - சூழலை உருவாக்கிக் கொடுப்பது அந்த நிறுவனத்தை முகாமை செய்வோரின் முதற்பணி.

இன்று அரச துறையில் அருகி வருகின்ற சிறப்பான முகாமைத்துவத்தை தூக்கி நிறுத்தக் கூடிய ஆலோசனைகளை உள்ளடக்கியது இந்தக் கட்டுரை.

கல்வி நிர்வாகத்தில் சேவை மூப்பும் பட்டறிவும் நிறைந்தவர் கட்டுரையாளர். அவர் கூறும் ஆலோசனைகள் சூரியகாந்தியில் இந்த வாரம் முதல் தொடராக வெளிவருகின்றன.

## நிறுவன முகாமைத்துவம் சில ஆலோசனைகள் 01

ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் ஆளணியினர் ஒவ்வொருவரும் இலகுவாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வேலை செய்வதற்கேற்ற ஒரு சூழலை உருவாக்கிக் கொடுப்பது என்பது முகாமைத்துவத்தின் முக்கியமான ஒரு செயற்பாடாகும்.

நிறுவனம் என்று குறிப்பிடும் பொழுது அது ஓர் அரச நிறுவனமாகவோ அல்லது அரசசார்பற்ற நிறுவனமாகவோ அல்லது தனியார் நிறுவனமாகவோ அல்லது வீட்டுக் குடும்ப நிர்வாகமாகவோ இருக்கலாம். இவை எல்லாமே ஒரு கட்டமைப்பை உடைய நிர்வாக அலகுகளாகும்.

நிறுவனம் ஒன்றின் உற்பத்தித்திறன் என்பது பொருள்களை உற்பத்தி செய்வது அல்லது சேவைகளை வழங்குவது மட்டுமல்ல, செய்கின்ற ஒவ்வொரு தொழிலையும் சேவையையும் சிறப்பாக ஆற்றுவதைக் குறிப்பதாகும். ஒவ்வொரு தொழிலிலும் சேவையிலும் உற்பத்தித்திறன் அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஏற்படும் வினைதிறன் (EFFECTIVENESS) உயர்வடையும். ஆனால், நமது நாட்டில் உற்பத்தித்திறனுக்கும் அதனை உயர்த்துவதையே இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் வேலை செய்பவர்களுக்கும் உரிய கௌரவமோ பொருத்தமான ஊக்குவிப்புகளோ அளிக்கப்படாததால் வினைத்திறனுக்கேற்ற வீதத்தில் விளைதிறன் அதிகரிக்கப்படவில்லை. இதனால் அரச நிறுவனங்களின் உற்பத்தி, வெளியீடு என்பன மிகவும் மந்தமான நிலையிலேயே உள்ளன.

இது பின்வரும் பிரதிகூலமான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

1. அலுவலக வேலைகள் தாமதடைதல்
2. மக்களுக்கு உரிய நேரத்தில சேவைகள் கிடைக்காமை
3. எதிர்பார்க்கும்நோக்கம் குறைவடைவதால் அந்த நிறுவனத்தில் விளைதிறன் அல்லது பெறுபேறுகள் குறைவாகக் கிடைத்தல்.
4. அலுவலகம் அல்லது பாடசாலை அல்லது வீடு தூய்மையற்றதாகவும் கவர்ச்சியற்றதாகவும் மாறி வருவதால் மகிழ்ச்சியுடன் வேலை செய்வதற்கான சூழல் ஏற்படாமை.
5. நிறுவனம் தொடர்பான நல்லெண்ணமும் மதிப்பும் குறைவடையும்.
6. வேலை செய்யும் ஒவ்வொருவரிடமும் மன அழுத்தமும் அமைதியின்மையும் ஏற்படும்.

இந்த நிலையில் ஒரு நிறுவனத்தில் ஆறு மணித்தியால வேலையை நான்கு மணித்தியாலங்களுக்குள் செய்து முடிக்கலாம் என்ற மனப்பான்மை வேலைசெய்யும் பணியாளரிடையே இயல்பாகவே இருக்குமாயின் அதனால் ஏற்படும் விளைதிறன் மிக உயர்வாகவே இருக்கும்.

தனியார் நிறுவனங்களில் முறைப்படி ஒழுங்கு படுத்தப்பட்ட நிர்வாக முறை காணப்படுவதால் அந்த நிறுவனங்களில் குறைந்த உள்ளீட்டுடன் கூடிய உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ள முடிக்கின்றது.

தனியார் நிறுவனங்களில் இத்தகைய மனப்பான்மையை ஏற்படுத்த முடியுமாயின் ஏன் அரச நிறுவனங்களிலும் அரச பாடசாலைகளிலும் செயற்படுத்த முடியாமல் இருக்கின்றது?

ஜப்பானில் நீண்ட காலத்திற்கு முன்னரே அறிமுகமாகியுள்ள 'கெய்சன் தந்திரோபாயம்' (Kaizen Strategy) எனப்படும் ஜப்பானிய முகாமைத்துவ முறையே ஜப்பானின் இன்றைய வெற்றிக்கான மூலாதாரமாகும்.

**நடராஜா அனந்தராஜ் எம்.ஏ.**

கெய்சன் (Kaizen) என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் பங்குபற்றுதலினூடான 'தொடர்ச்சியான முன்னேற்றம்' என்பதைக் குறிக்கும். ஒரு ஜப்பானிய சொல் இது.

(VIIபக்கம் பார்க்க)

# ஹமாஸின் வெற்றி கிளப்பும் கேள்வி...



இஸ்ரேலை நிர்மூலஞ் செய்வதைக் கொள்கையாகக் கொண்ட தீவிரவாத இயக்கமான ஹமாஸ் கடந்தவாரம் பலஸ்தீன நாடாளுமன்ற தேர்தலில் பெற்ற உறுதியான வெற்றி மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அரசியல் நிலக் காட்சியை உலுக்கியிருக்கிறது. ஹமாஸ் கணிசமான எண்ணிக்கை ஆசனங்களைப் பெறும் என்று தேர்தலுக்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பலஸ்தீன சட்டப் பேரவையில் இந்த இயக்கம் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி பெருவெற்றியடையும் என்று எவருமே எதிர்வு கூறியதில்லை.

132 ஆசனங்களைக் கொண்ட சட்டப் பேரவையில் 76 ஆசனங்களைக் ஹமாஸ் கைப்பற்றி பலஸ்தீன அதிகார சபையை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. இதன் மூலம் சுமார் 4 தசாப்தகாலம் பலஸ்தீன மக்கள் மத்தியில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் மிகப் பெரிய அங்கத்துவ அமைப்பான பதாஹும் கொண்டிருந்த மேலாதிக்கம் முடிவுக்கு வருகிறது.

பலஸ்தீன அதிகாரசபை ஹமாஸ் இயக்கத்தின் கைக்கு வரப் போகின்றபோதிலும், யசிர் அரபாத்தின் மறைவுக்குப் பிறகு பாலஸ்தீன ஜனாதிபதியாகத் தெரிவான மஹ்மூத் அப்பாஸ் தொடர்ந்தும் பதவியில் இருக்கப் போகிறார். இஸ்லாமியத் தீவிரவாத இயக்கத்திடம் கண்ட தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கும் பதாஹ் அமைப்பின் போராளிகள் வன்முறைகளில் இறங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் ஹமாஸ் இயக்கம் எவ்வாறு செயற்படப்போகிறது என்பதே இன்று எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும். ஹமாஸைப் பொறுத்தவரை அவ்வியக்கம் காஸா பள்ளத்தாக்கிலும் மேற்கு ஆற்றங்கரையிலும் சமூக நலன்புரி அமைப்புகள், கல்வி மற்றும் சுகாதார சேவைகள் மூலமாக பலஸ்தீன மக்களுக்கு பயனுறுதியுடைய சேவையை வழங்கிய ஒரு சரித்திரத்தைக் கொண்டிருக்கிறது. முன்னர் ஆட்சி செய்யப்பட்ட பாணியில் இனிமேலும் தாங்கள் ஆட்சி செய்யப்படுவதை விரும்பவில்லை என்பதை பாலஸ்தீனர்கள் தேர்தலில் வெளிக்காட்டியிருக்கிறார்கள். அதிகாரத்துக்கு வரும் புதியகட்சி நல்லாட்சியை வழங்குகின்ற அதேவேளை, இஸ்ரேலுடனான விவகாரங்களைக் கையாளுவதில் உறுதியுடன் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்று பாலஸ்தீனர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், இஸ்ரேலின் அரச பயங்கர வாதத்தையும் பாலஸ்தீன மக்கள் மீதான அதன் ஒடுக்குமுறையையும் எதிர்ப்பதில் சமரசத்துக்கு இடமில்லாத கொள்கையைக் கொண்ட - பெரும்பாலான தற்கொலைக் குண்டுத் தாக்குல்களுக்கு பொறுப்பான ஹமாஸ் இயக்கம் யூத அரசுடன் சமாதான சக வாழ்வைக் கொண்டிருப்பதற்கான விருப்பத்தை வெளிக்காட்டுமா? யூத அரசு மத்திய கிழக்கில் இருப்பதற்கான உரிமையை ஹமாஸ் அங்கீகரிக்குமா? பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் காலஞ்சென்ற யசீர் அரபாத்தும் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருக்க முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவரே. ஆனால், பின்னர் 1988இல் இஸ்ரேல் அரசு இருப்பதற்கான உரிமையை அவர் அங்கீகரித்ததுடன், 1990களில் இஸ்ரேலுடன் இடைக்கால உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டார். அவ்வாறான ஓர் அடிப்படைக் கொள்கை மாற்றத்தைச் செய்வதற்கு ஹமாஸ் இயக்கம் தயாராயிருக்குமா? அதிகாரப் பொறுப்புக்கு வருகின்ற அவ்வியக்கத்தின் அடுத்துவரும் நாள்களிலான கொள்கை நகர்வுகளே மத்திய கிழக்கின் சமாதானத்தைத் தீர்மானிக்கப் போகின்றன.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த உடனேயே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஹமாஸ் அதன் ஆயுதமேந்திய பிரிவைக் கலைக்க வேண்டுமென்றும் இஸ்ரேலை நிர்மூலஞ் செய்வதென்ற கொள்கையைக் கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

வன்முறைகளைக் கைவிடுவதற்கும் இஸ்ரேலை அங்கீகரிப்பதற்கும் மறுத்துவருகின்ற ஹமாஸ் நிலைப்பாடுகளின் காரணமாக, அவ்வியக்கத்தினால் நிர்வகிக்கப்படக் கூடிய பலஸ்தீன அதிகார சபையுடனான உறவுகளில் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென்று ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்திருக்கிறது.

காஸா பள்ளத்தாக்கில் இருந்து கடந்த வருடம் வெளியேறியதைத் தொடர்ந்து மேற்கு ஆற்றங்கரையில் இருந்தும் இஸ்ரேல் வெளியேறினால் அந்நாட்டுடன் நீண்ட போர் நிறுத்தமொன்றுக்கு இணங்குவதற்கு தயாராயிருப்பதாகவும் ஆனால், அதன் இறுதி இலக்கு இஸ்ரேலுக்கும் பலஸ்தீன அதிகார சபைக்கும் பதிலாக இஸ்லாமிய அரசொன்றை ஏற்படுத்துவதே என்றும் தேர்தல் காலத்தில் ஹமாஸ் இயக்கம் நிலைப்பாட்டை விளக்கியிருந்தது. ஆயுதங்களும் ஆயுதப் போராட்டமும் ஆக்கிரமிப்புடன் தொடர்புடைய விவகாரங்கள். ஆக்கிரமிப்பு நீடிக்கும் வரை தாங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமையையும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கான உரிமையையும் பாலஸ்தீன மக்கள் கொண்டிருப்பர் என்று ஹமாஸ் தேர்தலுக்குப் பின்னரும் அறிவித்திருக்கிறது. ஹமாஸை தங்களது மத்திய கிழக்கு கொள்கை நிலைப்பாடுகளுக்கு ஏற்புடையதான வகையில் வழிக்குக் கொண்டு வருவதற்கு பாலஸ்தீன அதிகார சபைக்கான பொருளாதார உதவிகளை ஒரு வெருட்டல் கருவியாக பயன்படுத்த மேற்குலகம் முனைந்து நிற்கிறது.

மத்திய கிழக்கில் ஜனநாய சீர்த்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்ற அமெரிக்காவும் ஐரோப்பிய





ஒன்றியமும் ஜனநாயகத் தேர்தலொன்றின் மூலம் பாலஸ்தீன மக்கள் வெளிக்காட்டிய விருப்பத்தை எந்தவிதமாக மதிக்கப்போகின்றன அல்லது வியாக்கியானப்படுத்துகின்றன என்ற ஒரு முக்கியமான கேள்வி இன்று சர்வதேச சமூகத்திடம் விடை வேண்டி நிற்கிறது.

(நன்றி : சூரியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிடமிருந்தும் விடுதலை வேண்டும்...

ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாழும் முறை, அரசியல், கலைகள், ஆடை ஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித்தன்மை அந்த சமூகத்தின் கலாசாரமாகக் கொள்ளப்படுகிறது. வாழும் காலங்களில் ஒரு இனம் அடையாளம் காட்டப்படுகிற தன்மையை இந்த கலாசாரம் பிரதிபலிக்கிறது. சமூகத்தில் உள்ள பெண்களின் நடைமுறைப் பாவனையே இதில் முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால், பெண்களது எண்ணங்கள், உணர்வுகள் செயற்பாடுகள் மனித வாழ்வை அவள் எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்பவற்றை அவளால் முழுமையாக சரியான விதத்தில் வெளிப்படுத்த முடிகிறதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே எம் கண்முன் நிற்கிறது. எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது



இங்கே முக்கியமாகிறது. இன்றைக்கு சமயம், கலை,பொருளாதாரம், இலக்கியம், தொடர்பூடகம் எனப் பல்வேறுபட்ட சகல கலாசாரச் செயற்பாட்டுத் தளங்களிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக்கருதப்படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் இன்றைக்கு பல பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டில் நிலவிய போர்ச் சூழல் ஆண்களின் இயங்கு தளத்தில் ஓரளவு இடைவெளி ஏற்படுத்திய நிலையில் பெண்கள் வீட்டுக்குள் இருந்துவிடமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளதை கண் முன்னாலேயே நாம் பார்க்கிறோம். இங்கே பெண்களின் பங்களிப்புக்கான தேவை ஏற்படுமிடத்து அவர்கள் வெளியே வந்து செயற்படுவதற்கான சாதகமான நிலை ஏற்படுகிறது. இவர்கள் தாம் சார்ந்த துறைகளின் செயற்பாடுகளில் இந்த கலாசாரத்தை எவ்வகையில் பிரதிபலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்த கலாசாரத்தின் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுகிறது. பெண்களின் செயற்பாடுகளினூடாக கணிக்கப்படுகின்ற இந்த காலசாரத்தை தீர்மானிக்கின்ற பொறுப்பும் பெண்களிடமே உள்ளதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும். இந்தப் பொறுப்பை எத்தனை பெண்கள் சரியாக புரிந்து கொள்கிறார்கள். ஏதோ ஒரு அதிகார வர்க்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்த கலாசாரத்தின் தன்மை சரியானது தானா என்று எத்தனை பேர் சிந்திக்கிறார்கள். இந்த விதமாக அமைந்துவிட்ட இந்த கலாசாரத்தின் ஆடம்பரங்கள் பெண்களுக்குத் தேவையா? என்ற கேள்வி இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்ற கருத்தாகிறது.

பட்டாடைகளும் நகைகளும் ஆடம்பரமான சடங்குகளும்தான் எமது கலாசாரம் என்பதை ஏற்றுக் கொள்ளும் அறியாமையிலிருந்து நமது பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும். நகையும் பட்டாடையும் ஆடம்பரமான வாழ்வும்தான் தனக்குப் பெருமைதரும் என்று பெண் நினைப்பாளேயானால் அது போன்ற முட்டாள்தனம் வேறு இல்லை. தன் கல்வியாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுமையாலும் மனிதப் பண்புகளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பாளேயானால் அதுதான் சமூகத்தில் அவளுக்கு பெருமை தரும் விடயம். குறைந்த பட்சம் இந்த விதமாய் நிமிரும் பெண்கள் என்றாலும் தமது வாழ்வை எளிமையானதாகவும் ஆடம்பரமற்றதாகவும் ஆக்கிக் கொண்டால் சமூகத்தில் மற்றவர்கள் பின்பற்றகூடிய முன் உதாரணமாக திகழ்பவர்களாக இருக்கமுடியும்.

போரினால் நலிவுற்றிருக்கும் நமது தேசத்தில் இன்றைய தேவை ஆடம்பரங்களைத் துறத்தல், எளிமையான வாழ்வை தேர்ந்தெடுத்தல். இது சாத்தியமாவது பெண்களின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது.

சமூகத்தில் எந்தப்பிரச்சினை என்றாலும் அதற்கு முகம் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெண்களுக்கே உள்ளது. அநேகமான பெண்களின் வாழ்நிலை சராசரிக்கும் கீழாகவே அமைந்துள்ளது. போரின் நடுவேயான பல இழப்புக்களை தாங்கியவர்களாகவே இவர்களில் பலர் இருக்கிறார்கள. இத்தகைய நிலைமையில் எமது கலாசாரங்களின் ஆடம்பரங்கள் சுமைகளாக அழுத்துவதை பெண்கள் அனுமதிக்கக் கூடாது. எமது இயற்கை வளங்களுக்கு பொருந்தக்

**தாமரைச் செல்வி**

கூடிய விதத்தில் எமது கலாசாரத்தை அமைக்கத் தவறினால் எமது இனம் பாரிய அழிவை எதிர்நோக்குவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும்.

பொதுவாகவே பெண்கள் ஆடம்பரமோகம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதை பல பெண்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் பல விடயங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகவும் தம்மை அடையாளம் காட்டுகிறார்கள். பெண்ணே பெண்ணிடமிருந்து விடுதலை பெறவேண்டும். பெண்ணே பெண்ணை சமமாய் நடத்த முன்வரவேண்டும். *

நன்றி : சூரியன்

## குறைகளைப் போக்கி மேன்மையுடன் வாழ்வோம்!



அழகாக தோன்றுவதற்கு பவுடர், லிப்ஸ்டிக், நகைகள் என்று மேக்கப் செய்து கொண்டால் போதாது. சின்னச் சின்ன விடயங்களில் கவனம் செலுத்தி உடலைப் பராமரித்து வந்தால் மட்டுமே அழகாகக் காட்சியளிக்கலாம்.

முகப் பராமரிப்பில் மூக்கிற்கும் முக்கியத்தும் தர வேண்டும். சிலருக்கு மூக்கின் மேல் பொறி பொறியாக இருக்கும். இவற்றை நீக்க பாலைக் கொதிக்க வைத்துவிட்டு அதன் மேல் ஊதினால் ஆவி மேலே வரும். அப்படி வரும் ஆவி மேல் முகத்தை வைத்துக் கொண்டு மூக்கைக் காட்டவும். பின்னர் துணியால் அழுத்தி எடுத்தால் வெள்ளையாக இருக்கும் அரும்புகள் வந்து மூக்கு மென்மையாக இருக்கும்.

நெற்றியில் வைக்கும் குங்குமத்தில் கலப்படம் உண்டு. இதனால் பொட்டு வைக்கும் இடம் வெளுத்து இருக்கும். நமைச்சலும் இருக்கும். சொறிந்து கொள்ள ஆரம்பித்தால் சிறுசிறு கொப்ளங்கள் தோன்றும். இதைப் போக்க மஞ்சள், பூண்டு ஆகிய இரண்டையும் அரைத்து குழைத்து தடவி வர ஓரிரு நாள்களில் சரியாகும்.

அளவிற்கு பெரிய பொட்டை நெற்றியில் வைப்பதால் வயது முதிர்ந்த தோற்றம் உண்டாகும். மேலும் நடுநெற்றியில் பொட்டு வைக்காமல் சற்று தாழ்த்தி பொட்டு வைத்தால் முகத்திற்கு எடுப்பாக - பொருத்தமாக இருக்கும்.

சில பெண்களுக்கு கழுத்துக்கு அடியில் சதை போட்டிருக்கும். ஓய்வு இருக்கும் நேரத்தில் கழுத்தை மேல் புறம் தூக்கி நன்றாக நிமிர்த்திவிட்டு முடிந்த மட்டும் குனிய வேண்டும். முகவாய் எனப்படும் தாடை மார்ப்பில் பட வேண்டும். இப்படியே மெதுவாக ஏழெட்டு முறை செய்து வர ஒரு மாதத்திற்குள் நல்ல பலன் கிடைக்கும்.

பொதுவாக நல்ல சருமத்தைப் பெற நிறைய வழிமுறைகள் உள்ளன. அதில் ஒன்று வெண்டைக் காய் லோசன்.

பிஞ்சு வெண்டைக்காய்களை அம்மியில் வைத்து நசுக்கி தூள் தூளாக எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். அதில் சிறிது நீர் ஊற்றி விட்டு 5 நிமிடங்கள் கழித்து பார்த்தால் அந்தத் தண்ணீர் வழுவழுப்பாக திரவம் போல இருக்கும். அதைக் கை, கால்கள், முகம், கழுத்து பகுதியில் நன்றாக பூசி உலர வைக்கவேண்டும். அரைமணி நேரம் கழித்து கடலை மாவு தேய்த்து கழுவிக் கொண்டால் சருமம் பளபளப்பாக மின்னும்.

எல்லோரும் அழகாக பிறந்திருக்க முடியாது. நான் கறுப்பு. என் மூக்கு கூராக இல்லை என புலம்பாமல் குறைகளை சரி செய்து திருத்திக் கொள்வதுதான் அலங்காரத்தின் நோக்கம். இதற்காக ஒரே வகையான அழகு வழி முறைகளை செயற்படுத்தி வந்தால் குறைகள் காணாமல் போய் நிறைகளே தெரியும்.

உங்கள் அழகை மெருகூட்ட முயன்று பாருங்களேன்.

### நாமும் பெண்கள்



*எவராவது*
*அழுதாலோ சிரித்தாலோ*
*நாமும்*
*அழலாம் சிரிக்கலாம்!*
*ஆனால்*
*நாம் அழுதாலோ*
*சிரித்தாலோ*
*எவரும் இல்லை!*
*அந்த வானம் மட்டும்*
*எமையுணரும்*
*ஏனெனில்*
*நாம் பெண்கள்*

- ச.நிரஞ்சனி

## சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

நீண்ட நாள்களின் பின் உன்னுடன் கடிதம் மூலம் உரையாடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். சில நாள்களாகத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உனக்குக் கடிதம் எழுத முடியவில்லை. ஆயினும் உன்னை மறந்துவிடவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் சந்தோசமான விடயங்கள் எதையும் எழுதுவதற்கு மனம் வரவில்லை. அண்மைக் காலமாக நமது தமிழ் மண்ணில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் எந்தவிதமான வன்முறையும் இடம்பெறலாம் என்ற ஒரு நிலை இருந்தது.

இதனால் பெண்கள் அடங்கிப் போய் - அடக்கப்பட்டு வாழ்ந்தார்கள்- வாழ்கிறார்கள்.

கற்பழிப்புகள், கடத்தல்கள், கொலைகள் என பயமுறுத்தும் ஒரு இக்கட்டனான வாழ்வியலில் பெண்கள் சிக்கித் தவித்தார்கள். உலக நாடுகள் கூட இது விடயத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றும் கூட அச்சத்துடனேயே நடமாடவேண்டிய சூழல் இங்கு நிலவுகின்றது. இது மாறவேண்டும் - மாற்றப்படவேண்டும் என்பதே எனது அவா.

துணிச்சலானவள், எந்த நேரத்திலும் எதையும் சமாளிக்கக் கூடியவள் என்று சொல்லப்படுபவர்கள் கூட தற்போது ஒடுங்கிப் போயுள்ளார்கள். பெண்விடுதலை, பெண் சமத்துவம் எனப் பேசும் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள் , அமைப்புக்கள் என்பன எமது தமிழ்ப் பிரதேசத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முயல வேண்டும்.

பிரியா! 'நீ கூட அடிக்கடி சொல்வாயே! - பெண்களுக்கு ஆண்களிடமிருந்து விடுதலை வேண்டும் என்றுதானே இந்தப் பெண் அமைப்புகள் கோருகின்றன. முதலில் சமூகத்திடமிருந்து விடுதலை வேண்டும். அடுத்து பெண்ணிடமிருந்து விடுதலை வேண்டும். அதன் பிறகே ஆணாதிக்கதிலிருந்து விடுதலை பெற முயற்சிக்க வேண்டும், என்று'

உண்மை தான்! முதலில் நமக்கு சமூகத்தின் தளைகளிலிருந்து விடுதலை வேண் டும். பெண்கள் முன்னேறி விட்டார்கள். சகல துறைகளிலும் கால்பதித்து விட்டார்கள். அது உண்மையே. எத்துறையிலும் இன்று பெண்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள் தான்.

ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு பெண்கள் சகல துறைகளிலும் கால் பதித்துள்ளார்களோ , அவ்வளவுக்கவ்வளவு ஆபத்துக்களையும் எதிர்கொள்கின்றாள்.

பத்திரிக்கைத் துறையில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ஆயினும், ஆபத்தும் அதேஅளவிற்கு அவளை நோக்கி வருகின்றது.

அண்மையில் கூட பெண் பத்திரிகையாளர் ஒருவர் ஈராக்கில் ஆயுதக்கும்பலால் கடத்தப்பட்டார். இதே நிலையிலேயே நம் நாட்டுப் பெண் பத்திரிகையாளர்களும் ஆபத்தில் உள்ளார்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் பெரும் சவாலாகவே இருக்கும் என்பது குறிப்பிடக்கூடியது.

எனவே, சமூகத்திலிருந்து பெண்களுக்கு விடுதலை கிடைப்பதே நமது தேவை.

**பிரியமுடன் சந்தியா**

**அர்த்தமுள்ள வாழ்விற்கு...**

எண்ணங்கள் மேன்மையுறும் போது
வாழ்வு வளமாகும்.
எண்ணங்கள்
தாழ்வுறும் போது வாழ்வு அழிவுறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மாளிகையால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் சந்திரிக்காவுக்கும் தொடர்பு!



சமாதான தேவதையாகத் தன்னை இனம் காட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அரசியலைவிட்டு ஒதுங்கி நீண்ட காலம் வெளிநாட்டில் தங்கியிருந்த அவர் இலங்கை திரும்பியதும் திடீரென அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டார். மிக விரைவிலேயே பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் ஆகிக் கொண்டார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் தன்னை மக்களின் நெருங்கிய நண்பி போன்று காட்டிக் கொள்வதில் சந்திரிகா முழு மூச்சுடன் செயற்பட்டார். சூரிய கந்தையில் போய் நின்று புதை குழி தோண்டினார். கிராமங்களிற்குள் இறங்கி மக்களைச் சந்தித்தார். அவற்றை அடித்தளமாக வைத்துக்கொண்டு சமாதானச் சாயத்தையும் பூசி ஜனாதிபதியானார்.

ஆட்சிபீடம் ஏறியதும், எல்லா அரசியல்வாதிகள் போன்று சந்திரிகாவும் நடந்து கொண்டார். மக்களை மறந்தார்; தான் ஓர் அரசி போன்று நடந்துகொண்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என நாட்டு மக்களுக்குச் சத்தியம் செய்த அவர், தனது 11 வருட பதவிக் காலத்தில் அந்தக் கதிரை தந்த சொகுசான கதகதப்பை முழுமையாக அனுபவித்தார். தன் வாக்குறுதியை மறந்துவிட்டுப் போகும்போது மற்றொருவரிடம் கையளித்துவிட்டும் போய்விட்டார்.

சந்திரிகா ஆட்சியிலிருந்தபோது அவர் பற்றிய கதைகளுக்கு எப்படிக் குறைவில்லையோ அதேபோன்று அவர் பதவி விலகிய பின்னும் செய்திகளுக்குக் குறைவில்லை. அந்த வகையில் ஆட்சியிலிருந்த சந்திரிகா பற்றிய தொடர் இது.

சந்திரிகா அரசியலுக்குள் மீள நுழைந்தபோது அவருக்கு ஆதரவாக இருந்து, அவரது வெற்றிக்கு வழிவகுத்தவர்ளில் ஒருவர் விக்டர் ஐவன். பிரபல அரசியல் ஆய்வாளரும், 'ராவய' வார இதழின் ஆசிரியருமான அவர் ஒரு காலத்தில் சந்திரிகாவுக்கு உற்ற நண்பர்.

கருத்து முரண்பாடுகளால் பின்னர் சந்திரிகாவிடமிருந்து விலகினார் விக்டர் ஐவன். அவரே இந்தத் தொடரை வரைந்துள்ளார். சந்திரிகாவின் வீரதீரங்கள், துணிவு, பொய், புரளி, பித்தலாட்டம் என்பன பற்றிய பல சுவையான அம்சங்களை அவர் இதில் திரட்டித் தந்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்தத் தொடர் எழுதப்பட்டிருந்தது. அதனை அப்படியே மொழியாக்கம் செய்து சூரியகாந்தியில் தொடர் கட்டுரையாக வெளியிட்டு வந்தோம். கட்டுரையின் இறுதிப் பகுதி இதுவாகும்.

சந்திரிகாவைப் பற்றிக் கூறுவதற்குப் பல விடயங்கள் உள்ளன. இருப்பினும் இந்தக் கட்டுரைத் தொடரை முடிக்க வேண்டியுள்ளதால்முக்கியமான விடயங்களை மட்டுமே தெரிவுசெய்து கூறவேண்டியுள்ளது.

சந்திரிகா 11 வருடங்களாகத் தொடர்ந்து ஜனாதிபதியாகப் பணி பரிந்துள்ளார். (நாடு சுதந்திர மடைந்த பின்னர் இவரைப் போல் அதிகளவு காலம் இதுவரை எவரும் நாட்டை நிர்வகிக்கவில்லை. ஜே.ஆர்.ஜயவர்த்தன பத்தரை வருடங்கள் மட்டுமே நாட்டை நிர்வகித்துள்ளார்). இருப்பினும் இதுவரை நாட்டை நிர்வகித்த ஏனைய தலைவர்களுடன் ஒப்பிடுகையில் மக்களை ஏமாற்றிய அவரது புன்சிரிப்பைத் தவிர அவர் நாட்டிற்கு எதையாவது செய்தார் எனக் கூறமுடியாதுள்ளது.

டி.எஸ்.சேனநாயக வரண்ட வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கினார். பண்டாரநாயக்க பஸ்சேவையை தேசிய மயமாக்கினார். துறைமுகங்களையும் தேசிய மயமாக்கினார். சிறிமா நில உச்சவரப்புச் சட்டத்தை உருவாக்கினார். எரிபொருள் விநியோகத்தை தேசிய மயமாக்கினார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன திறந்த பொருளாதார முறையை உருவாக்கினார். துரித மகாவலித் திட்டத்தை உருவாக்கினார். நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையையும் உருவாக்கினார்.

ஆர்.பிரேமதாஸ வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கிச் சாதனை படைத்தார். ஏழைகளுக்காக 'ஜனசவிய' திட்டத்தை உருவாக்கினார். ஆடை உற்பத்திச்சாலைகளை கிராமங்களுக்குக் கொண்டு சென்றார். மக்கள் நினைவில் வைத்திருக்கும் அளவிற்கு சந்திரிகா இவ்வாறான எதையுமே செய்யவில்லை.

நாட்டில் தலைவிரித்தாடிய வன்முறையைத் தானே ஒழித்தார் என மீண்டும் மீண்டும் சந்திரிகா கூறினாலும் அதை உண்மை எனக் கூற முடியாது. தெற்கில் உருவான வன்முறை ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின் தர்க்க ரீதியான பெறுபேறாயினும், அதனால் உருவான பதற்றம் கிளர்ச்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து படிப்படியாக முடிவுக்கு வந்தது.

அதையடுத்து மக்கள் நெஞ்சங்களில் நிலவிய எஞ்சிய அச்சம் முதலில் ஊடகங்களின் மாற்றுக் கருத்துக்களாலும் அதன் பின்னர் லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்கவும் முன்வைத்த குற்ற விசாரணைப் பிரேரணை காரணமாகவும் மறைந்தது எனக் கூறலாம். மரண பயம் நிலவிய யுகத்தில் சந்திரிகா இந்நாட்டில் இருக்கவில்லை. அவர் மீண்டும் நாடு திரும்பியபோது மக்கள் மனங்களில் இருந்து அச்சம் நீங்கி பலநாள்கள் கடந்து விட்டிருந்தன.

மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதில் அதுவரை ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் நிர்வாகத்தால் நிலைநாட்டப்பட்ட அத்தனை சாதனைகளையும் சந்திரிகா முறியடித்து விட்டார் எனக் கூற முடியும். வடமேல் மாகாண சபைக்கான தேர்தலின்போது அவர் மக்களின் வாக்குகளைச் சூறையாடியது பற்றிய விவரங்கள் வெளியாயின. இருப்பினும் அவ்வாறான வழிமுறைகளை இனிமேலும் அனுசரிக்க முடியாது என்பதைப்புரிந்து கொண்ட பின்னர், வாக்குச் சீட்டுகளை அச்சடித்து வாக்குப் பெட்டி களில் திணிக்கும் நடைமுறை 1999 ஜனாதிபதித் தேர்தலில் பின்பற்றப்பட்டது.

வேறு தலைவர்களைப் போல தனது கைகள் ரத்தம் தோய்ந்த கைகள் அல்ல எனச் சந்திரிகா அடிக்கடி கூறிவந்த கதைகளை அவர் விரும்பிக் கூறி வந்த அரசியல் பாடலாகக் கருத முடியும்.

சந்திரிகாவுக்கு, ஒரு சில அரசியல்வாதிகளைப் போல் மனிதக் கொலைகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிட வாய்ப்பிருக்கவில்லை என்பது உண்மையே. சந்திரிகாவின் அதிஷ்டமோ என்னவே அவரது தாயார் சிறிமாவைப் போல அல்லது ஜே.ஆரைப் போலஅல்லது பிரேமதாஸவைப் போல தென்பகுதி இளைஞர்களின் கிளர்ச்சியை அவர் எதிர்நோக்க நேரிடவில்லை. எனவே, பெரிய அளவில் மனிதப் படுகொலைகளில் ஈடுபடவில்லை என அவரால் (சந்திரிகா) கூற முடிந்தாலும் அவரது கைகள் சற்றேனும் கறை படியாதவை என அவரால் கூறமுடியாது.

ஜனாதிபதி மாளிகையில் இருந்தவாறு அவர் அறிந்து அல்லது அவரது ஆசீர்வாதத்துடன் அவரால் பாலூட்டி வளர்க்கப்பட்ட கிரிமினல்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் எண்ணிக்கை ஒரு சிலவாயினும் அவற்றில் அவருக்கு (சந்திரிகாவுக்கு) தொடர்புகள் இருந்தன. சந்திரிகா மனிதர்களை

**தமிழில் : கஜனி**

நேரடியாகக் கொல்வதை பெரும்பாலும் விரும்பவில்லை. பதிலாக அவர் மனிதர்களைக் கொல்லாமல் கொல்வதையே அதிகமாக விரும்பினார். அந்த விடயத்தில்அவருக்கிருந்த ஆற்றல் அளப்பரியது.

1999 ஜனாதிபதித் தேர்தலின் பின்பு உருவான வன்முறையின்போது குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர் (பெயரை வெளியிடுவதில்லை என நான் வாக்குறுதியளித்தபடியால் பெயரைக் குறிப்பிடவில்லை) ரகசியமாக எனக்குத் தெரிவித்த அதிர்ச்சியான விடயத்தைக் கீழே தருகின்றேன்.

எதிரிகள் மீது சித்திரவதைகளை மேற்கொள்ளும் தேவை ஏற்படும்போது ஜனாதிபதி மாளிகையிலிருந்து மல்லர்களும் பல சந்தர்ப்பங்களில் அதிவிசேட வீடியோ கமராவும் கொண்டு செல்லப்படும். அந்தக் கமராவை ஒரு பைக்குள் மறைத்து வைத்திருந்தாலும் அந்தக் கமராவுக்கு (வெளியே எடுக்காமல்) படம்பிடிக்கும் விசேட ஆற்றலுள்ளது.

இப்படியான விடயங்களுக்கு அந்தக் கமரா ஏன் அனுப்பப்படுகின்றது என நான் கேட்ட போது அவர் அளித்த பதில் ஆச்சரியத்தை அளித்தது. குறித்த வேலைக்கு (சித்திரவதைக்கு) பொறுப்பானவர்கள் அவர்களது பணியை உரிய விதத்தில் நிறைவேற்றுகிறார்களா என்பதை அறிந்து கொள்வதற்கும் அவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாவோர் வேதனைப்படுவதைத் தங்கள் கண்ணால் கண்டு களிப்பதற்கும் அந்தக் கமரா அனுப்பப்பட்டு [illegible] அவர் தெரிவித்தார்.

அவர் கூறிய கதை என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிய போதிலும் பெரிய அளவில் என்னால் அதனை நம்ப முடியாமல் இருந்தது. எனினும் சிறிது காலத்தின் பின்னர் வேறு எவருக்கும் தெரியாத விதத்தில் தன் முன்னிலையில் நடக்கும் ஒரு சம்பவத்தை மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே வீடியோ படம் எடுக்கக் கூடிய இரண்டு நவீன ரக கமராக்களை ஜனாதிபதி கொள்வனவு செய்துள்ளார் என நான் கேள்விப்பட்ட போது குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் முன்னர் தெரிவித்த கதை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஒருவேளை அந்த விசேட வீடியோ கமராவால் எடுக்கப்பட்ட அருவருப்பான வீடியோ படங்கள் இன்றும் எங்காவது இருக்கக் கூடும்.


பத்தகான சஞ்ஜீவ ஜனாதிபதி மாளிகையின் செல்லப்பிள்ளை. அவருக்கு பாலூட்டியதும் பாதுகாப்பு வழங்கியதும் ஜனாதிபதி மாளிகையே ஆகும். ரோஹண குமாரவைக் கொன்றவர் அவரே ஆவார். ருக்காந்த மற்றும் சந்திரலேகா சம்பவங்களில் சித்திரவதைகளுக்குப் பொறுப்பாயிருந்தவரும் அவரேயாவார்.

இந்த வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற தினத்திற்கு இரண்டு நாள்களின் பின்னர் ருக்காந்த விடுத்த தொலைபேசி அழைப்பை அடுத்து அந்தத் தம்பதியினரும் அவர்களது இரு குழந்தைகளும் மறைந்திருந்த வீட்டுக்கு நான் செல்ல நேரிட்டது. ருக்காந்த தான் அனுபவித்த வேதனையான அனுபவங்களையும் ரகசியமொன்றையும் எனக்குக் கூறினார்.

சம்பவம் இடம்பெற்றவேளையில் அவர் மதுபோதையில் பியானோ வாசித்துக் கொண்டிருந்தார். அவரருகே அவரது உறவினரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் இருந்தார்.

மதுபோதையில் பியானோ வாசித்துக் கொண்டிருந்த அவருக்கு பல்வேறு மூர்க்கத்தனமான தோற்றங்கள் தோன்றின எனவும் ஆயுததாரிகள் அங்கு வந்தால் என்ன செய்யலாம் என்ற எண்ணம் அவரது மனதை ஆட்டிப்படைத்ததாகவும் அவர் கூறினார். மகிழ்ச்சி அளிக்கக் கூடிய எதுவித தோற்றமும் அவருக்குத் தென்படாததால் அவர் தொடர்ந்து பியானோவை வாசித்துக் கொண்டிருந்தபோது தொலைபேசி மணி அடித்தது. பியானோ வாசிப்பதை நிறுத்தி விட்டு தொலைபேசியை அவர் எடுத்துள்ளார்.

மறுபுறத்தில் அவரின் உறவினரான பொலிஸ் உயர் அதிகாரி உரையாடினார். "ஜனாதிபதி மாளிகையிலிருந்து விசேட குழு ஒன்று உமது வீட்டை நோக்கி புறப்பட்டு வருகிறது. உடனடியாகப் பிள்ளைகளுடன் வீட்டை விட்டு வெளியேறுங்கள்" என அவர் ருக்காந்தவுக்குத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உயர் அதிகாரியே அங்கிருந்த மலசல கூடத்திலிருந்து அந்தத் தகவலை ருக்காந்தவுக்கு தெரிவித்திருந்தார்.




கிடைத்த தகவல்கள் அவரது அச்சத்தை இரண்டு மூன்று மடங்குகளாக அதிகரிக்க வைத்த போதிலும் முடிவு எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் அவர் தொடர்ந்து பியானோவை வாசித்த வண்ணம் இருந்தாரே தவிர குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறும் நிலையில் இருக்கவில்லை.

அவ்வேளையில் ஆயுததாரிகள் திடீரென வீட்டுக்குள் நுழைந்தால் என்ன செய்யலாம் என பியானோவை வாசித்த வண்ணம் அங்கிருந்த உறவினரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் வினவியபோது அதற்குப் பதிலளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தன்னிடம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியால் (பிஸ்டல்) அங்கு அத்துமீறி வருவோர் மீது சுட்டு அவர்களைத் தன்னால் விரட்ட முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தொலைபேசி மணி அடித்தது. மறுமுனையில் முன்னர் கதைத்த அதே பொலிஸ் அதிகாரி உரையாடினார். தான் முதல் வழங்கிய தகவலின்படி ருக்காந்த வீட்டிலிருந்து வெளியேறிவிட்டாரா என்பதை உறுதிப்படுத்தவே அத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார். அந்தத் தகவலை அடுத்து ருக்காந்த வீட்டைவிட்டு வெளியேறத் தயாரான வேளையில் ஜனாதிபதி மாளிகையில் இருந்து புறப்பட்ட குழு ருக்காந்தவின் வீட்டுக்குள் நுழைந்து விட்டது.

சந்திரலேகா கூறிய தகவலின்படி அந்த [illegible] குழுவின் தலைவனின் தோற்றம் 'ராவயா' பத்திரிகையில் ஒரு தடவை வெளியான படத்தில் (மேடையில் சந்திரிக்காவுடன் நின்றபோது எடுக்கப்பட்ட படம்) வட்டமிட்டுக் காட்டப்பட்ட உருவத்தின் முகத்தை ஒத்ததாக இருந்தது. வட்டமிடப்பட்ட அந்த முகம் பத்தகான சஞ்ஜீவ உடையது என அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என சந்திரலேகா தெரிவித்தார்.



அந்தக் கொடூர அரக்கர்களால் ஏற்பட்ட பயம்காரணமாக அந்தக் குழந்தைகள் நடுங்கின. அந்தக் குழந்தைகளின் கண்முன்னே அவர்களின் பெற்றோர்கள் பெற்றோலினால் குளிக்கவாக்கப்பட்டனர். பெற்றோலை ஊற்றிய பின்னர் தீ வைக்கப்படும் என்ற அச்சத்தை உருவாக்கவே அவ்வாறு பெற்றோலினால் அவர்கள் குளிக்கவாக்கப்பட்டனர். உடம்பின் மீது ஊற்றப்பட்ட பெற்றோல் மயிர்க்கண்கள் ஊடாக உடம்பைத் தாக்கிய போது சொல்லலொனா வேதனையை ஏற்படுத்தியது.

இந்த மிலேச்சத்தனமான சம்பவம் பின்னர் பகிரங்கமானபோது சந்திரலேகாவின் குடும்பத்தினருக்கும் சந்திரலேகாவின் முன்னாள் கணவருக்குமிடையே பிரச்சினைகள் இருந்தனவென்றும் இந்தச் சம்பவம் அந்தப் பிரச்சினை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் எனவும் இந்தச் சம்பவத்திற்கும் அரசிற்கும் எதுவித தொடர்புகளும் இல்லை என்றும் அரசு தெரிவித்தது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில நாள்களின் பின்னர் ஜனாதிபதி தனது ஆதரவாளர்களுக்கு அலரி மாளிகையில் இராப்போசன விருந்தளித்தார். அந்த விருந்துக்கு சந்திரலேகாவின் முன்னாள் கணவரும் அவரது மகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அந்தப் பெண் அங்கு பாடி விருந்தினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் என ஊடகங்கள் தெரிவித்தனர்.

ரோஹண குமாரவின் படுகொலைச் சம்பவத்திலும் இதே விதமான அர்த்தத்துடனேயே அரசு கருத்துத் தெரிவித்தது. ரோஹண குமாரவின் மனைவி அவர் பணிபுரிந்த பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்தார் எனவும் அதன் பிரதிபலனாகவே ரோஹண குமார கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அரசு தெரிவித்தது.

ரோஹண குமராவின் மரணம் தொடர்பான விசாரணைகளின்போது அந்தக் கொலையின் பின்னணியில் பத்தகான சஞ்ஜீவ செயற்பட்டார் எனத் தெரிய வந்தபோது ஜனாதிபதி (சந்திரிகா) அதில் தலையிட்டு அந்த விசாரணை நடவடிக்கைகளை நிறுத்திவைத்தார்.

ரோஹண குமாரவின் படுகொலை, குமார் பொன்னம்பலத்தின் படுகொலை, ருக்காந்த - சந்திரலேகா குடும்பத்தினர் மீதான சித்திரவதைகள் ரவி கருணநாயக்கவின் வீட்டுக்கும் அவரது மனைவியின் வீட்டுக்கும் மனித சடலங்களின் துண்டுகள் அடங்கிய பார்சல்களை அனுப்பிய சம்பவங்கள் ஆகியன தொடர்பாக உண்மையில் ஜனாதிபதியால் (சந்திரிகா) என்னதான் கூற முடியும்? அந்தச் சம்பவங்கள் பற்றி சந்திரிகா அறிந்திருக்கவில்லையா?

(V பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஒருமைப்பாடு சாத்தியமாகுமா?

'தமிழ்த் தாகம்' என்ற சொற்றொடர் சிறப்புச் சூழலில் வடக்கு - கிழக்கில் பொதுவான பாவிப்பாக அமைந்த போதிலும் இச்சொற்றொடர் தேடலைக் குறிக்கவேயன்றி ஆக்கிரமிப்பைக் குறிப்பதாகக் கொள்ளமுடியாது. இச் சொற்றொடர் பலத்தைக் கொண்டோ; அல்லது ஏதாவது குடியியல் தன்மையற்ற செயற்பாடுகளாலோ பெரும்பான்மை யினரின் உரிமைகளைப் பறிப்பது அல்லது கவருவது என்பதைக் குறிப்பதாகக் கருதமுடியாது. ஆங்கிலமோ, சிங்களமோ பேசமுடியாமல் தமிழ் மட்டும் தொடர்பு மொழியான வடக்கு - கிழக்கு பெரும்பான்மையான தமிழர்கள், மற்றும் முஸ்லிம்களுக்கு இச்சொற்றொடர் வெறும் கருவியேயாகும். 'ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர்களுக்குரியதை கொடுத்துவிடு' என்று மெய்யியலா பிளேட்டா ஒருமுறை வரையறுத்தார். இது அப்படியே தமிழருக்கும் பொருந்தும். அறியாமையாலோ, அதிகாரத்தாலோ ஒருவருக்குரியவைகள் மறுக்கப்பட்டால் தாகம் வளருவது இயற்கையே என்றபோதிலும், தொடர்ச்சியாக, அநீதியாக மறுக்கப்பட்டால் வன்முறைக்கும் போருக்கும் இட்டுச்செல்லும்.

அரசியல் வரலாற்றை அலசி ஆராய்வோமானால் பிரித்தானியாவின் சுதந்திரத்துக்குப் பின் தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளூடாக தமது தாகத்தையும், மனஆதங்கங்களையும் தணிப்பதற்கு முயன்ற தேடல்கள் அனைத்தும் பல ஆண்டு காலமாக வெற்று முயற்சியாயிற்று என்பது தெளிவாகும். சிங்களம் மட்டும் என்ற பிரகடனம் உத்தியோகபூர்வமான பின்னரே தமிழ்த் தாகம் உச்சமடைந்தது. தமிழ் மக்கள் தாம் தெரிவுசெய்த பிரதிநிதிகளூடாக தமிழ் மொழியையும் அரச மொழியாக இணைக்க வேண்டுமென்று அன்றைய அரசுகளைப் பெரும்பாலும் கெஞ்சினார்கள். இது வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் தீவிரவாத சக்திகள் முன்னாள் பிரதமமந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவை படுகொலை செய்ததன் மூலம் அக்கோரிக்கைகளும் உடனடியாகவே கொல்லப்பட்டன.

### இயலாமை வன்முறையைப் பிறப்பிக்கின்றது

பிரதம மந்திரி திரு.எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் படுகொலைக்குப்பின் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களிடையில் ஒன்றுபட்ட நிலைப்பாட்டில் தமிழ்த் தாகம் ஏற்கப்படுவது உத்வேகத்தைப் பெற்ற நிலையில் நாட்டிலிருந்த அரசாங்கம் அரசியல் ரீதியில் தமிழ் முஸ்லிம்களின் தீவிரத்தன்மையைக் குறைக்க முயலவில்லை. வடக்குக் கிழக்கிலிருந்த இளைஞர்கள் வெறும்போக்கான மனவெறுமையாலும், இயலாமையாலும் ஒன்றுபட்ட ஆயுதப் போராட்ட எதிர்ப்பிற்குத் தள்ளப்பட்டனர். இதனால் தெற்கிலும் வடக்கிலுமுள்ள பல இளைஞர்களும், இளம்பெண்களும் யுத்த பீடத்தில் தமது மதிப்புமிக்க வாழ்வைப் பலியாக்கினர். நாட்டின் எல்லைக்கிராமங்களின் இளைஞர்களே இறுதி விலையைக் கொடுப்பவர்கள் என்பதும் இது இன்னும் தொடர்கிறது என்பதும் கவலை தரும் எதார்த்தமாகும். 'தந்தையர் புளிப்புத் திராட்சை உண்டனர். பிள்ளைகளின் பற்கள் கூசிற்று' என விவிலியம சொல்கிறது. தமிழ் இளைஞர்களின் தணியாத தாகத்தை வெளிப்படுத்தும் இன்னுமொரு வடிவமே இதுவாகும்.

### முழுமட்டத்திலான போர்

யாழ்ப்பாண நூலக எரிப்போடு பரந்த அளவிலான தமிழ்த் தாகம் புதுத் திருப்பத்தை அடைந்தது. (ஆசியாவிலேயே மிகவும் முதன்மையானவைகளில் ஒன்றாக விளங்கிய இதனை, நாட்டை நேசிக்கும் யாராவது, நாட்டின் தேசிய பூர்வீக முதுசத்தை எரிப்பார்களா?) வடமராட்சி தளவிரிப்புக் குண்டுவீச்சும், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அமைதிக்காகவென்று 'இந்திய அமைதிப்படை'யின் அழைப்பும், காலப்போக்கில் 'மாசற்ற (தமிழ்) மக்களைக் கொல்லும் படை' (I. P. K. F. - Innocent People Killing Force) என அழைக்கப்படத் தொடங்கியதும் முரணியின் தோற்றப்பாடாக, சமூகரீதியான தோல்வியில் முடிவுற்ற வீரப்பிரதாப செயலாக மாறியதோடு தமிழர் தாகத்தை இங்கும் வெளிநாட்டிலும் உள்ள முழுத்தமிழ் மக்களின் தாகமாக உருமாறச் செய்ததும் எதார்த்தமாகும். இந்திய அமைதிப் படையின் வெளியேற்றலோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு முழுத் தமிழ் மக்களையும் பூர்வீக

> தமிழ் மக்களின் 'தணியாத தாகத்தை' உருவாக்கிய சுழலை முற்றுமுழுதாக விளங்கிக் கொள்ளவும். உள்வாங்கிக்கொள்ளவும் திரு.எஸ்.டபிள்ய.ஆர்.டி. பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் உத்தியோகபூர்வ மொழி என்று பிரகடனப்படுத்திய வரலாற்றுக்கட்டங்களுக்கு எமது மனவோட்டங்களைத் திருப்பிக்கொள்ளவேண்டும். தூய்மை வாதக் குறுகிய பார்வையாலும். மத. மொழி பற்றிய தவறான புரிதலாலும் தமிழைத் தேசியக் கொள்கையெடுப்பில் சேர்ப்பதற்குக்கூட அவர் வாழ்நாளில் அவரால் இயலவில்லைப்போலும். இப்படிப்பட்ட பயனற்ற தொலைநோக்குடைய பாலைவன நாடொன்றிலிருந்துதான் 'தமிழ்த்தாகம்' உருப்பெற்றது.



வாழ்விடங்களிலிருந்து வன்னிக் காட்டுக்குத் துரத்துவதில் வெற்றிகண்டது. அரச படையின் துணையுடன் கேணல் ரத்வத்த விடுதலைப் புலிகளை யாழ்ப்பாணத்தில் வெற்றிகண்டதை அடையாளமாக்க சடங்காசாரத்தோடு தேசியக் கொடியை நாட்டியதும், எரிகிற நெருப்புக்கு எண்ணெய் வார்க்கும் செயலானதோடு முழுமட்டத்திலான போரை விடுதலைப் புலிகளும் அரச படைகளும் தொடர்ந்தன. அர்த்தமற்ற போரின் மனித வாழ்வின் அளவிட்டுமுடியா இழப்பை தந்தையர்களும் தாய்மார்களும் மனைவியரும் பிள்ளைகளும் மட்டும் அறிவார்கள். அவலங்களும் மனித இழப்புக்களும் இல்லங்களில் பாதுகாப்பில் இருந்த அரசியல்வாதிகளையோ அவர்களின பிள்ளைகளையோ தொடவில்லை. எனவே, போராடும் இரு பக்கத்தினரும் இது உண்மையில் 'சமாதானத்திற்கான தாகம்' என்பதை உணரவேண்டும்.

### போர் நிறுத்த ஒப்பந்தம

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் முன்னெடுப்பால் ஐ.தே.க அரசும் விடுதலைப் புலிகளும் கையெழுத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தால் சில காலங்களுக்கு சிறிய அளவில் அமைதி இந்த நாட்டில் இருந்தது. இதனை தமிழர்களும், முஸ்லீம்களும் பெருந் தெருக்களில் சுதந்திரமாக நடமாடவும், தமது சொந்த மாவட்டத்திலும் கொழும்பிலும் அன்றாட கடமைகளைச் செய்யவும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசு காட்டுகின்ற உதவியாக பார்க்கக்கூடாது. ஆனால், இன்று தெற்கில் இது ஒரு உதவியாகவோ அல்லது சலுகையாகவோ பேசப்படுகிறது. மாறாக நாட்டின் எல்லாக் குடிமக்களும் சுதந்திரமான தொடர்பியல் வளங்களை மகிழ்வோடு அனுபவிக்கவும் ஒரே நாட்டினமாகக் கருதப்படுவதுமாகவே பார்க்கவேண்டும்.

### தமிழ் தாகத்திற்கானஇறுதித்தீர்வு

நவம்பர் 2005 தேர்தலில் ஒரு சில கட்சிகளைத் தவிர்த்து, சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரும், ஐ.தே.க வேட்பாளரும் மற்றைய பல கட்சிகளுடன் இணைந்து ஒரு இனத்தினதோ, மதத்தினதோ தப்பபிப்பிராயங்களும் இல்லாமல் தமிழர் தாகத்திற்கு அரசியல் ரீதியான அணுகுதல் என்பது தவிர்க்க முடியாத உண்மை என்பதை உணர்ந்தார்கள். எப்படியாயினும் பூர்வீகத்தனமான ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு மதம் என்ற இணக்கப்பாடு காண்பது தோல்வி யுற்றது. இதை மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவதானால் இறுதியில் நாடு இரண்டா கப் பிளவுபடும். இன்றுவரை துன்புற்றதைவிட இந்நிலை மிகவும் அழிவுமிக்கது. நாடு பிரிக் கப்படுவதை எந்தவொரு பொறுப்பு மிக்க மனிதரும் கனவு காணமாட்டார்கள். தெற்கிலும் வடக்கிலும் தீவிரவாதிகளை உருவாக்கியது ஸ்ரீ.சு.கட்சி மற்றும ஐ.தே.கட்சிகளின் அரசாங்கங்களே. நாட்டின் ஆத்மாவான தெற்கு மற்றும் வட-கிழக்கிற்கிடையில் சொருகப்பட்ட ஆப்பை மீளப் பெறுவது அவர்களுக்குள்ள கடமையாகும். 'ஒரு மொழி இரு நாடுகள் இரு மொழிகள் ஒரு நாடு' என மதிப்புக்குரிய பொதுவுடமை முன்னெடுப்பாளர் கலாநிதி கொல்வின் ஆர் டீ சில்வா ஒருமுறை தீர்க்க தரிசனமாகக் கூறிய அறிக்கைக்கு இன்றைய தேசியத் தலைவர்கள் செவி கொடுக்கவேண்டும்.

நல்லெண்ணத்தை செய்முறைப்படுத்தியுள்ள இறுதியான உரையில் திரு.வே.பிரபாகரன், பேச்சுகான மஹிந்தா ராஜபக்சவின்அழைப்புக்கு பதிலளித்து உறுதிப்படுத்தியது என்பது பெருமைமிக்க சமிக்ஞை யாகும். தணியாத தமிழ் மக்களின் தாகத்தை தீப்பதற்கான முயற்சியில் வழங்கும் செயன்முறையில் ஒருபக்கக் கட்சியாக இருக்கவே பிரபாகரன் விரும்புகிறார் என்றே நான் புரிந்துள்ளேன். இதை சட்டபூர்வமாக பதிவுசெய்து எதிர்கால அரசியல் பேச்சுகளில் புரிந்துணர்வுடன் சுட்டப்படுவதையே வலியுறுத்தியுள்ளார் வே.பிரபாகரன்.எனவே, ஸ்ரீ.சு.கட்சியும், ஐ.தே.கட்சியும் பிளவை உருவாக்கியதால் 2005 நவம்பர் தேர்தலில் 70 வீதம் பெற்ற இரண்டு கட்சிகளும் நாட்டை ஐக்கியப்படுத் துவது தமது ஒருங்கிணைந்த கடமை எனக் கொள்ளல் வேண்டும். எரியும் கேள்வி என்னவெனில் அவர்களால் அதனைச் செய்யமுடியுமா? தமது சுய லாபங்களுக்கு முன்னே நாட்டை வைக்க இரண்டுக்கும் அரசியல் ஆளுகை உள்ளதா?

(கட்டுரையாளர் கடந்த 20 ஆண்டுகளாக இரு இனங்களுக்கும் இடையிலான ஆழ்ந்த வெடிப்புக்கு பாலமமைக்க வடக்கிற்கும் கொழும்புக்குமிடையே சமாதானத்தூது சென்றவர். எல்லா மதத்தவர்களிலுமுள்ள அமைதிச் செயற்பாட்டாளர்களை வடக்கிற்கு அழைத்துச் சென்றவர்.)

-ஆங்கில மூலம் : அருட் திரு. அல்பிரட் அலெக்ஸாண்டர்
தமிழாக்கம்: சா. பி. கிருபானந்தன்

('சண்டே ஐலண்ட்' ஆங்கிலத் தினசரியில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்)

---

# ஜனாதிபதி மாளிகையால்

(IV பக்கத் தொடர்ச்சி)

ரோஹண குமார மற்றும் குமார் பொன்னம்பலம் ஆகியோரின் படுகொலைகளுக்கும் பொறுப்பானவர்களை இனங்கண்ட பின்னர் அது பற்றிய ரகசிய அறிக்கையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு ஷோ விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இது பற்றி ஜனாதிபதி (சந்திரிகா) கூற என்ன உள்ளது? அந்தக் கொடூர செயல்களுடன் ஜனாதிபதி மாளிகையின் செல்லப்பிள்ளைக்கு (பத்தகான சஞ்ஜீவவுக்கு) இருந்த தொடர்புகளை அவர் (சந்திரிகா) அறிந்திருக்கவில்லையா? அவர் மக்களின் பணத்தில் கொள்வனவு செய்த - பைக்குள் மறைத்து வைத்துச் சம்பவங்களைப் படம்பிடிக்கக் கூடிய வீடியோ கமராக்கள் இரண்டையும் அவர் ஓய்வு பெற்றுச் சென்றபோது திறைசேரியிடம் ஒப்படைந்தாரா? அல்லது அவற்றையும் தனது பெட்டி, படுக்கைகளுடன் வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டாரா? அந்தக் கமராக்கள் மூலம் படம்பிடிக்கப்பட்ட சம்ப வங்கள் யாவை? இவை பற்றி சந்திரிக்கா வால் நாட்டிற்கு என்ன கூறமுடியும்?

தனது அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் இரண்டு பத்திரிகை ஆசிரியர்களைக் கொல் வதற்கு திட்டமிட்டபோது தான் தலையிட்டு அதனைச் செயலற்ற தாக்கியதாக 2001 பொ துத் தேர்தல் காலத்தில் ரூபாவாஹினிக்கு அ ளித் பேட்டியில் சந்திரிக்கா குறிப்பிட்டிருந் தார். அந்தப் பேட்டி இடம்பெற்ற சில தினங் களுக்குப் பின்னர் பத்திரிகையாளர் மகாநாட் டில் அவ்வாறு கொலை செய்வதற்காக திட் டம் தீட்டப்பட்ட பத்திரிகை ஆசிரியர்கள் இருவரும் யார் என பத்திரிகையாளர் மகா நாட்டில் கலந்துகொண்ட 'ராவய' பத்திரிகை யாளர் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பி னார். அதற்கு சந்திரிகா கீழ்க்கண்டவாறு பதி லளித்தார்.

''உங்கள் பத்திரிகை ஆசிரியர் (ராவய பத் திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன்) என் னைப் பந்தாடுகிறார். அவர் சாகக் கிடந்தவர். அவர் இன்று உயிருடன் இருப்பது என்னா லேயே ஆகும்'' எனத் தெரிவித்தார்.

கொலைப்பட்டியலில் இருந்த இரு பத்தி ரிகை ஆசிரியர்களில் ஒருவர் நான் (விக்டர் ஐவன்) மற்றவர் 'சண்டே லீடர்' பத்திரிகை யின் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்க. படு கொலைத் திட்டத்தைத் தீட்டியவர் அமைச் சர் எஸ்.பி.திஸநாயக்க. அது பற்றி எஸ்.பி. கூறிய கதை மிகவும் முக்கியமானது. அந்தக் கதையை நான் வேறு ஒருவர் மூலம் கேள் விப்பட்டேன்.

குறிப்பிட்ட ஒருநாள் என்னைக் கொல் லத் திட்டம் தீட்டப்பட்டு அதை நிறை வேற்றுவதற்கான நபரும் அழைக்கப்பட்டி ருந்த வேளையில், அந்த நபரும் அங்கிருந்த (அமைச்சர்) பவித்[illegible] நடைபெறவிருந்த [illegible] யைத் தவிர்க்கும் விதத்தில் எஸ்.பியின் மன தை மாற்றுவதற்கு கடும் முயற்சிகளை மேற் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றால் (விக் டர் ஐவனைக் கொலை செய்தால்) அரசு பா ரிய பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என அவர்கள் தொடர்ந்தும் எஸ்.பி. திஸநாய கவிடம் தெரிவித்தபோதிலும், எஸ்.பி. அவர் கள் மீது கோபத்தில் சீறிப்பாய்ந்தாரே தவிர தனது முடிவை மாற்ற விரும்பவில்லை. முடிவில் பவித்திரா வன்னி ஆராச்சி அந்த இடத்தை விட்டு அகன்றார். பின்னர் அந்த நபர் எஸ்.பி. திஸநாயகவைச் சந்தித்தபோது அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''நீ நினைக்கிறாயா அவரைக் (விக்டர் ஐவனை) கொல்லவேண்டிய தேவை எனக்கு இருப்பதாக... இல்லை! ...... மனி தர்தான் அவரைக் (விக்டர் ஐவனைக்) கொல் லுமாறு கூறினார்.'' - என்று தெரிவித் துள்ளார் எஸ்.பி.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் சம்ப வங்கள் புதுமையான விதத்தில் இடம்பெற் றன. ஜனாதிபதி ஜே.ஆர். காலத்தில் இருந்து நான் ஆட்சிக்கு வரும் அரசு குறித்தும் ஆட்சி யாளர்கள் குறித்தும் விமர்சனங்களை மேற் கொண்டுள்ளேன். இருப்பினும் அவரைத் தவிர (சந்திரிகா) வேறு எவரும் என்னைக் கொல்லாமல் கொல்லும் கொள்கையை அனுசரிக்கவில்லை. நான் அறிந்தவரையில் சந்திரிகாவின் மரணப்படையினர் என்னைக் கொல்வதற்கு மூன்று தடவைகள் முயற்சித் துள்ளனர்.

அதிகாரத்தின் பாதுகாப்பு இருக்கும் [illegible] சந்திரிகாவுக்கு ஆவிகளின் பாது காப்பும் இருந்தது. ஆனால் தற்போது சந்திரி காவுக்கு அதிகாரத்தின் பாதுகாப்பு இல்லை. ரோஹண குமார மற்றும் குமார் பொன்னம்ப லம் ஆகியோரின் ஆவிகள் தற்போது சந்திரி காவைப் பின்தொடரக்கூடும். தற்போது ரோ ஹண குமாரவின் மனைவி இத்தாலியில் வாழ்ந்து வருகிறார். எக்காரணம் கொண்டும் அவர் (சந்திரிகா) ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயங்களை மேற்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

சந்திரிகா ஐரோப்பிய நாடொன்றுக்கு விஜயம் செய்யும் வேளையில் ரோஹண குமாரவின் மனைவி தனது கணவனைப் படு கொலை செய்ததாக குற்றஞ்சாட்டி அந் நாட்டு நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக முறையிட நேர்ந்தால் சிலி நாட்டின் பினேஷேக்கு ஏற்பட்ட அனுபவங்களை சந் திரிகா சந்திக்கநேரிடும்.

சந்திரிகா தனது ஓய்வு வாழ்க்கையை மேற்கொள்ள சிறிலங்கா பொருத்தமான நாடு எனக் கருத முடியாது. ஐரோப்பாவும் ஆபத்தானது. அவர் தனது ஓய்வு வாழ்க் கையை மேற்கொள்ளப் பொருத்தமானநாடு கள் பர்மா (மியன்மார்) மற்றும் சீனா போன்ற நாடுகளாகும். காரணம் சர்வதேசச் சட்டங் களை அந்த நாடுகள் அனுசரிப்பதில்லை. செலவுகள் கொஞ்சம் அதிகமானாலும் எகிப் தும் பரவாயில்லை.

சந்திகா 11 ஆண்டுகள் நாட்டை ஆண்டு ராஜபோகங்களை அனுபவித்தார். அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கீழ்த்தர நட வடிக்கைகளுக்காக சிறை செல்லாதிருக்க அவரை அதிஷ்டம் காப்பாற்ற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவும்போது...!

குரங்கு ஒன்று ஒருநாள் காலையில் உணவு தேடிப் புறப்பட்டது. வழியில் ஒரு மலைப்பாம்பு பாறையின் அடியில் சிக்கி சாகுந் தறுவாயில் கிடந்ததைப் பார்த்தது.

மலைப்பாம்பு தன்னைக் காப்பாற்றும் படி குரங்கிடம் கெஞ்சியது. மனமிரங்கிய குரங்கு பாறையை அகற்றி மலைப் பாம்பைக் காப்பாற்றியது.



நன்றி கெட்ட மலைப் பாம்பு உடனடியாக குரங்கைப் பிடித்துக் கொண்டது. அதை விழுங்கவும் முயன்றது. குரங்கிற்குக் கோபம் ஏற்பட்டது. ''உனக்கு நன்மை செய்தேன். எனக்கு தீமை செய்கிறாயே? இது நியாயமா?'' என்று கத்தியது. தன்னை விட்டுவிடும்படி கெஞ்சியது. மலைப்பாம்பு அதைக் கேட்கவேயில்லை.

அந்த நேரத்தில் முயல் ஒன்று அங்கே வந்தது. குரங்கு முயலிடம் தன் குறையை முறையிட்டது. நீதிபதியாக இருந்து தன் பிரச்சினையைத் தீர்க்கும்படி வேண்டியது. முயல் யோசித்தது. ''உங்கள் பிரச்சினை எனக்குப் புரியவில்லை. ஆரம்பத்தில் இருந்து சொல்லுங்கள்.

மலைப்பாம்பே நீ பாறையில் அடியில் எப்படிச் சிக்கியிருந்தாய்? அதைச் செய்து காட்டு'' என்று முயல் மிடுக்காய் உத்தரவிட்டது.

மலைப்பாம்பு யோசிக்கவேயில்லை. குரங்கை விட்டு விட்டு மலைப்பாம்பு பாறையின் அடிக்குச் சென்றவுடன் குரங்கு பாறையை அதன் மேல் உருட்டியது. குரங்கும் முயலும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடின. மலைப்பாம்பு மறுபடியும் பாறையின் அடியில் சிக்கிக் கொண்டது.

**கீ.இருதய நேசன்,** தரம் 9பி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

## உங்களின் கைவண்ணங்கள்



ரு.கஜிதன், தரம் - 7சி, யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.



ஜீ.அருள்வாகினி, தரம் - 8 டி, யா/வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை.



சி.சஜீவன், தரம் - 5பி, யா/புத்தளை மகா வித்தியாலயம்.

## எங்கள் ஊர்ப் பாடசாலை



எங்கள் ஊர்ப் பாடசாலை
எழுச்சி மிகு கல்விச்சாலை
தங்க நிகர் மரங்கள்
தழைத்து நிற்கும்
பசுமைச் சோலை!

பொது அறிவு விஞ்ஞானம்
பொருளாதாரம் சமூகம்
எளிமையான ஆங்கிலம்
இனிமையான சங்கீதம்!

எல்லாம் கற்றுத் தருவது
எங்கள் பள்ளிக் கூடமாம்
வந்து கற்றுச் செல்லுங்கள்
வாழ்க்கைத் தரம் உயரவே!!

- கவிதா






## தம்பி, தங்கைகளே!

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

# வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!

போட்டி இலக்கம் – 11



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ.150/=, ரூ.100=, ரூ.75 /= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்குட்பட்ட சிறுவர்களே இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கைவண்ணத்தைக் காட்டுங்கள்!!

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 222 5542

*அனுப்பவேண்டிய முகவரி:-*
**'வர்ணம் தீட்டுவோம்'** - 11, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -10இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங் கள் வருமாறு:-

- **முதலாம் இடம் :-** ஞானராசா நிறஞ்சினி, தரம் -2, நவீல்ட் பாடசாலை.
- **இரண்டாம் இடம் :-** சி.கோபிகன், தரம் - 2ஏ, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.
- **மூன்றாம் இடம் அ :-** க.காயத்திரி, தரம் -4, காரைநகர் ... காணவாய் ம.க.வித்தியாலயம்.


# உலக அதிசயங்கள் சில...




### ஈபல் கோபுரம்

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில்தான் ஈபல் கோபுரம் உள்ளது.
300 மீற்றர் உயரமுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்றால் நகர் முழுவதையும் பார்க்கலாம்.
அலெக்சாண்டர் குஸ் டிச் ஈபல் என்பவரால் இக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது.
இவரே இக் கோபுரத்தில் ஏறிய முதல் மனிதருமாவார்.

### பிரமிட்டுகள்



சுமார் 4 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து மன்னர்களுக்கு கட்டிய கல்லறைகளே இந்தப் பிரமிட்டுகள். எந்திரங்களின் உதவியின்றி அக்கால மக்கள் கட்டியுள்ளனர். பெரிய பிரமிட்டுகள் ஒரு லட்சம் மக்களால் 20 ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப்பட்டது என ஹிராட்டாஸ் என்ற கிரேக்க வரலாற்றாசியர் கூறியுள்ளார்.
பிரமிட்டுகளின் உட்புறச் சுவர்களின் சித்திரங்களும் வர்ண ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. இங்கு புதைக்கப்பட்ட மன்னர்களின் விவரங்கள் ஒருவித சித்திர எழுத்துகளால் குறிப்பிடப்பட்டுள்ளன.



### சாய்ந்த கோபுரம்

இத்தாலி நாட்டிலுள்ள பீசா நகரத்தில் உள்ளது இக் கோபுரம்.
179 அடி உயரமுள்ள இக்கோபுரம் வெண்ணிற சலவைக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளது.
1174 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி 1350 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது.
மூன்றடுக்கு மாடியாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டபோது நேர்க்குத்து நிலைக்கு 16 1/2 அடி வரை இக்கோபுரம் சாய்ந்தது. விழுந்து விடும் போன்று தோன்றினாலும் பலநூறு ஆண்டுகளாக விழாமல் நிற்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறிது சிறிதாகச் சாய்ந்து 50 ஆண்டுகளில் முற்றாகச் சாய்ந்து விழுந்து விடும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### சுதந்திரச் சிலை



அமெரிக்காவில் உள்ள இந்தச் சுதந்திர சிலை உலகத்திலே உள்ள மிகப் பெரிய உலோகச் சிலை ஆகும். இந்தச் சிலையை பிரெஞ்சு மக்கள் தங்கள் நட்பின் காரணமாக அமெரிக்க நாட்டு மக்களுக்கு வழங்கினர்.
பெண் வடிவமாக அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலை அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தின் முன் உள்ள சிறு தீவில் உள்ளது. சிலையின் வலக்கையில் தீப்பந்தமும் இடக்கையில் சுதந்திரப் பிரகடன நாளைக் குறிக்கும் பலகையும் உள்ளது. காலடியில் அறுந்த சங்கிலி ஒன்றும் உள்ளது.
பார்த்தால் டி என்பவரால் திட்டமிடப்பட்டு கஸ்டாங் ஈபலால் இச்சிலை செய்யப்பட்டது.
இரண்டு லட்சம் கிலோக்கிராம் எடையுள்ள இச்சிலை 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குக் கையளிக்கப்பட்டது.



### சீனப் பெருஞ்சுவர்

பகைவர்கள் படையெடுத்து வராது தடுக்கும் நோக்குடன் சீனர்களால் இந்தப் பெருஞ்சுவர் அமைக்கப்பட்டது. கி.பி.3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்தச் சுவர் 2 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் நீளமுள்ளது. தொழிலாளர்களின் பெரும் உழைப்பினால் இந்தச் சுவர் கட்டப்பட்டது. சுவர் கட்டுமானத்தின் போது 4 லட்சம் தொழிலாளர் கள் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**தொகுப்பு : சதானந்தன் கோபிகா,**
*தரம் - 8டி, வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் கடிதம்

## ஈழத்துக் கலைஞர்களின் சினிமா முயற்சி....

எங்கள் திரைப்படத்துறையை எப்படி கட்டியெழுப்புவது? எங்களுக்கென ஓர் திரைக்களத்தை எங்கு நிறுவுவது போன்ற கேள்விகளோடு நம்முள் வாழ்கின்ற பல ஈழத்துக் கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் ஆங்காங்கே குறும்படங்களாகவும் முழுநீளத் திரைப்படங்களாகவும் வெளிவந்த வண்ணமுள்ளன. இருப்பினும், எத்தனையோ நல்ல கலைஞர்கள் இந்த முயற்சியில் இறங்கி, முயன்றுபார்த்து, மூச்சறுந்த நிலையில், போதிய ஒத்துழைப்புகள் இல்லாமல் கலைத்துறையில் இருந்து விலகிச் செல்லும் சூழலே புலம்பெயர் நாடுகளிலும் சரி இலங்கையிலும் சரி இருந்து வருகிறது.

'எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு' என்ற வாக்கினைப் பின்பற்றாத எந்தப் படைப்பாளியும் தங்கள் வாழ்வைத் தரமான முறையில் பதிவு செய்ய முடியாது! இந்த உண்மையை உணர்ந்து காதல் கடிதம் திரைப்படக்குழுவினர் செயற்பட்டுக் கொண்டுடிருக்கிறார்கள்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இசை உலக வரலாற்றில் புதிய முயற்சியாக வெளிவந்த காதல் கடிதம் இசைத்தொகுப்பு அமைந்தது. இந்த இசைத் தொகுப்பு தமிழ் மக்கள்



'காதல் கடிதம்' படத்தில் சில காட்சிகள்...



மத்தியிலும், பத்திரிகைகள் மற்றும் தமிழ் ஊடகங்கள் அனைத்திலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இப்பொழுது உலகத் தமிழ்



சினிமா வரலாற்றிலேயே முதன் முறையாக ஓர் இசைத்தொகுப்பில் இருந்து ஒரு திரைப்படமென காதல் கடிதம் திரைப்படத்திற்கான படப்பிடிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காதல் கடிதம் இசைத்தொகுப்பை வழங்கிய அதே கூட்டணியின் அடுத்த இசைத் தொகுப்பும் வெளிவர இருக்கின்ற வேளையில், காதல் கடிதம் திரைப் படத்தின் படப்பிடிப்புக்கள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கள் வாழ்வை நாமே பதிவு செய்வோம். அதை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்வோம். இலங்கை, இந்தியாவில் வாழ்கின்ற எமது கலைஞர்களோடும், தமிழ்நாட்டில் உள்ள திரைப்படத்துறை சார்ந்த - தேர்ந்த கலைஞர்களின் ஆதரவோடும் இத்திரைப்படத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இத் திரைப்படத்தின் தயாரிப்பிற்காக கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு மேலாக நானும் வசீகரனும்



கதாநாயகன், கதாநாயகி

காத்திருந்தோம். இப்பொழுது ஒரு நல்ல இளம் தயாரிப்பாளர் கிடைத்த மகிழ்ச்சியில், அவரே முழுத் தயாரிப்புப் பொறுப்பையும் ஏற்கத் தொடங்கி விட்டோம் என்கிறார் படப்பிடிப்புத் தளத்தில் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இசையமைப் பாளர் வி.எஸ்.உதயா அவர்கள்.

கடந்த 14.12.2005 அன்று முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் சென்னையில் படப்பிடிப்பு நடத்தப்பட்டு, 21.12.2005 முதல் இலங்கையில் படப்பிடிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.இத் திரைப்படத்தை 'Water Falls Movie Makers' நிறுவுநர் ரி.தில்லைவண்ணன் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தயாரித்துக் கொண்டிருக்கிறார். இலங்கைத் தமிழ்த் திரைப்படக் கூட்டுத்தாபனமும் இவருக்குத் தங்களால் ஆன முழு உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.


இந்தக் காதல் கடிதம் படப்பிடிப்பின் முக்கிய விடயமாக உலகத் தமிழர்களின் காதுகளைக் கொள்ளையடித்த 'யாழ்தேவியில் காதல் செய்தால்' பாடல் யாழ்தேவி தொடருந்திலேயே மூன்று நாள்களுக்கு மேலாகப் படப்பிடிப்புச் செய்யப்பட்டுள்ளது. -இந்தப் படப்பிடிப்பின் போது நூற்றுக்கும் அதிகமான எமது மக்கள் சக்தி எவ்.எம்.வானொலியூடாகத் தெரிவு செய்யப்பட்டு, யாழ்தேவி தொடருந்தில் பயணிப்பது போன்று படமாக்கப்பட்டது. இந்தப் பாடலை உயிரோட்டமாகப் பாடி மக்கள் மனதில் இடம் பிடித்துவிட்ட சாம்.பி.கீர்த்தன் அவர்களே பாடி, நடித்தது இந்தப் படத்திற்கு மேலும் சிறப்பூட்டுகிறது.

இத்திரைப்படத்தில் இடம் பெற இருக்கும் ஆறு பாடல்களில் 'ஈழப்பெண்ணே

ஈழப்பெண்ணே', 'ஒரு நதியின் பெயரோடு பிறந்தவளே', 'எழுது எழுது என் அன்பே', 'யாரும் எழுதாத பாடல் எழுதத்தானே ஆசை' ஆகிய பாடல்கள் இலங்கை முழுவதும் உள்ள எழில் கொஞ்சும் இயற்கைத் தாயின் மடியில் படம் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.இதுவரையில் எந்தத் தமிழ்த் திரைப்படங்களிலும் இடம்பெறாத அழகுத் தளங்களில் காதல் காட்சிகள், நகைச்சுவைக் காட்சிகள் படம்பிடிக்கப்பட்டன. வவுனியாவில் இத்திரைப்படத்தின் திருப்புமுனைக் காட்சி படம்பிடிக்கப்பட்டபோது வவுனியாவில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மனமுருகி அக்காட்சியோடு ஒன்றிப்போய் கண்ணீர் சிந்தும் வகையில் இக்காட்சி படமாக்கப்பட்டது மறக்கமுடியாதது என்கிறார் காதல் கடிதம் திரைப்படக் குழுவில் பணியாற்றும் ஒருவர்.

உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழரின் வாழ்வியலை 'அவர்களின் வளமான குடும்ப வாழ்க்கையை, ஒரு பிள்ளைக்கு காதல் வந்தால் பிள்ளைக்கும் பெற்றோருக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை எங்கள் கலை' கலாசார பண்பாட்டுத் தன்மைகள் சிதையாத வகையில் அழகிய திரைக்காவியமாக வெளிக் கொண்டு வரும் கடிதம்தான் காதல் கடிதம்.

காதல் கடிதம் திரைப்படத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறிபாலாஜி கதாநாயகனாக அறிமுகமாகிறார். அவருக்கு இணையாக உங்கள் இதயத்தை வருடும் கதாபாத்திரத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனிசா ஈழத்துப் பெண்ணாக அறிமுகமாகிறார்.



'காதல் கடிதம்' படத்தில் சில காட்சிகள்...

அறிமுக நடிகர்களாக இருந்தாலும் கதையின் தரம்கருதி இருவரும் மிகுந்த ஈடுபாட்டோடு நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்திரைப்படத்தை குறுகிய காலத்திற்குள் உருவாக்கியே தீருவேன் என உறுதியோடும் தன்னம்பிக்கை யோடும் முன்வந்த இளைய தயாரிப்பா ளர் ரி.தில்லைவண்ணன் இப்படத்தின் இயக்குனர் முகேஷ் அவர்களுக்கும், காதல் கடிதம் திரைப்படக் குழுவினருக்கும் திருப்தி தரும் வகையில் தயாரிப்புப் பணிகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

'பாரதி கண்ணம்மா' முதல் 'ஆட்டோக்கிராப்' திரைப்படம் வரை 'தவமாய்த் தவமிருந்து' திரையில் ஓர் நாவல் தந்த இயக்குநர் சேரனிடன் உதவி இயக்குநராகப் பணியாற்றிய முகேஷ் அவர்கள் திருமதி.வினோலியா நீதிதேவன் அவர்களின் கதைக்கு, திரைக்கதை வசனம் எழுதி மிகவும் அழகாக நெறியாள்கை செய்து கொண்டிருக்கிறார். காதல் கடிதம் இசைத்தொகுப்பின் மூலம் தனது உன்னதமான இசையை பாடல்களுக்கு வழங்கிப் பின்னணி இசையினை வழங்கவும், காதல் கடிதம் திரைப்படக் குழுவினருக்கு மிகவும் பக்கபலமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் இசையமைப்பாளர் வி.எஸ்.உதயா.

திரைப்படக் கல்லூரியில் படித்துப் பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்து,

தமிழன்

தங்கப் பதக்கம் வென்று தன் புதுமையான ஒளிப்பதிவில் கண்ணுக்குக் குளிர்மையான காட்சிகளைக் கவிதையாகத் தந்து கொண்டிருக்கிறார் பி.ஆர்.ராஜன்.

இத்திரைப்படத்சின் முழுப் பாடல்களையும் முதல் முறையாக புலம்பெயர்ந்து நோர்வே மண்ணில் வாழ்கின்ற வசீகரன் அவர்கள் எழுதியிருக்கின்றார்.

இப்படி எல்லாமே புதிய, இளைய முகங்களின் அறிமுகங்களோடு உங்களுக்கு ஏற்கனவே பரிச்சயமான பிரபல தென்னிந்திய நடிகர்களும் காதல் கடிதம் திரைப்படத்தில் இணைகின்றார்கள்.

---

# வேலைசெய்வதற்கான....

(II பக்கத் தொடர்ச்சி)

ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தும் நுட்பங்கள் (House Keeping Techniques) என அழைக்கப்படுகின்றன. இது உயர் நிலையில் பதவி வகிக்கும் முகாமையாளர்கள்,தொழிலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள், பணியாளர்கள் என ஒவ்வொரு படி நிலையிலும் உள்ள ஆளணியினருக்குத் தேவையான ஒரு முகாமைத்துவ நுட்பமாகும்.

'கெய்சன்' முறை முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது உற்பத்தித்துறையின் வளர்ச்சி பற்றிய நோக்கிலேயே திட்டமிடப்பட்டதாயினும் இன்று அது சகல துறைகளிலும் பின்பற்றப்படும் ஒரு நுட்பமாக மாறிவிட்டது.

'கெய்சன்' (Kaizen) என்ற குடையின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1. வாடிக்கையாளரின் நலன் கருதுதல் - ஒரு பாடசாலையில் மாணவர்களே வாடிக்கையாளராவர்.
2. கூட்டுத் தர வட்டம் (Total quality management)
3. தர வட்டம் (Quality Circle)
4. ஆலோசனைத் தொகுதி (Suggestion System)
5. நேரத்திற்கு வருதல் (Just in Time)
6. 5- எஸ் முறைப் பிரயோகம்
7. உற்பத்தி முன்னேற்றம்
8. பூச்சிய விளைவு குறைவு
9. பங்கு பற்றும் அணுகுமுறை (Participatory Approach)
10. சிறிய குழுக்களுக்கான செயற்பாடுகள் (Small Group Activities)

ஒரு முறையற்றதும் ஒழுங்கற்றதுமான நிர்வாகக் கட்டமைப்பை மாற்றி, பணியாளர்களின் மனப்பான்மையை உயர்த்தி வினைத்திறனுடன் பணியாற்றி உற்பத்தித்திறனை அதிகரிக்கும் ஒரு வழி முறையாகவே ஜப்பானிய நிபுணர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட "5-எஸ்" (5-S) முகாமைத்துவ முறையான 'நிறுவனம் நடத்தும் நுட்பங்கள்' (House Keeping Techniques) என்ற செயல் ஒழுங்கில் குறிப்பிடப்பட்ட ஐந்து விடயங்களையும் ஒவ்வொரு முகாமையாளரும் பாடசாலை அதிபரும் குடும்பத் தலைவியும் தலைவனும் பணியாளர்களும் பின்பற்றி நடைமுறைப்படுத்துவன் மூலம் பல சிக்கல்களுக்குத் (Problems) தீர்வு காணமுடியும். விரயங்களைக் குறைத்து வினைத்திறன் உயர்த்துதல் (Reducing The Wastage and Increasing The Efficiency) என்ற நோக்கத்தைக் கொண்ட "5- எஸ்" முறையானது பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டவையாக உள்ளது.

1. முயற்சி விரயத்தைக் குறைத்தல்
2. நேர விரயத்தைக் குறைத்தல்
3. பணவிரயத்தைக் குறைத்தல்
4. உற்பத்தித் திறனை உயர்த்துதல்
5. தரத்தைப் பேணுதல்
6. குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடித்தல்
7. வேலை செய்யும் இடத்தில் ஊழியர்களுக்கான பாதுகாப்பை வழங்குதல்
8. ஒழுக்கம் உயர்வாக இருத்தல்

இந்த இலக்கை அடையும் வகையில் 5-எஸ் முறையைக் கடைப்பிடித்து வருவது என்பது இலகுவான ஒரு முகாமைத்துவ முறையாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவிகள் நடமாடுவது

**ஆவிகள் மற்றும் அவற்றின் நடமாட்டம் குறித்த வாதங்கள் இன்னும் முடிவடையவில்லை. ஆவிகள் பற்றிய நம்பிக்கை கீழத்தேய நாடுகளில் மட்டுமல்ல விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளிலும் இன்னும் உள்ளன. ஆவிகள் நடமாட்டம் குறித்து விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது குறித்து ''டிஸ்கவரி'' சஞ்சிகையில் வந்துள்ள சம்பவங்களையும் ஸ்ரீலங்காவில் அத்துருகிரியப் பகுதியில் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவத்தையும் இங்கு தருகிறோம்.**

நமது மக்கள் மத்தியில் மத்திரமல்ல உலகிலுள்ள பல்வேறு நாட்டவர்கள் மத்தியிலும் பேய் பிசாசுகள், ஆவி உலகம், ஆவிகளின் நடமாட்டம் மற்றும் ரத்தத்தை உறையவைக்கும் சம்பவங்கள் பற்றிய பல்வேறு விதமான கதைகள் உள்ளன. ஆவிகளால் பயமுறுத்தப்பட்டுள்ளோர் நேரடித் தாக்குதல்களுக்குட்பட்டுள்ளோர் பற்றிய உண்மையில் நடந்தவை என ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சம்பவங்கள் பற்றிய தகவல்களைச் செவிமடுத்துள்ளோம்; வாசித்துமுள்ளோம். சிலவேளை, உண்மையாகவே அவ்வாறான சம்பவமொன்றுக்கு நேரடியாக முகம் கொடுத்துள்ள எவராவது இருக்கக் கூடுமோ? என்பதைக் கூட நாம் நம்புவதற்குத் தயாரில்லை. பண்டைக் காலம் தொட்டே இவையெல்லாமே பொய் மாயை என்று தூக்கியெறியப்பட்டுள்ளன.

ஆயினும், சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே மர்மமான நிகழ்வுகள், ஆவிகளின் நடமாட்டங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் கூட, அவை பற்றிய தகவல்கள் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தபடாததால் மாயை என்ற முத்திரை குத்தப்பட்டு புறந்தள்ளப்பட்டன. ஆயினும் தற்போது அந்த முத்திரையை அகற்ற விஞ்ஞான ஆய்வாளர்கள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள போதிலும் மிகச் சமீப காலத்திலிருந்து அத்தகைய ஆராய்ச்சிகள் தொடர்பாக மிக நுட்பமான சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய முயற்சிகளை அடுத்து மர்மமான நடமாட்டங்கள், ஆவிகள் தொடர்பான ஆய்வுகளில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது.

மர்மமான நடமாட்டங்கள் ஆவிகள் பற்றிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பான வெளியீடுகள் பெருமளவில் உள்ளன. ஆனால் அவற்றை வாசிப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. உண்மையில் ஆவிகளின் நடமாட்டங்கள் பற்றிய தீர்மானமொன்றுக்கு வருவதற்கு இப்பரிசோதனைகள் இன்றியமையாதவையாகும். **Ghosts And thesuper Natural** என்ற வெளியீடு அவற்றுள் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இது ஆவிகளின் நடமாட்டம் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தர்க்கரீதியில் புலப்படுத்துவதற்கு முயன்றுள்ளது. இப்பரிசோதனைகளுக்கு மிக நவீன விஞ்ஞான சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மறு அவதாரம் தொடர்பான ஆராச்சிகளை மேற்கொண்டுள்ள சதலின் வில்சன் என்ற ஆய்வாளர், மறு அவதாரம் என்பது இறப்பின் பின்னரான வாழ்க்கையின் ஒரு கட்டமாகுமென விளக்கமளித்துள்ளார். ஆவிகள் நடமாட்டம், அவதாரம் என்பன வாழ்ந்து மறைந்த ஒருவரின் அருவமான பத்திரமொன்றே என்பதே ஆய்வாளர்களின் வாதமாகும். ஆவிகள் நடமாடும் இடம் என்பது ஒரு மரணவாசல் என்ற பரவலான கருத்தே நிலவிவருகிறது. இங்கிலாந்திலுள்ள பேர்லி, ஆராமஸ் போன்ற இடங்கள் அத்தகைய அபாயம் இருப்பதாகக் கருதப்படும் இடங்களே. ஆய்வாளர்களால் அங்குள்ள ஆவிகள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆவிகள் நடமாடுவதாகக் கருதப்பட்ட மாளிகையொன்றில் நவீன நுட்பங்கள் கொண்ட கமராக்கள் பொருத் தப்பட்டன. மைக்ரோ ஒலி வாங்கிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. மிக நுட்பமான ஒலியைக்கூட உள்வாங்கும் ஒலிப்பதிவுச் சாதனங்களும் இயக்கிக் கொண்டிருந்தன.

அந்தச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மாடிப்படிகளிலிருந்து ஒருவர் இறங்கி வரும் காலடி ஓசை துல்லியமாகக் கேட்டது. அதை உள்வாங்கிக்கொண்ட ஒலிப்பதிவுச் சாதனம் மிகச் சரியாக அது உள்வாங்கப்பட்டுள்ளதைத் தெரிவித்தது. நூற்றுக்கு நூறு வீதம் அது நபரொருவர் மாடிப்படிகளில் இருந்து இறங்கி வரும் ஓசையேதான் என்பதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர். அடுத்து சில நிமிடங்களில் அறைக் கதவு திறந்து கொண்டது. மாளிகையின் அனைத்து இடங்களிலும் மைக்ரோ ஒலி வாங்கிகள் பொருத்தப்பட்டமையால் சகல விதமான ஒலிகளும் பதிவாகின. அந்தச் செயற்பாடுகளை கணனித் திரை காட்டியது. அறைக்குள் இருந்த ஆசனமொன்றில் ஒருவர் அமர்வதும் அடுத்து பத்திரிகைகள், புத்தகங்களை அங்குமிங்கும் நகர்த்தும் ஓசை கேட்டது. அடுத்து சில கணங்களில் அந்த ஆவி விக்கி விக்கி அழும் ஓசை கேட்டது. நிச்சயமாக அந்த அழுகைக்குரல் மத்திய வயதுடைய ஒரு பெண்ணினுடையதே என்பது நன்றாகவே புரிந்தது.

சுமார் எட்டு வினாடிகள் வரையில் அந்த ஆவியின் அழுகை தொடர்ந்தது. அந்த ஆவி அடுத்து என்ன செய்யப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் இருந்தவேளை, அது திடீரெனக் காணாமல் போனது. இந்த அனைத்து ஒலிகளையும் ஆய்வாளர்கள் மிகத் தெளிவாக செவிமடுத்திருந்தனர் என்றாலும் ஆவி மாய மாக மறைந்ததும் சகல விதமான ஒலிகளும் இணைந்த ஒலி யொன்றாக உடனே மாற்றமடைந்தது. ஆய்வாளர்கள் திக்குமுக்காடிப் போயினர். ஆவிக்கு விஞ்ஞானத் தொழில் நுட்பத்தையும் அழித்துவிடுமளவிற்கு ஆற்றல் இருப்பது கண்டு அவர்கள் திகைத்துப்போயினர்.

இந்த ஆவிகளுக்கு மனிதச் சரீரசங்களுக்குள் ஊடுருவும் ஆற்றல் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அத்தகைய சில ஆய்வுகள் பயன்பட்டன. ''அமெரிக்காவின் தெற்குக் கடற்கரையில் பசுபிக் கடலையண்டி இருந்த மலை உச்சியில் நிறுவப்பட்டிருந்த சத்துரா கலங்கரை விளக்குப் பகுதி ஆவிகள் நடமாடும் இடமொன்றாகப் பிரசித்த மடைந்திருந்தது. அது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள ஆய்வாளர்கள் அங்கு சென்றிருந்தனர். அங்கு உலாவும் ஆவிகள் தம்மை எதிர்கொள்ளும் - அங்கு பணியாற்றும் ஊழியர்களின் உடலில் ஊடுருவிச் செல்வதை அறிய முடிந்தது. இத்தகைய அனுபமொன்றுக்கு உட்பட்ட ஊழியரொருவர் அதுபற்றி விளக்கமளிக்கையில், தம்மை எதிர்கொண்ட ஆவியொன்று தமது சரீரத்தை ஊடுருவிச் செல்வதைத் தாம் உணர்ந்தாகவும் அச்சந்தர்ப்பத்தில் தமது உடல் குளிர்வடைந்து உடலில் மின்சாரம் போன்ற சக்தியொன்று ஊடறுத்துச் சென்றதை உணர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது விசேட ஆற்றல் கொண்ட கதிர் வீச்சுப் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் ஆவிகள் அக் கதிர்வீச்சுக்கு அகப்படாதது பெரும் திகைப்பை ஏற்படுத்தியது. இவ் அனுபவமானது ஆவிகளுக்கு ஆச்சரியப்படத்தக்க அதீதமான ஆற்றலொன்று இருப்பதை உணர்தியது.

இத்தாலியிலுள்ள பழைமை வாய்ந்த மாளிகையொன்றினுள் ஆவிகள் நடமாடுவதாகக் கதைகள் பல உலாவின. வருடத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் பெண் ஒருத்தியின் ஆவியுருவைக் காண முடியும் என்பது அங்கு பணிபுரியும் ஊழியர்களது நம்பிக்கையாக இருந்தது. அம்மாளிகையில் இடம் பெற்ற திருமண வைபமொன்றின் போது எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் பின் வரிசையில் ஒரு பெண்ணின் உருவம் ஆய்வாளர்களைக் கவர்ந்தது. அதைக் கண்ணுற்ற அவர்களது மனங்களில் புதிய அணுகு முறையொன்று உதயமானது, ஆய்வாளர்கள், குறிப்பிட்ட தினத்தில் அம்மாளிகையில் பல கமராக்களைப் பொருத்தி அவற்றை இயங்கச் செய்தனர். ஆச்சரியப்படும் விதமாக இரு புகைப்படங்களில் புகையுருவம் போன்ற உருவமொன்று பதிவாகியிருந்தது. அதன் ஒரு கரத்தில் பூக்கொத்து ஒன்று இருப்பது போல் காணப்பட்டது. புகைப்படம் எடுக்கப்டும் போது ஏற்பட்ட கைத்தவறு காரணமாக பூங் கொத்து போன்றதொரு உரு பதிவாகியிருப்பதாகக் கருதப்பட்டாலும் கூட அப்புகைப்படங்களில் ஆவியின் உண்மையான உருவம் பதிவாகியிருந்தது. இவ்வாறான சோதனை ஆய்வுகள் உலகம் பூராவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்கள் மூலம் ஆவிகளும், அவதாரங்களும் உண்மைதான் என நிரூபிக்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை.(ஆதாரம்-டிஸ்கவரி)

ஆவிகள் நடமாட்டம் பற்றிக் கூறப்படும் கதைகள் இந்நாட்டிலும் உள்ளன. அத்துருகிரிய பகுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தை கீழே தருகிறோம்.

உண்மையில் ஆவிகள் நடமாடுகின்றன என்பதற்கு ஆதாரமாக ஸ்ரீலங்காவின் தென் பகுதியில் அறுபதுகளில் இடம் பெற்றுள்ள உண்மைச் சம்பவமொன்று இங்கு தரப்படுகிறது. தென்பகுதியில் பிரபலமான ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம் அவரது நடையிலேயே இங்கு தரப்பட்டுள்ளது.

# உண்மைதானா?

அத்துருகிரிய முன்னேற்றமடைந்துள்ள நகரென்றாலும் கிராமமொன்றிற்கு உரிய இயற்கை எழிலுக்குக் குறைவில்லை. எமது பெரிய வீடும் அங்குதான் உள்ளது. பெரும் றப்பர் தோட்டங்கள், வயல்வெளிகள், நீரோடைகளையும் எமது கிராமம் கொண்டிருந்தது அவற்றை ஊடறுத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதை யொன்றும் இருந்தது. பொழுது சாய்ந்த பின்னர் எவரும் இப் பாதை யூடாகச் செல்வதில்லை. நகரிலிருந்து சுமார் மூன்று மைல்களுக்கு அப்பால் தான் எமது கிராமம் இருந்தது. பாடசாலை நாள்களிலிருந்தே இப்பாதை எனக்குப் பழக்கப்பட்டு விட்டதால். அப்பாதையூடாகச் சென்று வருவதற்கு நான் தயங்கியதே இல்லை.

அறுபதுகளின் நடுக்கூறில், நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தேன். அடிக்கடி வீட்டுக்குச் செல்ல என்னால் முடிந்ததில்லை. இரண்டு மூன்று கிழமைகளுக்கு ஒரு தடவையோ, மாதமொரு தடவையே ா சென்றாலும் கூட கிராமப் புதினங்கள் எனக்கு எட்டுவதில்லை. அவை முக்கியமல்ல எனக் கருதி வீட்டாரும் புதினங்ளை எனக்குச் சொல்வதில்லை.

அன்று, இரண்டாம் ஆண்டுப் பரீட்சை முடிந்து வீடு செல்லும் தினமாகும். பேராதனையிலிருந்து பஸ்ஸைப் பிடிக்கத் தாமதமாகிவிட்டது. அக்காலகட்டத்தில் கொழும்பிலிருந்து அத்துருகிரியவுக்கு இரு பஸ் சேவைகளே இருந்தன. கடைசி பஸ் இரவு ஒன்பது மணிக்கு அத்துருகிரியவுக்குப் புறப்படும். எவ்வாறோ அந்தக் கடைசி பஸ்ஸைப் பிடித்து விட்டேன். நான் எனது இடத்தில் இறங்கும் போது பஸ்வண்டியில் இருவர் மாத்திரமே எஞ்சியிருந்தனர். அச்சமூட்டும் இருட்டு, லேசான மழைத்தூறலும் இருந்தது. விஷ ஜந்துக்களைப்பற்றி எண்ணியதும் ஒற்றையடிப் பாதையில் செல்லப்பயமாக இருந்தது. பிரதான வீதிக்குச் சிறிது அப்பால் பொட்னா மாமியின் வீடு இருப்பது நினைவுக்கு வந்தது. அங்கு சென்று கதவைத் தட்டி சிரட்டையொன்றையும் மெழுகு திரித் துண்டொன்றையும் பெற்று, சிரட்டைக்குள் அதைப் பொருத்தி கொழுத்திக் கொண்டேன். ஓரளவுக்குப் பாதை புலப்பட்டது. மண்பாதையொன்று இருந்த போதும், எனக்குப் பழக்கப்பட்ட ஒற்றையடிப்பாதை வழியாகவே பயணித்தேன். றப்பர் தோட்டத் துக்குள் வந்து விட்டேன். தோட்டத்தின் நடுப்பகுதியில் வரும் போது யாரோ என்னை நோக்கி வருவது போல் தெரிந்தது. ஆனால் அவர் நடந்து வருவதாகத் தோன்றவில்லை நகர்ந்து வருவது போன்றே இருந்தது. றப்பர் சருகுகள் நொருங்கும் ஓசை கூடக் கேட்கவில்லை நான் அப்படியே நின்று விட்டேன்.

யார் அது.... ? என வினாவினேன்; ஆனால் பதில் வரவில்லை. மெழுகு திரி வெளிச்சத்தை சிறிது மேலே உயர்த்தி உற்று நோக்கினேன். அவர் வேறு யாருமல்ல கிராமத்தில் வசிக்கும் சிமியோன் மாமாவே தான்! அவர் மரமேறும் தொழிலைப் புரிந்து வந்தார். எப்போதும் தோளில் மடித்துப் போட்ட சாக்கொன்றோடுதான் அவரைக் காணமுடியும். அப்போது மழை தூறிக் கொண்டிருந்தமையால், சாக்கை முக்கோணமாக்கித் தலையில் இருந்து உடல்வரை போட்டுக் கொண்டிருந்தார். வாயில் சுருட்டு ஒன்று காணப்பட்டது. ஆனால் புகைக்கவில்லை.

- அடக்கடவுளே! என்னைப் பயமுறுத்துகிறீரா? என்ன இது? சுருட்டு நூர்ந்து போய் விட்டதா? எனது வினாக்களுக்குப் பதில் வரவில்லை. தலை மாத்திரம் அசைந்தது சுருட்டைப் பற்றவைக்குமாறு மெழுகுதிரியை நீட்டினேன். ஆனால் சுருட்டைப் பற்ற வைக்க அவர் பெரு முயற்சி செய்த போதும், அது சாத்தியப்படவில்லை. எதுவுமே கூறாது நடையைக் கட்டினார்.

இவருக்கு என்ன நடந்தது விசர் பிடித்து விட்டதா? என்று எனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டேன். அவர் கடந்து சென்றதும் புதுமையென்று நிகழ்ந்தது. மெழுகு திரி பிரகாசமாக் எரிந்தது. ஆனால் ஒளி பாதையில் விழுவதாகத் தெரியவில்லை... இதென்னடா புதுத் தொல்லை... என்பதற்குள் சுழன்றடித்த காற்று மெழுகுதிரியை அணைத்து விட்டது. சிரட்டையோடு மெழுகு திரியை எறிந்து விட்டு தட்டுத் தடுமாறி ஒருவாறு வீட்டுக்கு வந்தேன். அப்போது நேரம் இரவு பன்னிரண்டு மணி வரையில் இருக்கலாம்.

அம்மா, விளக்கைக் கொழுத்தி வைத்து விட்டு விறாந்தையில் எனக்காகக் காத்திருந்தார். நான் வீட்டுக்குள் நுளையும் போது அம்மா எனது முகத்தை மிக உன்னிப்பாகப் பார்த்தார்.

நான் அம்மாவை விழித்து! அம்மா! நான் வரும் போது றப்பர் தோட்டத்தில் எமது சிமியோன் மாமாவைச் சந்தித் தேன். அவருக்குப் பேய் பிடித்துள்ளதோ தெரியாது, நூர்ந்து போன சுருட்டை வாயில் வைத்தபடி இந்த சாமத்தில் உலாவுகிறார். மேலும் நான் கதைத்த போது அவர் கதைக்கவே இல்லை. எனது மெழுகு திரியால் சுருட்டைப் பற்ற வைக்க முயன்றும் இயலாது போனதால், அப்படியே போய்விட்டார். - என்றேன்.

நான் கூறிக் கொண்டேயிருந்தேன். அம்மா திகைத்துப்போய் சிலையைப் போன்று நின்றிருந்தார். பின்னர் ஒருவாறு அந்த விசரனின் கதையை விடு, கைகால் அலம்பிக் கொண்டு, கொஞ்சந் தண்ணீர் குடித்துவிட்டுப் போய்ப்படு! நீ வரமாட்டாய் என எண்ணி சோற்றை நாய்க்கு வைத்துவிட்டேன் என்று அம்மா கூறிய போதும், எனது மூத்த சகோதரனையும் எழுப்பி, நான் கைகால் அலம்பும் வரை எனது பக்கத்திலேயே அம்மா நின்றிருந்தார். அடுத்த நாள் எனக்கு நல்ல காய்ச்சல் கண்டிருந்தது. பன்சாலையிலிருந்து வந்த பௌத்த குருமார் ஏதேதோ ஓதினர். எனது கையில் மந்திர நூல் ஒன்றும் கட்டப்பட்டது. இதென்ன கூத்து? காய்ச்சலுக்கு மருந்து வாங்கித் தராமல் என்னன்னவோ செய்கிறார்கள் என்று எண்ணிய போதும், மருந்து குடிக்கும் விருப்பமற்ற நான் மௌனமாக இருந்து விட்டேன்.

இரண்டு தினங்கள் கழித்தே கட்டிலிருந்து எழுந்தேன். அம்மாவின் நடவடிக்கைகள் புதுமையாக இருந்தன. என்னை வீட்டிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கவே இல்லை. நண்பர்களைக் கூட சந்திக்க முடியவில்லை. அம்மாவின் கண்களில் படாதவாறு வீட்டின் பின்புறமாக வெளியேறி, றப்பர் தோட்டத்துக்குள் சென்றேன். அங்கு சிறிபால மாமாவைச் சந்தித்தேன். அவரோடு உரையாடியவாறு மண் பாதையில் சென்ற போது மயானத்திற்குச் செல்லும் பாதை குருத்தோலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். அவற்றைப் பார்த்ததும் அண்மையில் தான் யாரோ இறந்திருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டேன்.

இது என்ன? சிறிபால மாமா! அண்மையில் யாராவது இறந்து போனார்களா? என்று வினாவினேன் அவர் ஆமென்று தலையை ஆட்டியவாறு கிராமத்தில் நடப்பது உங்களுக்குத் தெரியவராது தானே, நாங்கள் இறந்து போனாலும் கூட அப்படித்தான் என்றார். அதைக் கேட்டதும் வீட்டார் மீது தான் எனக்குக் கோபம் வந்தது. நான் வீட்டுக்கு வந்து இரண்டு தினங்களாகியும் யாரும் எதுவுமே சொல்லவில்லை. நான் திரும்பவும் யார் இறந்தது என்று சிறிபால மாமாவிடம் வினாவினேன். அந்தக் கிழவன் சிமியோன் தான் இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன்னர் இறந்து போனார் பாவம்; .... தென்னை மரத்திலிருந்து விழுந்ததும் உடனேயே உயிர் பிரிந்து விட்டது -என்றார் சிறிபால மாமா!

நான் கல்லாய்ச் சமைந்துபோனேன். என்ன? சிமியோன் மாமாவா? என்னை அறியாது கத்திவிட்டேன் எனது மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. வியர்வையால் நனைந்து போனேன். றப்பர் தோட்டத்தில் நடு இரவில் அன்று சுருட்டுப்பற்றவைக்க முயன்று எதுவும் கூறாது போன சிமியோன் மாமா இப்போதும் என் முன்னால் நிற்பது போன்றதொரு பிரமை! சிறிபால மாமாவின் குரல் என்னை விழிக்கச் செய்தது ''உலகில் புரிந்து கொள்ள இயலாத செயல்கள் நிறைய உள்ளன''என்றார் சிறிபால மாமா. அப்போதுதான் எனது தயாரின் நடவடிக்கைகளின் அர்த்தம் எனக்குப் புரியஆரம்பித்தது. *

தமிழில்: சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org